08th
JULY
2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 113 | பக்கங்கள் - 21 | editor.uthayam@gmail.com


## கல்முனை மாநகர தேர்தலின் பின்பே சுழற்சி முறை எம்.பி. நியமனம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுழற்சி அடிப்படையில் பாராளுமன்றத்துக்கு நியமிக்கும் ஏற்பாட்டின் கீழ் அதன் நியமனக் கால எல்லை

03ம் பக்கம்பார்க்க...

# குர்ஆன் பிரதிகள் விடுவிப்பு விரைவில் நல்ல முடிவு



## பிரதியமைச்சர் முனீர் முழப்பர் சபையில் அறிவிப்பு

சுங்கத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குர்ஆன் பிரதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. விரைவில் சாதகமான நல்ல முடிவு கிடைக்குமென முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் முனீர் முழப்பர் நேற்று (07) செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீன் விடுத்த வேண்டுகோள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தக மீளாய்வு குழுவினர் அவர்களது கருத்தினைத்

02ம் பக்கம்பார்க்க...

## இலங்கையின் அபிவிருத்திக்காக சவூதியால் வழங்கப்பட்ட நிரந்தரப் பங்களிப்பு - சப்ரகமுவ பல்கலை நிகழ்வில் பிரதமர் ஹரிணி -

05ம் பக்கம்பார்க்க...

## குர்ஆன் பிரதிகளை விடுவித்து இஸ்லாமிய புத்தகங்கள் மீதான தடையை நீக்கவும்

### றிஷாத் பதியுதீன் அரசிடம் வேண்டுகோள்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சுங்கத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குர்ஆன் பிரதிகளை விடுவித்து இஸ்லாமியப் புத்தகங்கள் மீதான தடைகளையும் நீக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீன் நேற்று (07) செவ்வாய்க்கிழமை

02ம் பக்கம்பார்க்க...

## வெலிகட சிறைச்சாலை தொழுகை அறை திடீரென மூடல்



### உடன் திறக்க நடவடிக்கை எடுங்கள் சபையில் ஹக்கீம் ஆவேசம்

வெலிகட சிறைச்சாலையில் ஐவேளை தொழுகை அறை திடீரென மூடப்பட்டுள்ளது.உடன் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீம் நீதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் இன்று

02ம் பக்கம்பார்க்க...

## நீர்கொழும்பு சிறைச்சாலை அசம்பாவிதம் விரிவான விசாரணைக்காக குழு நியமனம்



நீர்கொழும்பு சிறைச்சாலையில் கடந்த 05 மற்றும் 06 திகதிகளில் ஏற்பட்ட அமைதியின்மை மற்றும் அதற்கான

02ம் பக்கம்பார்க்க...



## சிறைச்சாலைப் பாதுகாப்பினை முடக்கவே மோதலைத் தோற்றுவித்தனர்

### நீதியமைச்சர் ஹர்ஷன சபையில் அறிக்கை

நீர்கொழும்பு சிறைச்சாலையில்

03ம் பக்கம்பார்க்க...

## டெங்கு தீவிரமடைவதால் அடுத்து வரும் வாரங்களில் அவதானமாக இருக்கவும்

### சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வேண்டுகோள்



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

டெங்கு ஒழிப்புக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். தற்போது டெங்கு நுளம்புகளால் டெங்கு காய்ச்சலால் பல ஆயிரக்கணக்கான மக்கள்

03ம் பக்கம்பார்க்க...

## சிறைச்சாலைக்கே பாதுகாப்பு வழங்க முடியாத அரசு எவ்வாறு தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும்

### -சஜித் பிரேமதாச சபையில் கேள்வி-



சிறையில் அடைக்கப்பட்டுள்ள நபர்கள் விளக்கமறியலில் இருந்தாலும் அல்லது கைதிகளாக இருந்தாலும், அவர்கள் அனைவரும்

03ம் பக்கம்பார்க்க...

## அமெரிக்கத் தாக்குதல்களுக்கு முழு அளவில் பதிலடி

### ஈரான் புரட்சிகர படையினர் அறிவிப்பு

(எஸ்.எல்.எம். பிர்தௌஸ்)

அமெரிக்கா ஈரான் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வருகின்றது ,ஈரானின் மீதான அமெரிக்க தாக்குதலுக்கு முழு அளவில் பதிலடி கொடுக்க ஈரான் முடிவு செய்துள்ளது.

ஈரான் அமெரிக்க யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்கணவே

03ம் பக்கம்பார்க்க...

## மீளாய்வுக் குழு அனுமதி வழங்கியும் குர்ஆன் விடுவிப்பில் தாமதம் ஏன்?

### பாராளுமன்றில் ஹிஸ்புல்லா எம்.பீ. கேள்வி!



சுங்க திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புனித அல் குர்ஆன் பிரதிகளை

03ம் பக்கம்பார்க்க...




## நீர்கொழும்பு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

காரணங்கள் குறித்து விரிவான விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் இன்று (07) பிற்பகல் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோவின் தலைமையிலான இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி மிலிந்த குணதிலக்க, ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இந்த விசாரணைக்குழுவின் செயலாளர்ஃஅழைப்பாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே.எல்.டீ அசேல நியமிக்கப்பட்டுள்ளார்.

## வெலிகட...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீம் அதிகாரிகள் சொல்வதை நம்பி உடனடித் தீர்மானங்களுக்கு வர வேண்டாம்.அதனை சுயமாக விசாரியுங்கள்.தேடிப் பாருங்கள்.

வெலிகட சிறைச்சாலை தொழுகை அறையில் தினமும் 30,40 பேர் அளவில் ஐவேளை தொழுகிறார்கள்.இப்போதிருக்கும் நிலையில் மார்க்க கடமைகளுக்கு தடை விதிப்பது நல்லதா.இது குறித்து தேடிப் பாருங்கள்.

இச் சிறைச்சாலையில் பௌத்த, கிறிஸ்தவ சமய அனுஷ்டானங்களுக்கான இடங்கள் இருக்கின்றன.கீழ் மாடியில் முஸ்லிம்களுக்கு தொழுகை அறை இருந்தது. அதைத் தான் இப்போது மூடியிருக்கிறார்கள்.எனவே இத் தொழகை அறையைத் திறக்க நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு தான் மஹரைச் சிறைச்சாலை பள்ளியையும் மூடினார்கள்.அதிகாரிகளின் பொய்த் தகவல்களை நம்பி இவ்வாறு செய்தார்கள் 100 வருடப் பழைமை வாய்ந்த மஹரைப் பள்ளியை மூடினார்கள்.இன்று வரை திறக்கப்படவில்லை என்றும் றவூப் ஹக்கீம் ஆவேஷமாக கருத்து வெளியிட்டார்.

## குர்ஆன் பிரதிகளை..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தக மீளாய்வு குழு சம்பந்தமான அந்த கொமிட்டியின் பரிந்துரை இல்லாமையின் காரணமாக ஒரு வருடங்களுக்கு மேலாக பல்லாயிரக் கணக்கான குர்ஆன் பிரதிகள் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இராஜாங்க அமைச்சரும் இந்த விடயங்களை தெளிவாகத் அறிந்தவர். தற்போது அதற்கான அனுமதியை புத்தக மீளாய்வு குழுவும் வழங்கி இருக்கிறார்கள்.

அதற்குப் பொறுப்பான அமைச்சரும் இங்கே இருக்கின்றார். குறிப்பாக இனவாதம் இல்லாத ஒரு நிலைப்பாட்டை இந்த அரசாங்கத்திடமிருந்து நாங்கள் எதிர்பார்த்து வருகிறோம். அவ்வாறானதொரு நிலைதான் இருந்து வருகிறது. எனவே, அது உண்மைப் படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் தயவு செய்து அந்த குர்ஆன் பிரதிகளை அவசரமாக விடுவிக்கின்ற விடயத்தை அரசாங்கம் செய்ய வேண்டும்.

அதேபோல அமைச்சர் அவர்களே, சுங்கத்திலே, பாதுகாப்பிலே இஸ்லாமியப் புத்தகங்கள் வருவதற்கு தடை விதிக்கின்ற ஓர் ஏற்பாடும் இருந்து வருகிறது. அதை புத்தக மீளாய்வு குழுவுக்கு அனுப்பி எடுக்கின்றார்கள். இவை எல்லாம் யாருடைய காலத்தில் இருந்த சட்டம் என்றால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்பவருடைய காலத்தில் வந்த சட்டங்கள். இந்த நாடு சுதந்திரமடைந்ததுக்கு பிறகு இருந்து வந்த சட்டங்களல்ல.

கோட்டாபய ராஜபக்ஷ என்ற கொடுமையான ஆட்சியாளன் இந்த நாட்டிலே ஜனாதிபதியாக வந்து, அந்த இரண்டு வருட காலப்பகுதியிலே ஞானசாரதேரர் போன்ற இனவாத மதகுருமார்களுடைய வாளாக அவர் செயற்பட்டதன் விளைவுதான் இவ்வாறான புதிய புதிய சட்டங்களை உருவாக்கினார்கள். இதனால் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கட்டார், சவூதி அரேபியா போன்ற அறபு நாடுகளில் இருந்து வருகின்ற பிரயாணி ஒருவர் ஓர் அறபு புத்தகத்தை இந்த நாட்டுக்கு கொண்டு வருகின்ற போது சுங்கத்தினால் அங்கு இருக்கின்ற சுற்றுநிருபத்தின்படி பறித்தெடுக்க முடியும். நாங்கள் புத்தக மீளாய்வு குழுவுக்கு அனுப்பி விட்டுத் தருகிறோம் என்றால், அந்தப் புத்தகத்தை அவருக்கு வாசிக்க முடியாத நிலை அவருக்கு ஏற்படும். எனவே இது மிகவும் மோசமான செயற்பாடு. வேறு எந்த மதத்தவர்களுடைய புத்தகங்களுக்கும் இந்தக் கட்டுப்பாடு கிடையாது. இந்த நாட்டிலே இணையத்திலே, ஒன்லைனிலே வேண்டியதைப் பார்க்க முடியும்.

இந்த நாட்டிலுள்ளவர்களுக்கு அதற்கு அனுமதி இருக்கின்றது. இந்த நாட்டிலுள்ள சுற்றுநிரூபம் பற்றி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் நான் பலமுறை விவாதித்த போது அவர்கள் அதனைச் செய்யவில்லை. கொடுமையாள கள். ஆனால், நீங்கள் அவ்வாறானவர்கள் அல்லர். உடனடியாக அதை நீக்குங்கள். அதேபோல் இந்தக் குர்ஆன் பிரதிகளை அவசரமாக விடிவியுங்கள். இந்த நாட்டிலே வாழுகின்ற ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் அதனை எதிர்பார்த்து நிற்கின்றது என்பதை இந்த சபையிலே சொல்லி வைக்க விரும்புகின்றேன் என்றும் தெரிவித்தார்.

## குர்ஆன்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தெரிவித்து எமக்கு கடிதம் அனுப்பியுள்ளார் கள். குறித்த கடிதத்தை பாதுகாப்புத் தரப்பினருக்கு நாங்கள் அனுப்பி இருக்கின்றோம். இது சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற்று இருக்கின்றது. நான் நினைக்கிறேன் நல்லதொரு முடிவு கிட்டும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

எனவே, அது சம்பந்தமான விடயங்களை எமது பணிப்பாளர் மேற்கொண்டு வருகின்றார் என்று சபைக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

# அமைதியைக் குலைக்கும் நாடுகளை நிம்மதியாக இருக்க விட மாட்டோம்

**ஈரானிய அதிகாரிகள் தெரிவித்ததாக நாடு திரும்பிய றவூப் ஹக்கீம் கருத்து**

“ஈரான் இஸ்லாமியக் குடியரசு சமாதானமாக வாழ்வதை விரும்புகின்ற தேசம். ஈரானிலும் பிராந்தியத்திலும் அமைதி நிலவுவதையே நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் எங்களது அமைதியை குழைப்பதற்கு எந்த நாடுகளாவது தொடர்ந்தும் ஒத்துழைக்குமானால் அவர்களை நாங்கள் நிம்மதியாக இருக்க விடமாட்டோம்” – என்று ஈரானின் உயர்மட்ட தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அந் நாட்டின் அழைப்பையேற்று, மூர்க்கத்தனமான தாக்குதலில் ஷஹீதான உச்சத் தலைவர் ஆயத்துல்லாஹ் அலி கமேனியின் இறுதி கடமைகளில் கலந்து கொண்ட பின்னர் நாடு திரும்பியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் “உதயம்” செய்தியாளரிடம் கூறினார்.

நாடு திரும்பியதன் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் செவ்வாய்க்கிழமை(7) பாராளுமன்றத்திற்கு வந்திருந்தார். அங்கு அவரைச் சந்தித்த “உதயம்“ செய்தியாளரிடம் மேலும் தெரிவித்ததாவது,

இந்த ஈரானிய விஜயம் எங்களைப் பொறுத்தவரையில் மிகவும் மிகவும் உணர்வு பூர்வமாக அமைந்திருந்தது பல்வேறு நாடுகளில் இருந்தும் அரச பிரதிநிதிகளும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பெருமளவில் இந்த இறுதி கடமை நிகழ்விற்கு வந்தி ருந்தனர்.

இதன் போது ஈரானிய மக்களுடைய ஈமானிய பலத்தின் வலிமையை நாங்கள் கண்ணூடாகக் கண்டோம்.

தங்களது ஆன்மிக தலைவர் குடும்ப சகிதம் படுகொலை செய்யப்பட்ட வன்மத்தை அவர்களது கோஷம் உணர்வுபூர்வமாகப் பிரதிபலித்தது.

மத்திய கிழக்கில் மிகவும் முன்னேறிய நாடுகள் ஒன்றாக மதிக்கப்படும் எழில் மிகு,வளம் கொழிக்கும் ஈரான் நாட்டை இல்லாது ஒழிக்கப் போவதாக சூளுரைப்பது அங்குள்ள முஸ்லிம்களின் மனங்களை மிகவும் வேதனைப்படுத்துகின்றது என்பதை அவர்களது பேச்சுக்களிருந்து நன்றாக உணர முடிந்தது.

ஈரான் மக்கள் இன்னுயிர்களை இழந்த அதிர்ச்சி லிருந்து இன்னும் மீளாதபோதிலும், தங்கள் தாய்நாட்டை எதிரிகளிமிருந்து காப்பாற்றிக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் .

நாங்கள் தெஹ்ரான் இமாம் கொமெய்னி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கியதும் எங்களுக்கு விமான நிலையத்திலேயே சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு, செங்கம்பளம் பிரிக்கப்பட்டு அரச மரியாதையுடன் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டோம்.

அதன் போது ஈரானிய உயர் அதிகாரி ஒருவரும், அண்மையில் இலங்கை தூதுவராக ஈரானில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள பேராசிரியர் எம் .ஐ.பஸீஹா அஸ்மியும் எங்களை வரவேற்று அழைத்துச் சென்றனர் அங்கு ஏனைய நாடுகளிலிருந்து வந்தவர்களைப் போன்றே நாங்களும் ஜனாஸா வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அணி அணியாகச் சென்று எங்களது இறுதி மரியாதை செலுத்திய பின்னர் அங்கிருந்த நினைவுக் குறிப்பேட்டிலும் கையொப்பமிட்டோம்.

அரசியல் முக்கியஸ்தர்களோடு கருத்துக்களைப் பரிமாறக்கூடிய வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.அப்பொழுது பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். இலங்கை மக்களின் சார்பில் ஈரான் உச்ச தலைவரினதும்

அவருடைய குடும்பத்தினரினதும், அந் நாட்டு படையினரினதும், பொதுமக்களினதும் இழப்புகளை பற்றி அனுதாபத்தை நாங்கள் அவர்களிடம் வெளிப்படுத்தினோம் – என்றார்.

படுகொலை செய்யப்பட ஈரானின் உச்ச தலைவர் ஷஹீத் ஆயத்துல்லாஹ் அலி கமேனி அவர்களின் இறுதி நிகழ்வுகள் வியாழக்கிழமை (9) வரை அங்கு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில் இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் அங்கு திரண்டு இருப்பதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.



## சிறைச்சாலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் ஏற்பட்ட பாரிய மோதலானது, சிறைச்சாலை நிர்வாகத்திற்கு எதிராக ஏற்பட்டது அல்லவென்றும், அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் இரு பாதாள உலகக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

இந்த மோதல் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விரிவான அறிக்கையொன்றை அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார்.

அமைச்சர் சுட்டிக்காட்டியதன் படி, இந்த மோதலானது முதன்முதலில் கடந்த ஜூலை மாதம் 05ஆம் திகதி முற்பகல் 11:00 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே ஆரம்பமாகியுள்ளது. அந்த சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இரு கைதிகள் உயிரிழந்ததுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர். அன்றைய தினம் மாலை வேளையில் நிலைமையைக் கட்டுப்படுத்தி கைதிகளை அமைதிப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்த போதிலும், மறுநாள் (06) காலை உணவு வழங்கும் சந்தர்ப்பத்தில் மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த மோதலானது வெறுமனே உணர்ச்சிவசப்பட்டு ஏற்பட்டதொன்றல்ல, சிறைச்சாலையின் பாதுகாப்பு கட்டமைப்பை முடக்கும் நோக்கில் திட்டமிட்டு செய்யப்பட்டதொன்று என அமைச்சர் வலியுறுத்தினார்.

## சிறைச்சாலைக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் பொறுப்பிலேயே உள்ளனர்.

எனவே, இந்த கைதிகள் மற்றும் தடுப்புக்காவலில் உள்ளவர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பான முழுப் பொறுப்பு அரசாங்கத்துக்கே உரியது என தற்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த சமயம் பிரஸ்தாபித்திருந்தார். அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலில் 26 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் பணிகளில் சிறைச்சாலை மறுசீரமைப்பு, சிறைச்சாலைகளின் நெரிசலைக் குறைத்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் என்பன அடங்குகின்றன. அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் அடிப்படை உரிமைகளின் பிரகாரம், எந்தவொரு நபரையும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது அவமதிப்பான நடாத்துகைக்கோ அல்லது தண்டனைக்கோ ஆளாக்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த கால அரசாங்கங்களின் ஆட்சிக் காலங்களிலும் சிறைச்சாலைத் துறையை மையமாகக் கொண்டு பல சோகமான நிலைமைகள் ஏற்பட்டன. இதன் காரணமாகவே "76 வருட முறைமையை மாற்றியமைத்து, வளமான நாடொன்றையும் அழகான வாழ்க்கையையும் உருவாக்குவோம்" எனக் கூறி சிறைச்சாலைத் துறையில் பல மாற்றங்களைச் செய்யப் போவதாக தற்போதைய அரசாங்கம் தனது கொள்கை கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றது. அவ்வாறு 76 வருட சாபத்தை ஒழித்து புதிய முறைமையொன்றைக் கொண்டு வந்துள்ளதாகக் கூறினாலும், நீர்கொழும்பில் நடந்த சம்பவத்தின் மூலம் இந்த முறைமையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இன்று (07) பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

சிறைச்சாலைத் துறையில் சவால்கள் காணப்படுகின்றன. 10,000 பேருக்கு இடமிருந்தாலும் சுமார் 40,000 பேர் வரை அங்கு இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. நாட்டில் பல சிறைச்சாலைகள் காணப்பட்டாலும் இவற்றின் பிரச்சினைகள் குறித்து நீதி அமைச்சர் ஆராய்ந்தாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த அழுத்தம் குறித்து குறைந்தபட்சம் ஆராய்ந்து, அபாய மதிப்பீடொன்று (சுளைம யுளளநளளஅநவெ) செய்யப்பட்டதா என்ற கேள்வியும் எழுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

- மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலை சம்பவங்களில் இருந்துகூட இந்த அரசாங்கம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

வெலிக்கடை மற்றும் மஹர சிறைச்சாலை சம்பவங்களில் இருந்து அரசாங்கம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. இதுவரை நிரந்தர சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமிக்க முடியாமல் போயுள்ளது. குறைந்தபட்சம் நீதி அமைச்சரால் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கூட சரியாகக் கூற முடியாமல் போனது ஆச்சரியமளிக்கிறது. இச்சம்பவம் நடந்த பின்னர் ஆரம்ப அறிக்கை ஏதேனும் பெறப்பட்டதா என்பது சந்தேகமே என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

- இந்த சம்பவத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

"வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற கொள்கைப் பிரகடனத்தில் மனிதத்துவ அடிப்படையிலான சிறைச்சாலை மற்றும் நீதியான தடுப்பு வாழ்க்கை முறைமைக்கு முக்கிய முன்னுரிமை அளித்தல் குறித்து கூறப்பட்டிருந்தாலும், இன்று 27 பேரின் உயிர்கள் பறிபோய், நூற்றுக்கணக்கானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைதிகள் அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ளதால் அவர்களின் உயிர் பாதுகாப்புக்கு அரசாங்கமே பொறுப்பு என்று ஜனாதிபதி கூறும் கூற்றை நீதி அமைச்சர் ஏற்றுக்கொள்கிறாரா என நான் கேள்வி எழுப்புகிறேன். இந்தச் சம்பவத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. வாக்குறுதியளித்த "முறைமை மாற்றத்தை" (ளலளவநஅ ஊாயபெந) கூட செய்ய முடியாமல் போயுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- நீதி அமைச்சருக்கு இவற்றைத் தேடிப்பார்க்க நேரமில்லை, அவர் நீதிமன்றத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கவே முயற்சிக்கிறார்.

சிறைக்குள் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத இந்த அரசாங்கம், 220 இலட்சம் மக்களின் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்தும் என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பில் கேட்பதற்கு தனியாக ஒரு மேசை கொண்டு வர வேண்டுமா என்று அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறேன். தேசிய பாதுகாப்புக்கான முழுப் பொறுப்பையும் நாம் ஏற்போம் என இவர்கள் கூறினாலும் இன்று அதையும் செய்ய முடியாமல் போயுள்ளது. நீதி அமைச்சர் இந்நாட்களில் இவற்றைப் பற்றி ஆராய்வதை விட, உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கே முயற்சித்து வருகிறார். உயர் நீதிமன்றங்களில் நீதியரசர்களுக்கு பல வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றைப் பற்றி ஆராய்வதால் அமைச்சருக்குத் தனது பொறுப்பு கூட மறந்து போயுள்ளது. இனிமேலாவது "வளமான நாடு, அழகான வாழ்க்கை" கொள்கைப் பிரகடனத்தை வாசித்து அதனை நடைமுறைப்படுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

## கல்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானிய ஆன்மீக தலைமை முழு மனதுடன் ஆதரிக்க வில்லை ,ஆனால் நாட்டின் அரசியல் தலைமை எடுத்த முடிவை அரை மனதோடு ஏற்றுக் கொள்வதாகவே அதன் அறிக்கை அமைந்தும் இருந்து இந்த நிலையில் தற்போது அமெரிக்க இஸ்ரேல் தாக்குதலில் அன்று கொல்லப்பட்ட அதன் ஆன்மீக தலைவரின் மரண சடங்குகள் நடைபெறும் நிலையில் அங்கே இலட்சக்கணக்கில் அணிதிரண்ட ஈரானிய மக்கள் இந்த படுகொலைக்கு பழி தீர்க்க வேண்டும் என ஆக்ரோசமாக கோசமிட்டு ஆளும் அரசுக்கு எதிராகவும் கோசமிட்டும் இருந்தனர்.

இந்த நிலையில் இறுதி சடங்குகள் தற்போது நடைபெறும் ஈராக் நாட்டின் மக்களும் ஆன்மீக தலைவருக்கு ஆதரவாக கோசமிட்டு படுகொலைக்கு பழி வாங்குமாறு ஈரானிய ராணுவத்துக்கு அழுத்தமும் கொடுத்து வருகின்றனர்.

இந்த சூழ் நிலையிலேயே மீண்டும் புதிய மோதல்கள் உருவாகி அது தற்போது படு மோசமான கட்டத்தை அடைந்துள்ளது .இன்று காலை அமெரிக்கா ஈரான் மீது தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக உடனடியாக ஐசுபுஊ அமெரிக்க தளங்கள் உள்ள பஹ்றைன் மற்றும் குவைத் மீது பாரிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்

ஈரானிய மக்கள் தங்களது ஆன்மீக தலைவரின் இறுதி நிகழ்வை நடத்திக் கொண்டிருக்கும் நிலையில் ஈரான் மீதான அமெரிக்க தாக்குதல் ஈரானிய மக்களை மேலும் சினம் கொள்ள வைத்துள்ள தோடு ஐசுபுஊ தளபதிகளும் படையும் இது இறுதி யுத்தம் என கூறி மிக மோசமான முறையில் பதில் தாக்குதலை பல முனைகளில் நடத்தப் போவதாக சூளுரைத்தும் உள்ளனர். இன்றைய புதிய சூழலில் நடைபெறும் இந்த புதிய யுத்தம் பல முனைகளில் தொடரப் போகின்றது என்பதை தற்போதைய ஆரம்ப தாக்குதல்கள் தெளிவு படுத்தி வருகின்றன.

குவைத் மற்றும் பஹ்ரைன் நாடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதோடு தொடராக விமான மற்றும் ஏவுகணை எச்சரிக்கை ஒலிகள் இடைவிடாது ஒலித்து வருவதாக கூறப்படுகின்றது.

அதே வேளை இஸ்ரேலின் டெல் அவீவ் உள்ள இஸ்ரேலிய சர்வதேச விமான நிலையத்தின் பென் குயின் விமான நிலையத்தின் மீதும் பல ஏவுகணைகள் ஏவப்பட்டதான புதிய செய்திகளும் வருகின்றன.

## மீளாய்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பதற்கு மீளாய்வு குழுவின் உத்தியோகபூர்வமான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் தொடர்ந்தும் தாமதிக்காமல் அல்குர்ஆன் பிரதிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்ற தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

புனித அல்குர்ஆன் என்பது முஸ்லிம்களுக்கு சாதாரண ஒரு நூல் கிடையாது. அது எங்களின் வாழ்வியல் வழிகாட்டி, ஆன்மீக அடையாளம் மற்றும் அன்றாட வாழ்வின் அங்கமாகும். இந்நிலையில், புனித அல்குர்ஆன் பிரதிகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக சுங்கத்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, எங்களின் மதச் சுதந்திரம் மற்றும் ஆன்மீக உரிமை தொடர்பில் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் பல முறை இவ் உயரிய சபையில் நாம் உரையாற்றியதோடு எங்கால் முடிந்த பல முயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம்.

இதுவரை, மீளாய்வுக் குழுவின் அனுமதி கிடைத்தவுடன் விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்த மீளாய்வுக் குழுவும் உத்தியோகபூர்வ அனுமதியை வழங்கியுள்ளது. எனவே, இனியும் நிர்வாக அல்லது சுங்க நடைமுறைகளை காரணம் காட்டி இந்த குர்ஆன் பிரதிகளை தடுத்து வைப்பதற்கு எந்த நியாயமும் இல்லை.

ஆகவே, பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சு உடனடியாக தலையிட்டு, இந்த தாமதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, புனித அல்குர்ஆன் பிரதிகளை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அல்குர்ஆன் பிரதிகளுக்கு மீளாய்வுக் குழு தற்போது உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ள நிலையில், முஸ்லிம் கலாசார திணைக்களம் குறித்த கடிதத்தை அடிப்படையாக கொண்டு பாதுகாப்பு அமைச்சு மற்றும் புத்த சாசன அமைச்சுக்கு குர்ஆன் பிரதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதியுடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுதொடர்பில் சந்தித்து கலந்துரையாடிய போதும் மீளாய்வு குழுவின் அனுமதி கிடைக்காமல் இருப்பதாலே குர்ஆன் பிரதிகளை விடுவிக்க முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது மீளாய்வு குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதால், குர்ஆன் பிரதிகளை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை அமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு காய்ச்சலால் இதுவரை 39 பேர் மரணமாகியுள்ளதாக சுகாதார துறையின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் நலிந்த திஸ ாநாயக்க எதிர் வரும் வாரங்களில் மிகவும் அவதானமாக இருக்குமாறு மக்களைஸஅவர் கேட்டுக் கொள்கிறார்.

பொது மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு காரணமாகவும் உள்ளது.

குறிப்பாக மக்கள் தாம் பாவிக்கும் பொருட்களின் கழிவுப் பொருட்களை கண்ட கண்ட இடங்களில் வீசுவதாலும் அவற்றில் கழிவு நீர் அல்லது மழை நீர் தேங்குவதால் அவற்றில் டெங்கு நுளம்புகள் முட்டையிட்டு நெருங்குவதாக சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸாரும் தெரிவிக்கின்றனர்.

டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு காரணமாகவும் உடந்தையாகவும் இருப்பவர்கள் கொலைக் குற்றத்திற்கு உடந்தையானவர்களாக கருதப்படுவர் என தெரிவிக்கப்படுகின்றது.

டெங்கு நுளம்புகள் பரவ உடந்தையாக இருப்பவர்கள் மற்றும் அதற்கு ஏற்ற சூழ்நிலைகள் இருப்பின் 0117966366 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு பொதுமக்கள் தகவல்களை வழங்க முடியும்.

எனவே மரணத்தையும் ஆபத்தையும் ஏற்படுத்தும் டெங்கு நுளம்புகள் பரவுவதை தடுத்து கட்டுப்படுத்த அனைவரும் இன் மத வேறுபாடின்றி செயற்பட வேண்டும்.

மொறட்டுவை பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதால் அதனை இரண்டு வாரங்களுக்கு மூடியுள்ளதாக பல்கலைக் கழக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பாடசாலைகள், மதஸ்தளங்கள், அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களையும் நாளாந்தம் மக்கள் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் அரசாங்கம் தெரிவிப்பு.

எனவே உயிர் காக்கும் அரசின் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் திட்டத்திற்கு பொது மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கப்படுகிறது.

## கல்முனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்த போதும் கல்முனை மாநகர சபையின் தேர்தலுக்குப் பின்பே அந்த வெற்றிடங்களுக்குப் புதியவர்களை நியமிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

தேசியப் பட்டியல் மூலம் பொத்துவிலில் இருந்து எம்.எஸ். அப்துல் வாஸித் தற்போது எம். பியாக இருக்கின்றார். நியமிக்கப்பட்ட அவருடைய பதவிக்காலம் முடிவடைந்த போதும் கல்முனை மாநகர சபைத் தேர்தல் முடியும் வரை புதிதாக எவரையும் நியமிக்காதிருப்பதற்கு தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தேசியப் பட்டியல் வெற்றிடத்தை வடமாகாணத்துக்கு நியமிக்குமாறு கட்சிக்குப் பலத்த அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 JULY 08 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு சவூதியின் தாராளமான உதவிகள்

சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக சவூதி அரேபிய அரசாங்கத்தின் அபிவிருத்திக்கான சவூதி அரேபிய நிதி (ளுகுனு) வழங்கும் திட்டத்தின் கீழ் 1650 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட (50 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதி உதவி வழங்கப் பட்டிருக்கின்றது. அந்த உதவியின் கீழ் அபிவிருத்தி செய்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பீட தொகுதியின் அங்குரார்ப்பண நிகழ்வு 2026.07.04 ஆம் திகதி அப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய இராச்சியத்தின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் அதானி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த உதவித் திட்டத்தின் அடிப்படையில் சபரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட கட்டிடத் தொகுதி, விரிவுரை மண்டபம், நூல்நிலையம், விரிவுரையாளர்களுக்கான தங்குமிட வசதிகள், மாணவர்களுக்கான அறை வசதிகள், 1000 இருக்கைகளைக் கொண்ட கேட்போர் கூடம் உட்பட அங்கு முழுமையான மருத்துவ பீடத்தை நிர்மாணிப்பதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க ப்பட்டிருக்கின்றன. இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலதிகமாக நீடித்து வருகின்ற இருதரப்பு நல்லுறவின் மற்றுமோர் அம்சமாக இந்த உதவித்திட்டம் அமைகின்றது. ஏற்கனவே இதேபோன்று பல பில்லியன் மதிப்புள்ள உதவிகளை சவூதி அரேபியா இலங்கைக்கு வழங்கி இருக்கின்றது. இங்கு 09 பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்கள் உள்ள நிலையில் இது 10 ஆவது மருத்துவ பீடம் ஆகும்.

சபரகமுவ பல்கலைக்கழத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் புதிய நிர்மாணப்பணிகள் அபிவிருத்தி மேம்பாடு மூலம் மருத்தவ பீடத்திற்கு அனுமதிக்கப்படுகின்ற மாணவர் எண்ணிக்கையை மேலும் 100 வரை அதிகரிக்க முடியும் என்று அறிய முடிகின்றது. இது உள்நாட்டில் மருத்துவ சுகாதாரத்துறையை மேம்படுத்தவதற்கான உதவியாகவும் அமைகின்றது. எவ்வாறாயினும் இஸ்லாமிய நாடுகள் வரிசையில் குவைத், ஈரான், பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், துருக்கி உட்பட பல நாடுகள் காலத்திற்கு காலம் இதுபோன்ற உதவிகளை வழங்கி வந்திருப்பதை நாம் மறந்துவிட முடியாது.

2024 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான பௌத்த தீவிரவாதம் உச்ச கட்டத்தில் இருந்த காலப்பகுதியில் அரபு நாடுகளின் பெற்றோல் எங்களுக்கு வேண்டாம், நாங்கள் மாற்று வழிகளை தேடிக்கொள்கின்றோம் என்று உண்ணாவிரதம் இருந்து மார் தட்டியவர் அதுரலியே ரத்ன தேரர். ஆனால் ஒரு துளி பெற்றோலை கூட மாற்று வழியில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இலங்கை 2022 - 2024 பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கிய சந்தர்ப்பத்தில் இதே அரபுநாடுகள் தான் இலங்கைக்கு இனாமாகவும் இலகு கடன் அடிப்படையிலும் பெற்றோலை வழங்கி இலங்கையை மீட்டெடுத்தன என்பதும் முன்னைய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது நடைபெற்ற மறக்க முடியாத நினைவலைகளாகும்.

இவ்வாறாக தொடர்ந்து அரபு நாடுகளின் உதவிகளை அரசாங்கம் பெற்றுக்கொள்கின்ற அதே நேரம் இந்த நாட்டில் வாழுகின்ற சிங்கள பௌத்த மக்களுக்கு இத்தகைய உதவித் திட்டங்களின் பெறுமதியை உணர்த்த தவறி வருவது கவலைக்குரிய விடயமாகும். 2019 ஆம் 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில்அன்றையஆட்சியாளர்கள்சிலசந்தர்ப்பங்களில்இலங்கையில் முஸ்லிம் மக்களை பல்வேறு அரசியல் பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் பழிவாங்கிய சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான ஓர் அம்சம்தான் மட்டக்களப்பு பிரதேசத்தில் அப்போது ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியால் சவூதி அரேபியாவின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை உரிய முறையில் பயன்படுத்த விடாமல் கொரோனா காலத்தில் அதனை ஓர் இடைத்தங்கல் முகாமாக மாற்றியதும் அங்கிருந்த பல பில்லியன் கணக்கிலான சொத்துக்களை நாசம் செய்தமையும் அமைகின்றன. அதேபோன்று சவூதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட சுனாமி வீட்டுத் திட்டத்தையும் குறிப்பிடலாம்.

ஆனாலும், இலங்கையில் முஸ்லிம் சமூகத்திற்கு இனவாதிகள் இஸ்லாமிய அடிப்படைவாதம், பயங்கரவாதம் என்று எத்தகைய அநீதிகளை இழைத்தாலும், துன்பங்களை கொடுத்தாலும் அரபு நாடுகள் இலங்கையை ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதற்கு இந்த உதவி திட்டம் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். இவ்வாறாக அரபு நாடுகளது உதவிகளின் கீழ் அடிப்படை வாழ்க்கை வசதிகள், அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை இந்நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகத்திற்கு மாத்திரம் உரிய உதவிகளாக இல்லை. அவை இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று இந்த நாட்டு மக்களாகிய இலங்கையர்களுக்கான உதவிகளாகும். எல்லா இனங்களும் இத்தகைய உதவிகளின் பிரதிபலனை அனுபவிக்கின்றனர். அதனால் வாங்குவது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது. வாங்கிக்கொண்ட பின்னர் அதனை நல்ல முறையில் மதித்து நடக்க வேண்டும். இவை இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களின் பெயரால் கிடைப்பவை என்ற அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை கண்ணியமாகவும் மரியாதையாகவும் மதித்து நடப்பதற்கு ஆட்சியாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.






# சப்ரகமுவ பல்கலைக்கழக புதிய மருத்துவபீட வளாகம்

## மாணவர் பயன்பாட்டிற்கு கையளிப்பு




## இலங்கையின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிரந்தரப் பங்களிப்பு

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

நாட்டுமக்களுக்கு உயர்ந்த தரத்திலான சுகாதார சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தேசிய இலக்கின் ஒரு முக்கிய மைல்கல்லாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் இந்த புதிய மருத்துவ பீட வளாகத்தைக் குறிப்பிடலாம் என, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அத்தோடு, மருத்துவக் கல்வி முறையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமாக, மாற்றம் பெற்று வரும் சமூகத் தேவைகளையும் உலகளாவிய சுகாதாரப் போக்குகளையும் பூர்த்தி செய்யக்கூடிய, அறிவையும் ஒழுக்கநெறிப் பண்புகளையும் கொண்ட மருத்துவர்களை உருவாக்குவதே எமது அரசாங்கத் தின் நோக்கமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சனிக்கிழமை (04) இடம்பெற்ற, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்காக நிர்மாணிக் கப்பட்ட, புதிய பீட வளாகத்தை மாணவர் பயன்பாட்டிற்காகக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் தற்போது ஏறத்தாழ 750 மாணவர்கள் கற்று வரும் அதேவேளை, வருடாந்தம் சுமார் 160 மாணவர்கள் மருத்துவக் கல்விக்காக இப் பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

இப்புதிய மருத்துவபீட வளாக நிர்மாணத் திட்டத்திற்காக இலங்கை அரசாங்கம் சுமார் ரூ. 2,876 மில்லியன் நிதியைச் செலவிட்டுள்ளதுடன், சவூதி அரேபிய அரசு சுமார் ரூ. 15 பில்லியன் நிதியுதவியை வழங்கியிருக்கின்றது.

இப்பீட வளாகம், ஒரே தடவையில் 500 மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய விடுதி மற்றும் 1,060 மாணவர்களுக்கு ஒரே நேரத்தில் அமரக்கூடிய கேட்போர்கூடம் மற்றும் நிர்வாகக் கட்டடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது.

250 ஆசனங்களைக் கொண்ட இரண்டு விரிவுரைக்கூடங்களையும், 200 மாணவர்கள் அமரக்கூடிய ஒரு விரிவுரைக்கூடத்தினையும், சுமார் 160 மாணவர்கள் அமரக் கூடிய மூன்று விரிவுரைக் கூடங்களுமாக மொத்தம் ஆறு விரிவுரைக்கூடங்கள் இவ் வளாகத்தில் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன.

அத்துடன், இம்மருத்துவபீட நிர்மாணத் திட்டத்திற்கு இணையாக, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையை மையப்படுத்தி, முழுமையான ஆய்வகங்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்ட ஒன்பது மாடிகளைக் கொண்ட பேராசிரியர்கள் பிரிவு ஒன்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மருத்துவக் கல்வியின் தரத்தின் மீதே ஒரு சுகாதாரக் கட்டமைப்பின் வலிமையும் அதன் தாக்குப் பிடிக்கும் தன்மையும் தங்கியுள்ளது. விஞ்ஞான அறிவு, மருத்துவ நம்பிக்கை, நெறிமுறை நேர்மை மற்றும் பொதுச் சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கொண்ட ஒரு புதிய தலைமுறை மருத்துவ நிபுணர்களை உருவாக்க இப்பீடம் பங்களிக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த பீட வளாகத்தை 20 ஏக்கர் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு அளவில் அபிவிருத்தி செய்வதற்கான வழியமைத்து, 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை தாராளமாக நிதியுதவியாக வழங்கிய சவூதி அபிவிருத்தி நிதியத்திற்கு (Saudi Fund for Development) எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முதலீடானது வருங்கால சந்ததியினருக்குப் பயனளிக்கும், இலங்கையின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட ஒரு நிரந்தர பங்களிப்பாகும்.

நிர்வாகக் கட்டிடம் மற்றும் மருத்துவ பரிசோதனைகளுக்கான (Paraclinical) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரசாங்கம் சுமார் 1,096 மில்லியன் ஷரூபாவை முதலீடு செய்ததன் ஊடாக இந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிந்தது. இதற்கு மேலதிகமாக, அத்தியாவ சிய உபகரணங்களுக்காக 70 மில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் கற்றல் வளங்களைப் பலப்படுத்துவ தற்காக ‘AHEAD’ திட்டத்தின் மூலம் மேலும் 194 மில்லியன் ஷரூபாவும் பங்களிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற வகையில் இலங்கையின் சுகாதாரச் சேவையை பலப்படுத்தவும், உயர்தர சுகாதாரச் சேவைகளை அனைவருக்கும் வழங்கவும் முயற்சிக்கும் இக் காலகட்டத்தில், இப்பீடத்திற்கும் ஒரு பாரிய பொறுப்பு இருக்கின்றது.

நமது நாட்டிற்குத் தேவையான திறமையான சுகாதார நிபுணர்க ளையும் ஆராய்ச்சியாளர்களையும் உருவாக்குவதில் இப்பீடம் முன்னிற்க வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன்.

சப்ரகமுவ மாகாணத்திற்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த நாட்டிற்கும் சேவையாற்றும் வகையில், மருத்துவக் கல்வி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் ஒரு சிறந்த மையமாக இப்பீடம் வளர்ச்சியடையும் என நான் நம்புகிறேன்”, என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தஸாம் அல்கஹ்தானி, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் பேராசிரியர் சுனில் செனவி, கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்ன உள்ளிட்ட இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சவூதி அபிவிருத்தி நிதியத்தின் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி பொறியிய லாளர் பைசல் எம். அல்கஹ்தானி, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஏ. ஆரியதுரை, சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். என். விக்ரமரத்ன உள்ளிட்ட உயர் கல்வித் துறை அதிகாரிகள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.













# மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீன் கனடாவில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்








**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

இலங்கையின் மூத்த ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான என். எம். அமீன் அவர்களைக் கௌரவிக்கும் வகையிலான விசேட சந்திப்பும் பாராட்டு விழாவும் கனடாவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

'ஸ்ரீ லங்கா முஸ்லிம் கம்யூனிட்டி கனடா' (Sri Lanka Muslim Community Canada) அமைப்பின் ஏற்பாட்டில், கனடாவின் ஸ்கார்பரோவில் அமைந்துள்ள அமானா மாநாட்டு மண்டபத்தில் (Amana Conference Centre> Scarborough) இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஊடகத்துறை மற்றும் சமூக மேம்பாட்டிற்காகத் தமது வாழ்நாளை அர்ப்பணித்துச் சேவையாற்றிய என். எம். அமீன் அவர்களின் பணிகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவருடன் கனேடிய வாழ் மக்கள் கலந்துரையாடும் வகையிலும் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த விசேட சந்திப்பு மற்றும் பாராட்டு விழாவில் கனேடிய வாழ் இலங்கை சமூகப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் நலன்புரி அமைப்பினர் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவர் தற்போது'உதயம்' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்கா (Muslim Council of Sri Lanka) தலைவராகவும் பொறுப்பு வகிக்கும் என். எம். அமீன் அவர்கள், தினகரன் உள்ளிட்ட லேக் ஹவுஸ் தமிழ் பிரசுரங்களின் முன்னாள் முகாமைத்துவ ஆசிரியராகவும், நவமணி தேசியப் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியராகவும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் (Sri Lanka Muslim Media Forum) முன்னாள் தலைவராகவும் பணியாற்றி ஊடகத்துறையில் முத்திரை பதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் மாநகர சபை உறுப்பினராக எம்.எம். இஹ்திசாம்

**(எம்.யூ.எம்.சனூன்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் மாநகர சபை உறுப்பினராக எம்.எம். இஹ்திசாம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புத்தளம் மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் நான்காம் வட்டாரத்தில் போட்டியிட்ட எம்.எம்.இஹ்திசாம் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்திருந்தார்.

எனினும், கட்சிக்கு கிடைத்த இரண்டு போனஸ் ஆசனங்களில் ஒன்று பெண் பிரதிநிதித்துவத்திற்காக ஒதுக்கப்பட்டு, முன்னாள் புத்தளம் நகர சபை தலைவர் மர்ஹூம் கே.ஏ. பாயிஸின் புதல்வி சதா பாயிஸூக்கு வழங்கப்பட்டது.

மீதமிருந்த மற்றொரு போனஸ் ஆசனத்தை, கட்சியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த வேட்பாளர்களுக்கு சுழற்சி முறையில் வழங்குவதற்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட மத்திய குழு உறுப்பினர்களும், உயர்பீட உறுப்பினர்களும் ஒன்று கூடி கலந்துரையாடல் ஒன்றை நடாத்திய போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் தொகுதி அமைப்பாளரும், புத்தளம் மாநகர சபை உறுப்பினருமான ரணீஸ் பதுர்தீன் தலைமையில் தீர்மானங்கள் மேற் கொள்ளப்பட்டன.



அதனடிப்படையில், கடந்த ஒரு வருடமாக மாநகர சபை உறுப்பினராகப் பணியாற்றிய பர்வீன் ராஜா தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கு எம்.எம். இஹ்திசாம் சுழற்சி முறையில் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் தொகுதி அமைப்பாளரும், புத்தளம் மாநகர சபை உறுப்பினருமான ரணீஸ் பதுர்தீன் செவ்வாய்க்கிழமை (07) வழங்கி வைத்தார்.

புதிய உறுப்பினரான எம்.எம்.இஹ்திசாம் தனது வட்டார மக்களுக்கு தன்னால் இயன்ற அளவில் சிறந்த சேவைகளையும் அபிவிருத்திப் பணிகளையும் வழங்கி சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் தொகுதி அமைப்பாளரும், புத்தளம் மாநகர சபை உறுப்பினருமான ரணீஸ் பதுர்தீன் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

## நடுநிலைமை தவறிய நடுவரும், பிபா வின் பாரபட்சமும்

### ஆர்ஜென்டினாவுடனான தோல்வியின் பின் எகிப்து பயிற்சியாளர் ஹொஸாம் ஹஸன் சாடல்

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் சுப்பர் 16 சுற்றின் மிக விறுவிறுப்பான ஆட்டமொன்றில் நடப்பு சம்பியனான ஆர்ஜென்டினாவிடம் 3:2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் எகிப்து அணி அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

இப்போட்டிக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய எகிப்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஹொஸாம் ஹஸன் (Hossam Hassan), நடுவர்களின் மோசமான தீர்ப்புகள் மற்றும் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (FIFA) பாரபட்சமான அணுகுமுறைகள் குறித்து தனது கடுமையான கண்டனங்களையும் ஆத்திரத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரின் சுப்பர் 16 சுற்று ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான ஆர்ஜென்டினா அணியும் முஹம்மது சலா தலைமையிலான எகிப்து அணியும் பலப்பரீட்சை நடாத்தின.

இப்போட்டியின் முதல் பாதியில் எகிப்து அணி 1:0 என ஆதிக்கம் செலுத்தியது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது பாதி ஆட்டத்தின் முதல் நிமிடங்களில் 2ஆவது கோலையும் அடித்து முன்னிலை பெற்றிருக்க ஆட்டத்தின் 79, 83 மற்றும் 90,3 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களை உட்செலுத்திய ஆர்ஜென்டினா அணி ஆட்ட நேர முடிவில் 3:2 என வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.



இப் பரபரப்பான போட்டியில் வெற்றியை நலுவ விட்ட எகிப்து அணி தொடரிலிருந்து வெளியேறியது. இப் போட்டியின் பின்னர் ஊடகங்களுக்கு எகிப்து அணியின் பயிற்சியாளரான ஹொஸாம் ஹஸன் கருத்து வெளியிட்டிருந்தார்.

"மிகவும் எளிமையான பின்னணியைக் கொண்ட தங்களது எகிப்து அணி, ஆர்ஜென்டினா போன்ற பெரும் பலம் வாய்ந்த அணிக்கு இணையாக மைதானத்தில் மல்லுக்கட்டியதாக அவர் பெருமிதம் கொண்டார். "உலகிலேயே அதிக விலையுயர்ந்த வீரர்களைக் கொண்ட அணிக்கு எதிராக நாங்கள் சவால் விடுத்தோம். நேற்றைய ஆட்டத்தில் நடப்பு சம்பியன்களை விட அனைத்து துறைகளிலும் நாங்களே சிறந்த விளங்கினோம். ஆனால், ஆர்ஜென்டினா அணிக்கு சாதகமாக நடுவர் மீது ஒருதலைப்பட்சமான அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது" என ஹஸன் குற்றம் சாட்டினார்.

இப்போட்டியை வழிநடத்திய நடுவர் பிரான்சுவா லெடெக்சியர் (François Letexier) நியமிக்கப்பட்டதற்கு போட்டியின் தொடக்கத்திற்கு முன்பே தாங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாக ஹஸன் வெளிப்படுத்தினார். போட்டி முடிவடைந்ததும் தனது கோபத்தை மறைக்காத அவர், எகிப்து அணிக்கு ஒரு தண்டனை உதை (Penalty) வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், தங்களது இரண்டாவது கோல் (Mostafa Ziko அடித்த முதலாவது கோல்) நடுவரால் நிராகரிக்கப்பட்டிருக்கக் கூடாது என்றும் உறுதியாக வாதிட்டார்.

போட்டி முடிந்ததும் நடுவர் லெடெக்சியரை நேரடியாக எதிர்கொண்ட ஹஸன், அவரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அவருக்கு மஞ்சள் அட்டையும் (Yellow card) காண்பிக்கப்பட்டது. இதுகுறித்து அவர் கூறுகையில், "இது அநீதியானது என்று நடுவரிடம் கூறினேன். அவர் எதையோ மறைக்க முயல்கிறார், ஆனால் அது தோற்றுவிட்டது. இத்தொடரில் இனிவரும் எந்தவொரு போட்டியையும் நான் பார்க்கப் போவதில்லை" என்றார்.

இந்த அட்டவணையைத் தயாரிப்பவர்களுக்கு கால்பந்தைப் பற்றி எதுவுமே தெரியாது" என்று வெளுத்து வாங்கினார்.

இருப்பினும், இத்தனை ஏமாற்றங்களுக்கு மத்தியிலும் தனது வீரர்களின் அசாத்திய போராட்ட குணத்தைப் பாராட்டிய அவர், எகிப்து அணி இன்னும் முதிர்ச்சியடைந்து அடுத்த கட்டத்திற்கு நகரும் என்றார்.

## கருத்துரையும் கவிவாழ்த்தும்

(2026 ஜூன் 26 வெள்ளி அன்று கனடா - மார்க்கம் வீதி அமானா கேட்போர் கூடத்தில் ஈழத்து மூத்த பத்திரிகை முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் தலைவர் - நவமணி ஆசிரியர் என். எம். அமீன் அவர்களுக்கு இலங்கை தமிழ்பேசும் சமூகத்தினரால் நிகழ்த்தப்பட்ட இலக்கிய ஆர்வலர்களினதும் இதயங்களினதும் சந்திப்பு நிகழ்வில் நான் வழங்கிய 'கருத்துரையும் கவிவாழ்த்தும்')

**(கனடாவிலிருந்து - இனியவன் இசார்தீன்)**

இன்று நாம் ஒரு மனிதரை மட்டும் கௌரவிப்பதற்காக ஒன்று கூடவில்லை. ஒரு உயர்ந்த சிந்தனையையும், நேர்மையான ஊடகப் பண்பாட்டையும், உண்மையைப் பேணும் பத்திரிகை மரபையும் கௌரவிப்பதற்காகவே ஒன்று கூடியுள்ளோம்.

இன்று கௌரவிக்கப்படும் என். எம். அமீன் அவர்கள், நவமணி நாளிதழின் பிரதம ஆசிரியர் மட்டுமல்ல தமிழ் ஊடக உலகில் நம்பிக்கையின் அடையாளமாகவும், சமூகப் பொறுப்பின் சின்னமாகவும் திகழ்கிறார்.

ஒரு பத்திரிகை என்பது வெறும் செய்தித் தாள் அல்ல. அது ஒரு நாட்டின் மனசாட்சி. அது மக்களின் குரல். அந்தப் பத்திரிகையின் இதயமாக இருப்பவர் ஆசிரியர்.

ஒரு நல்ல ஆசிரியர் செய்திகளை மட்டும் வெளியிடுவதில்லை உண்மையைத் தேடுகிறார், நீதியை நிலைநாட்ட முயல்கிறார், மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கிறார். அந்த உயர்ந்த பணியை பல ஆண்டுகளாக நேர்மையுடனும், பொறுப்புடனும் செய்து வருபவர் என். எம். அமீன் அவர்கள். எங்கள் ஆளுமை என். எம். அமீன் ஈழத்தில் சிறந்த பத்திரிகையாளர்களில் ஒருவர். இவர் மரியம்பீவி எந்தைக்கும் அப்துல் றஸாக் நிசாமுத்தீன் உடையார் தந்தைக்கும் மாவனெல்லயில் ஆண்டு 1952இல் பிறந்தார்.

ஆரம்ப காலத்தில் முன்னாள் தினகரன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் ஐயா அவர்களோடு சிரேஷ்ட ஊடகவியலாளராக 24 வருடங்கள் ஊழியம் செய்தார்.

இவர் படிப்படியாக உயர்ந்து பல்லாண்டு காலம் தினகரன் பாராளுமன்றச் செய்தியாளராகத் திகழ்ந்தார். 'தினமின' சிங்களப் பத்திரிகை ஊடகவியலாளராக மிளர்ந்த அமீன் அவர்கள் வாரமொரு முறை மட்டும் வெளிவந்த நவமணி பத்திரிகயை நயமான செய்தி நாளிதழாக வெளிக் கொணர்ந்து ஒரு தனித்துவ சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியராகப் பரிணமித்தார்.

இவர் முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபகரும் தலைவரும் ஆவார். மேலும் துருக்கி பத்திரிகையாளர் சங்கம் மற்றும் தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலங்கைப் பிரதிநிதியாகவும் பணியாற்றி, பல இளம் ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறார்.

இலங்கை பல சவால்களையும், இன முரண்பாடுகளையும், பொருளாதார நெருக்கடிகளையும் சந்தித்த நாடு. இத்தகைய காலங்களில் ஊடகத்தின் பொறுப்பு மிகப் பெரியது.

தீயை மூட்டுவது எளிது. அதை அணைப்பது கடினம். வெறுப்பை விதைப்பது எளித் ஒற்றுமையை உருவாக்குவது மிகவும் கடினம். அந்தக் கடினமான பணியையே பொறுப்புடன் செய்து காட்டியவர் திரு. என். எம். அமீன் அவர்கள்.

அவரது தலையங்கங்கள் வெறும் கருத்துக் கட்டுரைகள் அல்ல் அவை சமூகத்திற்கு வழிகாட்டும் சிந்தனைகள். அவரது எழுத்துக்கள் பல இளைஞர்களுக்கு விழிப்புணர்வையும், பல எழுத்தாளர்களுக்கு ஊக்கத்தையும் வழங்கியுள்ளன.

இன்றைய உலகில் தகவல்கள் விநாடிகளில் பரவுகின்றன. ஆனால் உண்மை எப்போதும் பொறுப்புடனும், உறுதியுடனும் பயணிக்கிறது. அந்த உண்மையை மக்களிடம் கொண்டு சேர்ப்பதை தனது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டவர் தான் திரு. என். எம். அமீன் அவர்கள்.

அவர் வழிநடத்திய நவமணி நாளிதழ் செய்திகளை மட்டும் வழங்கவில்லை ஸசிந்திக்கவும், சமூகப் பொறுப்புடன் வாழவும் மக்களை ஊக்குவித்தது.

ஒரு ஆசிரியரின் வெற்றி அவர் பெற்ற விருதுகளில் இல்லை அவர் உருவாக்கிய வாசகர்களிலும், ஊக்குவித்த எழுத்தாளர்ஸகளிலும், பாதுகாத்த நம்பிக்கையிலும் தான் உள்ளது. அந்த வகையில், திரு. என். எம். அமீன் அவர்கள் ஒரு தலைமுறையை உருவாக்கிய ஊடக வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

அன்பிற்குரிய அமீன் அவர்களே!


உங்கள் எழுத்தும், நேர்மையும், பணிவும், சமூகப் பொறுப்பும் எங்களுக்கு முன்மாதிரியாக உள்ளன. நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் நல்ல உடல்நலத்துடனும், அறிவொளியுடனும் தமிழ் ஊடக உலகிற்கு சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

இன்று உங்களுக்கு வழங்கப்படும் இந்த கௌரவம் உங்கள் சாதனைகளுக்கான முடிவல்ல் உங்கள் நீண்டகால அர்ப்பணிப்பிற்கான நன்றியின் வெளிப்பாடாகும்.

மீண்டும் ஒருமுறை, எங்கள் இதய பூர்வமான வாழ்த்துகளையும்,

# 12 கோடியை இழந்து தவிக்கும் ஹரக் கடா

## பாதாள உலக கோடிக்கே டிமிக்கி



எம்.எஸ். அமீர் ஹுசைன்



நாம் நாட்டில் இதுவரையில் அறிந்து வைத்திருப்பது பாதாள உலக கும்பல்தான் பிரபல வர்த்தகர்கள், தனவந்தர்கள், நாடறிந்த கோடீஸ்வரர்களிடம் இருந்து கப்பம் பெறுவதும் கடத்தல், கொள்ளைகளில் ஈடுபடுவதும் என்ற விடயம். ஆட்கடத்தல், கொள்ளைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற விடயங்கள் பாதாள உலக கும்பல்களுக்கு கைதேர்ந்த கலையாகும். ஆனாலும் அவ்வாறான ஒரு போதும் பிடிக்க முடியாத பலர் இப்போது உள்ளே இருக்கின்றனர். அவர்களில் ஒருவன்தான் நதுன் சிந்தக அல்லது ஹரக் கடா என்ற நபர். அவரிடம் இருந்து 20 கோடி பேரம் பேசி 12 கோடிகளுக்கு டிமிக்கி அடித்த மூன்று பேரை அதிரடியாகக் கைது செய்து தடுத்துவைக்கும் ஒரு நிலை ஏற்பட்டமை நாட்டு மக்களை ஆச்சரியப்பட வைத்துள்ள நிகழ்வாகும்.

நாட்டில் இனிமேல் அரசியல் அதிகார சபை மூலம் திட்ட மிட்ட அடிப்படையிலான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் களுக்கு அரசியல் அதிகார சபைகள் ஊடாக சலுகை, வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து பாதுகாக்கும் யுகம் இனி இல்லை. எந்த குற்றவாளிகளாக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டனை வழங்கப்படுவது உறுதியானதாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 2026.06.25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார். கடந்த காலங்களில் இந்த நாட்டில் திட்டமிட்ட அடிப்படையிலான குற்றவாளி கள், போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு எதிராக போதுமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. அவ்வாறு அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்டால் அரசியல் அதிகாரசபைகள் தலையிட்டு அதனைத் தடுத்து பாதுகாக்கும் நடைமுறையே இந்த நாட்டில் இருந்து வந்தது. அதனால் அந்த யுகம் முடிவுக்கு வருகின்றது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஏற்கனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் பிரதான அடிப்படையில் தொடர்பை வைத்திருந்தார் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சலேயை சட்டநடவடிக்கைகளில் இருந்து விடுவித்து அவரை காப்பாற்றும் வகையில் அரசியல் வாதிகள் வீதிக்கு இறங்கிப் போராடி வருகின்றனர்.

அவ்வாறே முன்னைய ஆட்சியில் பாரியளவிலான குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைதாகிய குற்றவாளிகளாக இருக்க வேண்டிய வர்கள் சட்டத்தால் நிவாரணங்களைப் பெற்று தப்பிப் போகும் அளவிற்கு அரசியல் செல்வாக்கு மேலோங்கி இருந்த காலம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

மக்கள் இந்த நாட்டை நல்ல தொரு பண்பாடு மிக்க கலாசாரத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்காகவே வாக்களித்ததாகவும் அந்த வாக்குறு திகளை அரசு நிறை வேற்றியே தீரும் என்றும் அவர் வலியுறுத்தி இருக்கின்றார்.

கடந்த காலங்களில் நாட்டில் பாரிய குற்றச்செயல்கள் அதிகரித்த வண்ணம் இருந்துள்ளன. குறிப்பாக போதைப்பொருள் உள்வருகை, விநியோகம் என்பன கொடி கட்டிப்பறந்த காலமாக இருந்திருக்கின்றது. இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் ஐஸ் போதைப்பொருள் 5543 கிலோ கிராம், ஹிரோயின் 3390 கிலோ, குஷ் 1521 கிலோ, கொகெயின் 304 கிலோ, போதை மாத்திரை கள் 51 இலட்சத்து 10 இலட்சத்து 35 ஆயிரம் மற்றும் வேறு வகையான போதையூட்டக்கூடிய வில்லைகள் 2452,000 என்ற அடிப்படையில் தேடுதல்களின் மூலம் கைப்பற்றப்பட்டிருக்கி ன்றன. அத்துடன் இதுவரை காலமும் பிடிக்க முடியாது என்றிருந்த திட்டமிட்ட குற்றச் செயல்களிலும் போதைப் பொருள் கடத்தலிலும் ஈடுபட்டு வந்த பலர் இப்போது உள்ளே இருக்கின்றனர். வெளிநாடுகளில் இருக்கின்ற பலரையும் கைது செய்ய நடவடிக்கைகள் இடுக்கப்பட்டிருப்பதோடு, அரசாங்கம் இந்த விடயத்தில் கடுமையாகவும் நேர்மையாகவும் நடந்துகொள்ளும் என்ற விடயத் தையும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் இவ்வாறிருக்க பாரிய குற்றச் செயல்கள் மற்றும் பொதைப் பொருள் கடத்தல் குற்றச் செயலுடன் நம்பந்தப்பட்டவராக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருந்து வரும் சந்தேக நபருக்கு சட்டத்தின் மூலம் சலுகைகளையும் வசதிகளையும் வாங்கிக் கொடுக்க 12 கோடி ரூபா இலஞ்சம் பெற்ற மூவரை இலஞ்சம் மற்றும் மோசடிக் குற்றங்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருக் கின்றது. முன்னாள் நீதி அமைச்சரும் சிறைச்சாலைகள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருமான விஜேதாச ராஜபக்ஷவின் புதல்வாரன சட்டத்தரணி ரகித நிர்மல ராஜபக்ஷ, அரசியல் கட்சி ஒன்றின் ஹொரணை பிரதேச அமைப்பாளரான சரித் அபேசேகர மற்றும் ஸ்ரீ லங்கன் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர்களுள் ஒருவரான வருஷ ஹென்னதி சதுரங்க ஆகிய மூன்றுபேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் மூன்றுபேரையும் 2026.06.25 ஆம் திகதி கொழும்பு மஜிஸ்திரேட் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டபோது இவர்கள் ஜூலை மாதம் 03 ஆம் திகதி வரையில் தடுப்புக்காவலில் வைக்க கொழும்பு மஜிஸ்திரேட் எஸ். போதலகம உத்தரவிட்டு ள்ளார்.

தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள போதைப் பொருள் கடத்தல், பாதாள உலக கோஷ்டி மற்றும் திட்டமிடப்பட்ட பாரிய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர் என்று கைதுசெய்யப்பட்டு சந்தேகநபராகக் கருதப்படுகின்ற நதுன் சிந்தக அல்லது ஹரக் கடா என்பவரை காப்பாற்றவே இவ்வாறு இலஞ்சம் பெற்றிருப்ப தாக இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரிகள் நீதவானுக்கு தெரிவித்துள்ளனர். இந்த சந்தேக நபரை பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தி சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை செய்யச் செய்வதற்கும் காலி பூசா சிறைச்சாலைக்கு அனுப்பாமல் வேறு சிறைச் சாலைக்கு மாற்றம் செய்ய செய்வதற்காகவும் சிறைக்குள் ஏனைய இதேபோன்ற கைதிகளால் அல்லது பொலிஸாரால் ஹரக்கடா கொல்லப்படாமல் காப்பாற்றவும் என்ற அடிப்படை யில் இந்த இலஞ்சம் பெறப் பட்டிருக்கின்றது. இவர்கள் இந்த இலஞ்சம் பெற்ற காலப்பகுதியானது முன்னாள் ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி காலப்பகுதியாகும்.

அதற்காக சிறைச்சாலை அதிகாரிகள், முன்னாள் பொலிஸ் மா அதிபர், அமைச்சர் உட்பட பலருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் 50 கோடி ரூபா உடன்பட்ட நிலையில் முற்பணமாக 12 கோடி ரூபாவைப் பெற்றுள்ளனர். இந்தப் பணத்தை மேற்குறிப்பிடப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் 2023.03.25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் துபாய் நாட்டிற்கு விஜயம் செய்து ஹரக்கடாவின் மனைவியான மதுசிகா மதுவந்தியிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ளனர் என்ற தகவல்கள் புலனாய்வு அதிகாரிகளால் மன்றில் வெளிப்ப டுத்தப்பட்டிருக்கின்றது. எனினும் குறித்த தொகை வழங்கப்பட்டு இதுவரையில் உரிய மூன்று பேராலும் இது வரையில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் ஹரக்கடாவின் மனைவி பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து மூலமாக செய்துள்ள முறைப் பாட்டினை விசாரணை செய்த இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகா ரிகள் இவர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களோடு மேலும் 12 பேர்கள் அளவில் கைதாக இருப்பதாக அறிய முடிகின்றது. அவர்கள் யார் என்பது பற்றி இவ்வாரம் அறிந்துகொள்ள முடியுமாகும்.

சட்டத்தை அமுல்படுத்துபவர் களால் அல்லது அதன் காவலர்களாக இருப்பவர்கள் சட்டம், நீதி, நியாயம் நிலை நாட்டப்படும் வகையில் யாருக்கும் அநீதி இழைக்காமல் நேர்மையாக நடக்கின்றனர் என்ற எதிர்பார்ப்பே சட்டத்தின் ஆட்சி மூலம் எதிர்பார்க்கின்ற விடயமாகும். ஆனாலும் ஒரு பாரிய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட அதுவும் பாதாள உலக குற்றவா ளியை சட்டத்தின் பிடியில் இருந்து பாதுகாத்து சிறைச்சாலைக்குள் வசதிகளை பெற்றுக் கொடுக்கவும் மேலும் உயர் சலுகைகளை வழங்கவும் இவ்வாறு பாரியளவி லான இலஞ்சம் பெறப்பட்ட தகவல்கள் வெளிப்பட்டிருப்பதால் ஏற்கனவே முன்னைய ஆட்சி காலப்பகுதியில் எத்தனை கைதிகள் இவ்வாறான உயர்மட்ட அதிகார வர்க்கத்தின் தலையீடு, செல்வாக்கு காரணமாக சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிப் பிழைத்திருப்பார்கள் என்று சிந்திக்க வேண்டி இருக்கின்றது.

சட்டத்திற்குள் புகுந்து விளையாடு பவர்களும் இருக்கின்றார்கள் என்பதை ஜனாதிபதி அவரது பாராளுமன்ற உரையில் ஆணித்தரமாக குறிப்பிட்டிருப்பது இத்தகைய ஆதாரங்களின் அடிப்படையிலாகும்.

எவ்வாறாயினும் நாட்டில் அரசியல் தடைகள், செல்வாக்கு களுக்கு அப்பால் இருந்து நீதியானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் நடைபெறுமானால் இவ்வாறான ஊழல்கள், இலஞ்சம் மற்றும் முறைகேடுகள் ஒழியும் என்ற நம்பிக்கையை வைக்க முடியும். ஆனாலும் இத்தகைய வாக்குறுதிகள் வெறுமனே அடுத்த கட்ட தேர்தல்களை இலக்கு வைத்த வாக்குறுதிகளாக மாத்திரம் அமையக்கூடாது.

# ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் ஆறு வருடப் பூர்த்தியும் கௌரவிப்பு நிகழ்வும்



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

முயற்சிக்கு என்றும் முதலிடம் என்ற நோக்கில், கடந்த ஆறு வருடங்களாகப் பல்வேறு துறைகளில் சாதனைகளைப் படைத்து வரும் ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் ஆறு வருடப் பூர்த்தியும் கௌரவிப்பு நிகழ்வும், கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதன் பணிப்பாளர் ஏ.எம்.இன்ஷாப் தலைமையில் கடந்த 4ஆம் திகதி மிக விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் எம்.எம்.பாஸில் கலந்து சிறப்பித்ததுடன், கௌரவ அதிதிகளாக, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் றிஸ்வி மஜீதி, வைத்தியர் பி.றிம்ஸான், சிரேஷ்ட வானிலை அதிகாரி ஸாலிஹீன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஸமீஹா ஸபீர் மற்றும், சாய்ந்தமருது பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் றஸ்மி மூஸா, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட முன்னாள் விரிவுரையாளரும் சிரேஷ்ட உளவியல் ஆலோசகருமான அஸ்மியாஸ் ஷஹீத், விரிவுரையாளர் றமீஸா கான், சிரேஷ்ட ஊடகவியலாளர் இர்ஷாத் ஏ.காதர் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

மேலும் விசேட அதிதிகளாக, வசந்தம் தொலைக்காட்சியின் செய்தி வாசிப்பாளர் எம்.கவிதா பாரதி, ஆய்வாளர் ஹென்ரி மிட்செல், வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தொகுப்பாளரும் தயாரிப் பாளருமான ஏ.எம்.அஸ்கர் மற்றும், ஸிக்னேச்சர் குளோ நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எச்.இஷ்ரத் ரிஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த அதிதிகளுக்கு அவர்களின் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் சிறப்பு கௌரவம் அளிக்கப்பட்டதுடன், ஆர்.ஜே. மீடியாவின் ஆறு வருடப் பூர்த்தி விழாவுடன் உறுப்பினர்கள் கௌரவிப்பு, ஊடகக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, மேலும், மருதாணிப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிப்பு, ஒரு வருட காலமாக நடைபெற்ற அறிவிப்பாளர் குரல் மகுடம் போட்டியில் தேசிய ரீதியில் முதல் இடம்பெற்ற அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எ.ஸி.ஹதீகா ஸனானிஸ் குரல் மகுடம் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டதுடன், ஏனைய வெற்றியாளர் களும் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், வணிகத் துறையில் சிறப்புச் சாதனைகளைப் படைத்தவர் களுக்கான பிசினஸ் எக்ஸலன்ஸ் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கா னோர் கலந்து கொண்டு சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மறைந்த ஈரான் உச்ச தலைவருக்கு தெஹ்ரானில் மு.கா.தலைவரும், பிரதி சபாநாயகரும் இறுதி மரியாதை





இலங்கைத் தூதுவர் பேராசிரியர் எம்.ஐ. பஸீஹா அஸ்மி மற்றும்



தூதரக அதிகாரிகளும் அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

படுகொலை செய்யப்பட்ட ஈரானின் உச்ச தலைவர் ஆயத்துல்லா அலி கொமேனி அவர்களின் இறுதி கடமைகள் தெஹ்ரானில் நடை பெற்றுவரும் சந்தர்ப்பத்தில், முன்னதாக அன்னாரின் ஜனாஸாவுக்கு இறுதி மரியாதை செலுத்தியதன் பின்னர், அங்கு வைக்கப்பட்டி ருக்கும் அதிதிகள் நினைவுக் குறிப்பேட்டில் அந்நாட்டு அரசாங்கத்தின் அழைப்பையேற்று இலங்கையிலிருந்து கலந்து கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி (எம்.பி) ஆகியோர் அனுதாபத்தை பதிவு செய்து கையொப்பமிட்டனர்.

பிரதிநிதிகளோடும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கான

## இலங்கை விமானப்படை நாடு தழுவிய சிறப்பு டெங்கு ஒழிப்புத் திட்டத்தைத் தொடங்குகிறது



**(ஏ.எஸ்.எம்.ஜாவித் )**

பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களின்படியும், இலங்கை விமானப்படைத் தளபதியின் நேரடி மேற்பார்வையின் கீழும், இலங்கை விமானப்படை யானது, நாடு முழுவதும் அமைந்து ள்ள விமானப்படைத் தளங்கள் வழியாக அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய ஒரு சிறப்பு டெங்கு ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.



இத்திட்டத்தின் கீழ், இலங்கை விமானப்படைப் பணியாளர்கள், சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் சமூகத்தினருடன் இணைந்து, டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களைக் கண்டறிந்து அழித்தல், சுற்றுச்சூழல் தூய்மைப் படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள்.

மக்களின் நலனை உறுதி செய்வதையும், டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இத்திட்டம், நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கித் தொடர்ச்சியாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தல்கஸ்பிடியவில் சேதமடைந்த நீர்ப்பாசன திட்டங்கள் அபிவிருத்தி



**(மாத்தளை எம்.சதூர்தீன்)**

மவத்தகம தல்கஸ்பிடிய பிரதேசத்தில் தித்வா சூறாவளியி னால் சேதமடைந்துள்ள நீர்ப்பாசன திட்டங்கள் சகல வசதிகளுடன் நீர்ப்பாசன திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன இதற்கென உலக வங்கி 2கோடி 50இலட்சம் ஷரூபா நிதி உதவியை ஒதுக்கீடு செய்துள்ளதாக குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.எம்.அஸ்லம் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் உள்ள வெலகெதர பாலியல்ல தல்கஸ்பிடிய ஆகிய பிரதான நீர்ப்பாசனத் திட்டங்கள் இவ்வாறு புனரமைக்கப்பட உள்ளது

இந்த நீர்ப்பாசன திட்டங்களின் புனரமைப்பு பணிகள் யாவும் குறுகிய காலத்துக்குல் நிறைவு பெற உள்ளது இந்தநீர்ப்பாசன திட்டங்கள் மூலம் இப்பிரதேசத்தில் 600க்கு மேற்பட்ட விவசாயிகள் நன்மை அடைய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இந்த நீர்ப்பாசன திட்டத்தின் புனரமைப்பு பணியின் ஆரம்ப நிகழ்வு நேற்று தல்கஸ்பிடியில் இடம் பெற்றது இதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.எம்.அஸ்லம் இவ்வாறு தெரிவித்தார்.

## சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை உத்தியோகபூர்வமாகச் சந்தித்த கடற்படை தளபதி

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டேமியன் பெர்னாண்டோ, செவ்வாய்க்கிழமை (2026 ஜூலை 07) உத்தியோகபூர்வ சந்திப்பிற்காக, இலங்கை நாடாளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில், கௌரவ சபாநாயகர் (மருத்துவ) ஜகத் விக்கிரமரத்ன அவர்களைச் சந்தித்தார்.

அதன்படி, இராணுவ மரபுகளுக்கு அமைவாக நடைபெற்ற இந்த உத்தியோகபூர்வ சந்திப்பின் போது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில் இலங்கை கடற்படையின் பங்களிப்பு உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் குறித்து, கடற்படைத் தளபதிக்கும் கௌரவ சபாநாயகர் அவர்களுக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டன.



மேலும், இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், கடற்படைத் தளபதிக்கும் கௌரவ சபாநாயகர் அவர்களுக்கும் இடையில் நினைவுப் பரிசுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist,
Chennai -
Tamilnadu, India)




# மத்திய கிழக்கில் அமைதி திரும்புமா...!

அமெரிக்கா மற்றும் இரான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இரு தரப்புமே தாங்களே வெற்றி பெற்றதாக கூறி வருகின்றனர். கையெழுத்தான ஒப்பந்தம் மோதலை தற்போதைக்கு அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. ஆனால், இதைவிட கடினமான பேச்சுவார்த்தைகள் இனிதான் தொடங்கவுள்ளன.

ஈரான் தூதுக்குழு 18 மணி நேரம் ஆழமான பேச்சுவார்த்தை நடத்தி முடித்து விட்டு ஈரான் திரும்பி விட்டது.60 நாட்கள் மிகவும் முக்கியமான நாளாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இறுதி உடன்பாட்டை எட்டும் நோக்கில், அமெரிக்காவுக்கும் இரானுக்கும் இடையே நடைபெற்ற முதற்கட்ட பேச்சுவார்த்தை “நேர்மறையான முன்னேற்றத்துடன்” முடிவடைந்து ள்ளதாக மத்தியஸ்தர்களான கத்தாரும் பாகிஸ்தானும் தெரிவித்துள்ளன.

திங்கள்கிழமை அதிகாலை வெளியிட்ட கூட்டு அறிக்கை ஒன்றில், “60 நாட்களுக்குள் இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான ஒரு செயல்திட்டத்துக்கு” ஒரு “உயர்மட்டக் குழு” ஒப்புக்கொண்டு ள்ளதாக கத்தாரும் பாகிஸ்தானும் தெரிவித்துள்ளன.

1979 ம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஈரான் எண்ணெய் பேரல்கள் செல்வது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இது வரை காலகட்டத்தில் ஷடோ பிளீட் மூலம் மறைமுக வர்த்தகத்தை சீனாவுக்கு விற்பனை செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. சீனா மிகப் பெரிய அளவில் ஆன இலாபத்தை அடைந்தது குறிப்பிடத் தக்கது  தற்போதைய நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகளும் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டு வரும் நிலையில் தற்போது அடுத்த 60 நாட்களுக்கு

தினமும் 40 இலட்சம் எண்ணெய் பேரல்களை உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்து கொள்ள



அமெரிக்கா அனுமதி அளித்தது மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது..  இந்த ஒப்பந்தம் உலகின் பல்வேறு நாடுகளில் ஓரளவுக்கு பாதிப்பு மற்றும் பதட்டம் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.  தற்போது நிலையில் ஈரான் மிகுந்த ராணுவ வலிமை நிறைந்த நாடாக இருப்பினும் பொருளாதாரத்தில் நொறுங்கிய நிலை தொடரும் நிலையில் ஈரான் பணவீக்கம் 70 சதவீதம் ஹைப்பர் இன்ப்லெசன் என்பதை நாம் அறியலாம்.  இது போன்ற பண வீக்கம் அதிகரிப்பு காரணமாக ஈரான் நாட்டின் தினார் வெற்று பேப்பர் அளவுக்கு மதிப்பு ஏதும் இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ள நிலையில் இந்த ஒப்பந்தம் மூலம் அவர்கள் நீண்ட கால பலனை பெறுவது சாத்தியக்கூறு உள்ளதா என்பதையும் உலகம் தற்போது விவாதித்து கொண்டு இருப்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது என்பதே யதார்த்தமான நிலையாகும்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து மத்திய கிழக்கில் ஈரான் என்ற தேசத்தை உருக்குலைந்த நிலையில் ஆக்கி விட வேண்டும் என்று மிகவும் கடுமையாக முயற்சி செய்து பார்த்த நிலையில் அமெரிக்கா வரலாற்றில் இதன் மூலம் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை சந்தித்து உள்ளது என்பதே உலகின் பல்வேறு நாடுகளில் இருக்கும் இராணுவ ஆய்வாளர்கள் கருத்தாக சர்வதேச நாளேடுகளில் வெளியாகியுள்ளன என்பது மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது என்பதே யதார்த்தமான நிலையாகும்.அதே சமயம் வரும் காலங்களில் மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பிராந்திய சக்திகள் தான் தீர்மானிக்க வேண்டும் என்று ஈரான் சபாநாயகர் பங்கர் கலிபாப் தெளிவாக தெரியப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.  இதன் கருத்து என்னவென்றால் அமெரிக்கா வின் எல்லை மீறிய அதிகாரம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அப்புறப் படுத்த பட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதே அவர்களின் கருத்தாக உள்ளது. மத்திய கிழக்கில் எண்ணெய் வயல்கள் முழுமையாக உலகின் பயன்பாடுகளுக்கு வந்த நிலையில் தான் அமெரிக்கா பல்வேறு வகையான ஆதிக்கம் மற்றும் இராணுவ பலத்தை அதிகரிக்கும் வகையில் தனது தளங்களை விரிவுபடுத்தி வந்த நிலையில் தற்போது ஈரான் என்கிற மாபெரும் போரியியல் சக்தி பாரசீக வளைகுடா பகுதியில் தனித்துவமான ஒரு சர்வதேச ராணுவ ஆதிக்கத்தின் ஒரு பகுதியாக மாறி போனது என்கிற உண்மையை யாராலும் புறந்தள்ளி விட இயலாதது நிலைக்கு ஈரான் மாறியது பலருக்கு பேர் அதிர்ச்சி தரும் வகையில் அமைந்துள்ளது.

இந்த ஒப்பந்தம் பல்வேறு அடிப்படையில் ஆன த திட்டங்களை  வடிவமைப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து 60 நாட்களுக்கு பிறகு தான் அணு சக்தி துகள்கள் குறித்து தெளிவான பேச்சுவார்த்தை நடத்த முடியும் என ஈரான் தெளிவாக தெரிவித்து விட்டது மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது.அதேநேரத்தில் ஈரான் வங்கி கணக்கில் மூடக்இப்பட்ட பணத்தை அமெரிக்கா தமது கைகளில் வைத்து கொண்டு அமெரிக்கா விவசாயிகள் இடமிருந்து கொள்முதல் செய்து ஈரான் நாட்டிற்கு அனுப்பி வைக்கும் என்று இந்த ஒப்பந்தம் கூறுவதாக எழுந்துள்ள செய்தியை ஈரான் உச்ச பட்ச அதிகார தலைவர் சபாநாயகர் பங்கர் கலிபாப் மிகவும் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளது மற்றும் இன்றி அதனைத் புறந்தள்ளி இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அவர் மேலும் கூறுகையில் அமெரிக்கா ஒரு நம்பிக்கையற்ற தேசம் என்றும் உலகில் அதிகம் பொய் கூறும் தலைவர்கள் அங்கு இருப்பதாகவும் அவர் கூறியுள்ளது அமெரிக்கா வின் நம்பகத்தன்மை குறித்து பல்வேறு வகையான சந்தேகங்களை  பொது சமூகதத்திற்கு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்த நிலையில் ஈரான் பணம் 24 பில்லியன் டாலர் மூடக்கப்பட்ட பணம் விடுவிப்பு செய்ய வேண்டும் என்பதே யதார்த்தமான நிலையாகும். அதில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகளும் ஒரு தெளிவான செய்தியை உலகிற்கு தெளிவாக தரவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது ஈரானை பொறுத்தவரை, அமெரிக்காவுடனான இந்த ஒப்பந்தம் வெறும் போர்நிறுத்தம் மட்டுமல்ல. அதைவிட மேலாக, போரில் சரணடையாமல் இன்னும் வலிமையுடன் எழுச்சி பெற்றுள்ளோம் என உரிமை கோருவதற்கான வாய்ப்பை இரானுக்கு வழங்கி உள்ளது.தொடக்கத்திலிருந்தே, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலை தோற்கடிப்பதை விட அவர்களை தடுத்து நிறுத்துவதே இரானின் முதன்மை நோக்கமாக தெரிந்தது. இஸ்லாமியக் குடியரசின் தலைமை கட்டமைப்பு மற்றும் பேச்சு வார்த்தையில் தனது குரலுக்கான வலிமை ஆகியவை சிதையாமல் போரிலிருந்து வெளியேறுவதே இரானின் இலக்காக இருந்தது.

இந்த ஒப்பந்தம், இரானின் அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு 60 நாள் காலக்கெடுவை நிர்ணயிக்கிறது. மேலும், லெபனான் உள்ளிட்ட அனைத்து முனைகளிலும் ராணுவ நடவடிக்கைகளை நிறுத்துதல், நாடுகளின் இறையாண்மையை பரஸ்பரம் மதித்தல், ஹோர்மூஸ் நீரிணையை திறத்தல், இரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்கக் கடற்படை முற்றுகையை நீக்குதல் ஆகியவற்றையும் வலியுறுத்துகிறது. இரான் மேற்கொள்ளவிருக்கும் உடனடி நடவடிக்கைகள் முக்கியமானவை என்றாலும், அவை ஒப்பீட்டளவில் வரையறுக்கப் பட்டவையாகவே உள்ளன.

போருக்கு முந்தைய ஆண்டுகளில் நிலவிய சூழலை போலவே, ஹோர்மூஸ் வழியாக வணிகக் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதிசெய்ய இரான் ஒப்புக்கொண்டு ள்ளது.அதே சமயம் இந்த ஒப்பந்தத்தின் கீழ், அமெரிக்கா தனது கடற்படை முற்றுகையை நீக்கும், இரானிய எண்ணெய் ஏற்றுமதிக்கு விலக்கு அளிக்கும், முடக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட இரானிய சொத்துக்களுக்கான அணுகலை வழங்கும். மேலும் தனது கூட்டாளி களுடன் இணைந்து குறைந்தது 300 பில்லியன் டாலர் மதிப்பில் இரானுக்கு மறுசீரமைப்பு திட்டங்களை முன்னெடுக்கும். இரானிய இறையாண்மை அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும், முற்றுகை நீக்கப்படுவதாலும், தடைகளை தளர்த்த முன்மொழியப் பட்டிருப்பதாலும், புனரமைப்புக்கான நிதி ஆவணத்தில் வெளிப்படையாக சேர்க்கப்பட்டிருப்பதாலும், இதை ஒரு வெற்றியாக முன்வைக்க இரான் தலைமைக்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழி வகுக்கிறது.ஆனால், மிக சிக்கலான விவகாரங்கள் இன்னும் தீர்க்கப் படவில்லை. இரானின் அணுசக்தி திட்டம் குறித்த விஷயங்கள் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இது இரான் தலைமைக்கு சவாலான சூழலாக அமைந்துள்ளது. ஏனெனில், அரசு ஊடகங்கள், இஸ்லாமிய புரட்சிகர காவல் படை, தீவிரப் போக்குடைய தலைவர்கள் என பலரும், இரான் அமெரிக்காவை யும் இஸ்ரேலையும் தோற்கடித்து விட்டதாக தங்கள் ஆதரவாளர் களிடம் பல வாரங்களாக கூறி வருகின்றனர். எனவே அணுசக்தி விவகாரத்தில் செய்யப்படும் எந்தவொரு சமரசமும் வெற்றி அறிவிக்கப்பட்ட பின் செய்யப்பட்ட விட்டுக்கொடுப்பாக விமர்சகர்களால் பார்க்கப்படக்கூடும்.குறுகிய கால அடிப்படையில் டிரம்பிற்கு மிக முக்கிய வெற்றி, ஹோர்மூஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படுவதும், அதன் விளைவாக உலகளவில் வர்த்தகம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குத் திரும்புவதுமே இதன் முக்கிய காரணியாக விளங்குகிறது. தற்போதைய நிலையில் போர் நீண்டுகொண்டே சென்றதாலும், பெட்ரோல் விலை உயர்வு மற்றும் போரினால் தங்கள் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்ட விளைவுகள் குறித்து அமெரிக்க மக்கள் அதிருப்தி அடைந்து வருவதை கருத்துக்கணிப்புகள் தொடர்ந்து காட்டின.பொருளாதார நிலைமை குறித்த அதிருப்தியே அமெரிக்க மக்கள் டிரம்பை மீண்டும் அதிபராக தேர்ந்தெடுத்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்று.

எனவே அவர் தொடங்கிய போர், மக்களின் பணப்பையை பாதிக்கிறது என்ற கருத்து அவருக்கு அரசியல் சிக்கலாக மெல்ல மாறி வந்தது.

இத்தகைய சூழலில், இந்த ஒப்பந்தம் டிரம்பிற்குச் சற்று நிம்மதி அளிக்கும். போரை ஒப்பீட்டளவில் விரைவாக முடிவுக்குக் கொண்டு வந்தவராகவும், தேர்தல் பிரசாரத்தில் அவர் தொடர்ந்து விமர்சித்த முடிவில்லாத போர்களில் அமெரிக்கா சிக்கிக் கொள்வதை தடுத்தவராகவும் டிரம்பை முன்னிறுத்த முடியும் என அவரது அரசியல் கூட்டாளிகள் நம்புகின்றனர்.இருப்பினும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் உட்பட இந்த ஒப்பந்தத்தை விமர்சிப்பவர்கள், டிரம்ப் அதிகப்படியான சலுகைகளை வழங்கி இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

அதேநேரத்தில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பற்ற முறையில் வார்த்தை விவாதங்களில் ஈடுபட்டு வருவது வரும் காலங்களில் நீண்ட கால சிக்கல்களை தோற்று விக்கும் மிகவும் முக்கியமான காரணியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எந்த நிலையிலும் ஈரான் தைரியமாக அமெரிக்கா சவால் விடும் வகையில் வெளியேறினார்கள். காரணம் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய நிலையில் பொறுப்பு இல்லாத பேச்சு எதிர்ப்பு தெரிவித்து தான் வெளிவந்தாக தெளிவாக கோடிட்டுக் காட்டுகிறது. தற்போது ஒரே நாளில் 4 மில்லியன் எண்ணெய் பேரல்கள் ஈரான் நாட்டில் இருந்து வெளியேறும் நிலைக்கு ஈரான் தொழில் துறை மிகப் பெரிய அளவில் வளர்ந்து வரும் நிலையில் உலகத்தின் பல்வேறு நாடுகளில் மத்தியில் ஈரான் தனது தொடர்புகளை 60 நாட்கள் வரையிலும் நீடிக்க அமெரிக்கா பூரண விருப்பம் தெரிவித்து உள்ளது.

நிச்சயமாக 60 நாட்களில் சமாதானம் நிறைந்த ஒரு நிரந்தர பாதுகாப்பு சூழலைப் ஏற்படுத்தும் வகையில் அமையும் என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

அதேநேரத்தில் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றுதல் விவகாரத்தில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்பதும் மறுக்க இயலாத உண்மை என்பதே இன்றைய யதார்த்தமான நிலையாக உள்ளது....

# தேசிய கல்வி நிறுவகத்தின் திறந்த பாடசாலை செயற்திட்டத்தின் புத்தளம் பிரதேச கற்கை நிலையமாக புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரி தெரிவு








**(எம்.யூ.எம்.சனூன்)**

இலங்கை கல்வி அமைச்சின் தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் முன்னெடுக் கப்படும் திறந்த பாடசாலை செயற் திட்டத்தின் புத்தளம் பிரதேச கற்கை நிலையங்களுள் ஒன்றாக புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு காஸிமிய்யாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அரச பாடசாலை பாடத்திட்டத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை கண்காணித்து மதிப்பீடு புதன்கிழமை (01) தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிநிதிகள் கல்லூரிக்கு விஜயம் செய்தனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர் கல்வி மற்றும் மாற்றுக் கல்விப் பீடத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஏ.டீ.ஏ.சில்வா, கொரியாவின் யுனெஸ்கோவிற்கான தேசிய ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் நாயகம் திருமதி ஹ்யூன்சூக், கொரியாவின் யுனெஸ்கோவிற்கான தேசிய ஆணைக்குழுவின் நிகழ்ச்சித் திட்ட நிபுணர் திருமதி இன்ஹ்யே, துணைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.துனைசிங், சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஜீ.முனசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.எம்.எஸ்.ஐ.விஜேபண்டார, சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர், திறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் எம்.எச். எம்.நவாஸ் உள்ளிட்ட அதிகாரிகள், கல்லூரி உஸ்தாத்மார்கள், பாடசாலை பாட ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் அஷ்ஷெய்ஹ் எச்.எம். மின்ஹாஜ் இஸ்லாஹி தலைமை தாங்கினார். வருகை தந்த அதிகாரிகள் கல்லூரியின் வகுப்பறைகளைப் பார்வையிட்ட துடன், அரச பாடத்திட்டம் தொடர்பான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள், கல்வி நிர்வாகம் மற்றும் கல்லூரியின் செயற்பாடுகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர்.

இதன்போது, கல்லூரியில் நீண்ட காலமாக அரச பாடத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதைப் பாராட்டி, தமது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

மேலும், இச்செயற்றிட்டத்தின் கீழ் புத்தளம் பிரதேச கற்கை நிலையமாக கல்லூரி தொடர்ந்து செயற்படுவதற் கான பூரண அங்கீகாரத்தை வழங்கிய தோடு, அரச பாடசாலை பாடத் திட்டத்தை தொடர்ந்தும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் தேசிய கல்வி நிறுவகம் வழங்கும் என்றும் உறுதியளித்தனர்.

நிகழ்வின் நிறைவில், வருகை தந்த அதிகாரிகள் கல்லூரியின் விருந்தினர் பதிவுப் புத்தகத்தில் தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர். அதனைத் தொடர்ந்து, அவர்களின் வருகையை நினைவுகூரும் வகையில் மர்ஹூம் மஹ்மூத் ஆலிம் நினைவு முத்திரை பொறிக்கப்பட்ட கல்லூரியின் முதல் நாள் உரை நினைவுப் பரிசாக வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தேசிய கல்வி நிறுவகத்தின் இவ் அங்கீகாரம், புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் கல்விச் சேவைக்கும், தரமான கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் கிடைத்துள்ள மேலும் ஒரு முக்கிய அங்கீகாரமாகக் கருதப்படுகிறது.

## 36 வருட அரச பணியிலிருந்து பீ.எம்.ஏ பதுறுன்னிஷா ஆசிரியை ஓய்வு பெற்றார்







**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டி தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் மற்றும் ஆசிரியர் பீ.எம்.ஏ பதுறுன்நிஷ ாவின் பனி நிறைவும் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலையின் அதிபர் எஸ் எம் அரூஸ் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் கௌரவ அதிதிகளாக கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம் ஜவாத் மற்றும் புத்தளம் வலய கல்விப் பணிமனை யின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ( உடற்கல்வி ) எஸ் டி. பைறுஸமான் (ஓய்வு நிலை) சிறப்பு அதிதிகளாக கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் முன்னாள் அதிபர் எக்ஸ் றெஜினா மற்றும் எம்.பீ சுலைஹா உம்மா ஆகியோருடன் பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் மௌலவி எம்.டி றிப்கான் (றஹ்மானி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஆசியர் சேவையில் 36 வருடங்கள் சேவையாற்றிய பீ.எம் ஏ. பதுறுன்நிஷா கற்பிட்டி ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயம், குறிஞ்சிப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றிய துடன் தில்லையூர் அரசினர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய த்தில் மாத்திரம் சிறிது காலம் அதிபராக கடமை புரிந்துள்ளமை யும் குறிப்பிடத்தக்கது.

## பள்ளிச் சிறார்களுக்கு பொலிசாரின் ஹெல்மெட் அன்பளிப்பு

### தம்புள்ளை பொலிசாரின் முன்மாதிரி

**(எஸ்.எம்.ஜாவித்)**



இன்று பிள்ளைகளின் பல பெற்றோர்கள் மற்றும் பாது காவலர்கள் விடும் நிலையால் பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக அதிக விலைவாசி, பொருளாதார கஷ்டம் காரணமாக அதிகமானவர்கள் மோட்டார் சைக்கிள்களை தமது நாளாந்த போக்குவரத்துக்கு பயன்படுத்தப படுத்துகின்றனர்.

இந்த வகையில் அதிகமானவர்கள் பாடசாலைகள், பகுதி நேர வகுப்புகள் மற்றும் அறநெறி பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அழைத்து செல்லும்போது (ஹெல்மெட்) தலைக் கவசம் போடமால் அழைத்து செல்லுகின்றனர் இதன் போது விபத்துக்கள் ஏற்படும் போது உயிரிழப்புகள் ஏற்பட அதிகம் வாய்ப்பு உள்ளது.

இந்த விடயத்தில் ஒரு விழிப்புணர்வு விடயத்நதை தம்புள்ள பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

தண்டனைச் சீட்டை விட குழந்தையின் உயிர் விலைமதிப் பற்றதுஎன்பதை உலகிற்கு உணர்த்திய தம்புல்லை காவல் துறையினரின் இந்தச் செயல் மிகவும் பாராட்டுக்குரியது.

இருசக்கர வாகனங்களில் ஹெல்மெட் அணியாமல் வரும் பள்ளிச் சிறார்களுக்கு, காவல் துறையினர் தங்கள் சொந்தச் செலவில் இலவசமாக ஹெல் மெட்களை வழங்கியுள்ளனர்.

இது தண்டனையை விட மேலான ஒரு உன்னதமான செயலாகும்.

இத்தகைய மனிதாபிமானம் கொண்ட தம்புல்லை காவல்துறை அதிகாரிகளுக்கு ஒட்டுமொத்த தேசத்தின் மரியாதையும் கிடைக்க வேண்டும்.

## தர்காநகர் அல்ஹம்ராவில் ஊக்குவிப்பு செயலமர்வு







**(பேருவளை, பீ.எம். முக்தார்)**

மாணவர்களையும், பெற்றோரையும் ஊக்குவிக்கும் முகமான ஒரு செயல் அமர்வு நேற்று (27/06/2036) தர்கா நகர், அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

பிரபல டாக்டர் ஷாஃபி சிஹாப்தீன் அவர்கள் வளவாளரா கலந்து கொண்ட இந்த நிகழ்வை, தர்கா நகர் ரூமி ஹாசிம் பவுண்டேஷன் ஏற்பாடு செய்திருந்தது. ரூமி ஹாசிம் பவுண்டேஷன் நிர்வாகி கலாநிதி ஷரூமி ஹாசிம் மற்றும் அதன் செயலாளர் ஐஸூக் அஹமட் ஆகியோரின் அழைப்பை ஏற்று பெருந்திரளான மாணவர்கள், பெற்றோர் மற்றும் விஷேட பிரதிநிகளும் வருகை தந்து இந்த நிகழ்வை சிறப்பித்தனர்.

## அனுராதபுர மாவட்ட மு.கா.மத்திய குழுக் கூட்டம்





அனுராதபுரம் மாவட்டத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு கூட்டம் கடந்த 23 ஆம் திகதி மாவட்டத்தின் அமைப்பாளர், உயர்பீட உறுப்பினர் கே.எம்.ரபீக் (ஆசிரியர்) அவர்களின் தலைமையில் மரதன்கடவலயில் இடம் பெற்றது. இங்கு கட்சியின் முன்னேற்றமான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் எதிர்காலத்தில் கட்சியை வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

# திகாமடுல்ல மீடியா போரம் மற்றும் தேசிய ஊடக கலை இலக்கிய மன்றம் ஒன்றிணைந்து நடாத்திய ஊடக செயலமர்வும், ஒன்று கூடலும்







திகாமடுல்ல மீடியா போரம் மற்றும் தேசிய ஊடக கலை இலக்கிய ஒன்றிணைந்து நடாத்திய ஊடக செயலமர்வும், ஒன்று கூடலும் ஒலுவில் கிரீன்வில்லாஹ் ஹோட்டலில் கடந்த மாதம் 29ஆம் திகதி நடைபெற்றது.

போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். எப். றிபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர்களின் சட்டவரம்புகள், மற்றும் ஊடகவியலாளர்களின் ஒழுக்க விழுமியங்கள் எனும் தலைப்புக் களில் சிரேஷ்ட சட்டத்தரணி, கலாநிதி கே. சமீம், ஊடகவியலாளர், போரத்தின் பிரதித்தலைவர் ஜெஸ்மி எம் மூஸா ஆகியோர் வளவாளராக கலந்த கொண்டு செயலமர்வை நடத்தினர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாஸித் பிரதம அதிதியாகவும், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.யெம். தாஜ், ஊடகவியலாளர் ஏ.ஜீ.எம். தௌபீக், கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

போரத்தின் உறுப்பினர்கள், இலக்கியவாதிகள், கவிஞர்கள் என பலரும் கலந்த கொண்ட நிகழ்வில் துறைசார் பலர் கௌரவிக்கப்பட்டனர் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் ஏ. எல். தௌபீக், மொழிபெயர்ப்பாளர் எம். ஐ. றூசைக், சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.எம்.ஆஸ்பீல், பிரதேச சபை உறுப்பினர் எம்.எச்.பைறூஸ் அதிதிகளினால் பொன்னாடை போத்தி, நினைவுச்சின்னம், வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## இலங்கை 'முஆய் தாய்' வரலாற்றில் புதிய மைல்கல் பதிவு :

# முதுநிலைப் பிரிவில் தங்கம் வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்தார் ஆஷிக்



( ஐ. ஏ. காதிர் கான் )

மினுவாங்கொடை - கல்லொழுவையைச் சேர்ந்த இளம் வீரர் ஆஷிக் நஸீர் (வயது - 20), 7 ஆவது சர்வதேச மற்றும் தாய் தற்காப்புக் கலை விளையாட்டுக்களின் முது நிலைப் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று, 'முது நிலைப் பிரிவில் தங்கம் வென்ற முதல் இலங்கையர்' என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்.

"இந்த வெற்றி என்னுடையது மட்டுமல்ல. இது என் பெற்றோர், என் பயிற்சியாளர், என் கிராமம், மற்றும் என்னை நம்பிய ஒவ்வொரு இலங்கை யருக்கும் சமர்ப்பணம். சண்டைக் களத்தில் நான் தனியாக இல்லை. 22 கோடி இலங்கையர்களின் துஆப் பிரார்த்தனைகளும் என்னோடு இருந்தது" என்று உணர்வு பூர்வமாகத் தெரிவித்தார்.

"எனது இந்த வெற்றிக்கு, உலகக் குத்துச்சண்டை சபையின் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர் ரொஷான் துமிந்த, தலைமைப் பயிற்சியாளர் சயான் இந்துவர ஆகியோரின் அர்ப்பணிப்புகளும் பிரதான காரணம்" என்றும் ஆஷிக் குறிப்பிட்டார்.

தாய்லாந்து - பாங்கொக்கில் ஜூன் 26 வெள்ளிக் கிழமை நடந்த இப்போட்டியில், 50 க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன. இப்போட்டியில், இலங்கை வீரர்கள் தங்கப் பதக்கம் - 01, வெள்ளிப் பதக்கம் - 01, வெண்களப் பதக்கங்கள் - 04 என்ற அடிப்படையில் வென்றுள்ள நிலையில், இதில் இளம் வீரர் ஆஷிக் தங்கப் பதக்கம் வென்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"இந்த வெற்றியானது, தேசிய அளவிலான முக்கிய சாதனையாகும். இலங்கையின் 'முஆய் தாய்' விளையாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது. 'Senior பிரிவு' என்பது, 'அனுபவம் வாய்ந்த, உலகின் தலை சிறந்த வீரர்கள் மோதும் களம்' என்பதால், இந்தத் தங்கம் சாதாரண சாதனை அல்ல" என்று விளையாட்டு வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்து ள்ளனர்.

இலங்கை 'முஆய் தாய்' சபையின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், "இது ஒரு தனி நபரின் வெற்றி மட்டுமல்ல, இது இலங்கை முழுவதற்குமான பெருமை மிகுந்த வெற்றியாகும். அடுத்த தலை முறை வீரர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய உந்து சக்தியாகவும் அமையும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இளம் வீரர் ஆஷிக்கின் இந்தச் சாதனைக்குப் பின்னால் பல வருட கடின உழைப்பு, தளராத அர்ப்பணிப்பு மற்றும் விடா முயற்சி ஆகியவை அடங்கியுள்ளன. காயங்கள், தோல்விகள், வசதிக் குறைபாடுகள் என பல தடைகளைத் தாண்டி, அவர் இந்த உச்சத்தைத் தொட்டுள்ளார்.





அவரது போராட்ட மனப்பான்மை மற்றும் நாட்டுப் பற்று, 22 கோடி இலங்கையர்களை பெருமையால் தலை நிமிரச் செய்துள்ளது.

இளம் வீரர் ஆஷிக்கின் இந்த வெற்றிக்கு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே, இலங்கை 'முஆய் தாய்' சபையின் குழு மற்றும் நாடு முழுவதும் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வாழ்துத் தெரிவித்து வருகின்றனர்.

"உங்கள் கடின உழைப்பு அர்ப்பணிப்பு மற்றும் போராட்ட மனப்பான்மை எங்கள் இலங்கைத் திரு நாட்டிற்கு பேரும் புகழும் சேர்த்துள்ளன. வாழ்த்துக்கள் சாம்பியனே!" என்று வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

இலங்கையின் 'முஆய் தாய்' வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதப்பட்டுள்ள நிலையில், 'Senior Category' என்பது, 'முஆய் தாய்' விளையாட்டின் உயர்ந்த, மிகவும் போட்டி நிறைந்த வயதுப் பிரிவாகும். இதில், இலங்கையிலிருந்து ஒருவர் தங்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.




இளம் வீரர் ஆஷிக்கின் இது ஒரு தேசியப் பெருமை. இந்த வெற்றி, இலங்கையின் 'முஆய் தாய்' விளையாட்டு உலக அரங்கில் தனக்கென ஒரு அடையாளத்தைப் பதித்துள்ளது. அத்தோடு, இதுவரை இருந்த சந்தேகங்களையும் உடைத்து எறிந்துள்ளது.

இளம் வீரர் ஆஷிக், அடுத்த தலைமுறைக்கு உத்வேகம் கொடுத்துள்ளார். தென், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மேல் மாகாண மினுவாங்கொடை - கல்லொழுவையிலும் கையுறை அணியும் ஒவ்வொரு சிறுவனுக்கும் ஆஷிக் இப்போது ஒரு நடமாடும் உதாரணம். "நம்மாலும் முடியும்" என்ற நம்பிக்கையை அவர் விதைத்துள்ளார்.

ஆஷிக்கின் வெற்றிக்குப் பின்னால் நம்பிக்கையும் தன்னார்வமும் இருந்தது. ஆஷிக்கின் இந்தத் தங்கம் ஒரே நாளில் வந்து சேர்ந்தது அல்ல. இது அவரின் கடின உழைப்பு. நாள் முழுக்க ஜிம்மில் வியர்வை சிந்திய உழைப்பு. அவரது அர்ப்பணிப்பு. குடும்பம், நண்பர்கள், வசதிகள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, விளையாட்டுக்கு மாத்திரமே ஆஷிக் வாழ்ந்த வாழ்க்கை. அவரது போராட்ட மனப்பான்மை. விழுந்து எழுந்து, அடிபட்டு மீண்டும் ரிங்கிற்குள் வந்த அந்தச் சிங்க மனம் தான், இன்று அவருக்குக் கிரீடம் சூட்டியுள்ளது.

"இளம் வீரர் ஆஷிக் சாம்பியனே! உங்கள் இந்தச் சாதனை எங்கள் நாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம். நீங்கள் ரிங்கில் அடித்த ஒவ்வொரு குத்தும், இலங்கையின் பெயரை உலகம் முழுக்க ஒலிக்கச் செய்துள்ளது. வாழ்துக்கள் சாம்பியனே! நீங்கள் எங்கள் அனைவருக்கும் பெருமை!

மினுவாங்கொடை - கல்லொழுவை, தக்கியா வீதியைச் சேர்ந்த மர்ஹூம் நஸீர் நூர்தீன் - பாத்திமா றிஸ்மியா தம்பதியினரின் புதல்வரான இளம் வீரர் ஆஷிக் நஸீர், கல்லொழுவை 'லூத்தா' சர்வதேச ஆங்கிலப் பாடசாலையில் கல்வி பயின்றவர். 'முஆய் தாய்' விளையாட்டு அரங்கில் தங்கப் பதக்கம் வென்று, (30) செவ்வாய்க்கிழமை இரவு நாடு திரும்பிய இளம் வீரர் ஆஷிக் நஸீருக்கு, அவர் பிறந்து வளர்ந்த கல்லொழுவை கிராம மக்களால் இன மத மொழி வேறு பாடுகளையும் கடந்து (01) புதன்கிழமை காலை, கல்லொழுவை - அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மகத்தான பெரு வரவேற்பளிக்கப் பட்டமை பாராட்டத்தக்கது. அத்தோடு, சிங்கள சகோதரர்களாலும் மினுவாங்கொடை நாலந்தா ஆண்கள் கல்லூரியில் வைத்து இளம் வீரர் ஆஷிக் நஸீர் (வயது - 20) மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்று வந்த மினுவாங்கொடை பத்தண்டுவனயைச் சேர்ந்த இளம் வீரர் குலுனு நெத்துசர (வயது - 15) பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் விசேட அம்சமாக அமைந்திருந்தன.

# 25 வருடத்துக்கு பின் பாத்திமாவில் புதிய வகுப்பறை கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு





(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில், புத்தளம் மாநாகர முதல்வர் பொறியியலாளர் ரின்ஷாத் அஹ்மதின் தொடர் முயற்சியினால் தற்போதைய அரசாங்கத்தின் 29 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீட்டில் பெறப்பட்ட 90 ஒ 25 அளவிலான கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை கல்லூரி அதிபர் திருமதி ஏ.எல்.ஸரீனா பர்வீன் தலைமையில் இடம்பெற்றது.

64 வருட வரலாற்றைக் கொண்ட புத்தளம் பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம் கல்வி, இணைப்பாட விதான செயற்பாடுகளில் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் வேளை பௌதீக ரீதியாக பின் தங்கிய நிலையில் காணப்பட்டு வருகின்றது.

மிகவும் அத்தியாவசிய தேவையான வகுப்பைறை கட்டடம் சுமார் 25 ஆண்டுகளாக அவ்வப்போதைய அரசியல் பிரமுகர்கள் முயற்சி செய்தும் கைக்கூடாமல் போனது.

இந்நிலையிலையே இந்த அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அரச நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன கலந்து சிறப்பித்தார்.

மேலும் புத்தளம் மாவட்ட ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜானக, எம்.ஜே.எம்.பைசல் மற்றும் புத்தளம் மாநகர முதல்வர் ரின்ஷாத் அஹ்மத் உட்பட மாநகர சபை உறுப்பினர்களுடன், புத்தளம் வடக்கு கோட்ட பணிப்பாளர் திருமதி ஏ. நஸ்லியா பேகம், கற்பிட்டி கோட்ட பணிப்பாளர் ஏ.எம்.ஜவாத் , பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் டாக்டர் நைஜீல் மற்றும் உறுப்பினர்கள், பழைய மாணவ சங்க செயலாளர் திருமதி இனூஷா மற்றும் உறுப்பினர்கள், புத்தளம் பெரிய பள்ளி தலைவர் ஏ.டீ.எம்.நிஜாம், ஒய்வு நிலை அதிபர் திருமதி பிந்தாரி சாபார், விஞ்ஞான கல்லூரி அதிபர் ஐ.எல். சிராஜ்தீன், முன்னாள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள், நலன் விரும்பிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் அனுசரணையில் நிந்தவூரில் நூல் வெளியீடு




அண்மையில் ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் அனுசரணையில் நிந்தவூரில் நடை பெற்ற இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கலைஞர்களின் பௌர்ணமி ஒன்றுகூடல் நிகழ்வின் போது ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரசின் " கல்முனை மாநகர சபை, 1987ல் தொடங்கிய வரலாற்று பிழையின் இன்றைய விளைவுகள்" என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## இரு நடனக் கலை ஆளுமைகளுக்கு அமெரிக்காவில் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிப்பு

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வொன்றில், உலக தமிழ் பல்கலைக்கழகம்




(இர்ஷாத் றஹ்மதுல்லாஹ்)

சார்பில் இரு முக்கிய நடனக் கலை ஆளுமைகளுக்கு கௌரவ கலாநிதி (Honorary Doctorate) பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இலங்கையின் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட டென்மார்க் நாட்டில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பாரதநாட்டியக் கலை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் பிரபல நடன ஆசிரியர் திருமதி சுமித்திரா சுகேந்திரா மற்றும் அமெரிக்காவின் நியூயார்க் நகரைச் சேர்ந்த, நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான நடன அனுபவம் கொண்ட கலைஞர் திருமதி விக்னேஸ்வரி ஜெயகாந்தி ஆகியோருக்கே இந்த உயரிய கௌரவம் வழங்கப்பட்டது.

உலக தமிழ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் கலாநிதி எஸ். எம். ரஷ்மி ரூமி, உலகத் தமிழ் கலை பண்பாட்டுக் கூடத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் டாக்டர் அலெக்ஸ் ராஜ் மற்றும் நியூயார்க் நகரைச் சேர்ந்த கல்வியாளர் ஒருவர் இணைந்து இக்கௌரவ பட்டங்களை வழங்கினர்.

தமிழ் கலை, பண்பாடு மற்றும் பாரதநாட்டியத் துறைகளுக்காக பல தசாப்தங்களாக ஆற்றிய அர்ப்பணிப்பு சேவையைப் பாராட்டும் வகையில் இந்த கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெகு விமரிசையாக இடம்பெற்ற ஹமீத் அல் ஹுஸைனியின் 9 மாடிக் கட்டிட அடிக்கல் நடும் நிகழ்வு






(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

வரலாற்று சிறப்பு மிக்க கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் புதிய 9 மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று (28) அல் ஹாஜ் இலியாஸ் அப்துல் கரீம் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்விற்கு வருகை தந்த பிரமுகர்களை பாடசாலை அதிபர் திருமதி என். ஸானியா டேன் உள்ளிட்ட பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களும் இணைந்து மாலை அனுவித்து வரவேற்றனர்.

ஹமீத் அல்-ஹுசைனியா கல்லூரியில் அல் ஹாஜ் இலியாஸ் அப்துல் கரீம் ஓம்னி பிளொக் புதிய ஒன்பது மாடி வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப் பட்டது பிரதி சபாநாயகர் டொக்டர் ரிஸ்வி ஸாலி பிரதம அதிதியாக பங்கேற்றிருந்தார்.

கொழும்பு 12 ஹமீத் அல்-ஹுசைனியா கல்லூரியின் 141 ஆண்டு கால கல்விப் பாரம்பரியத்தில் புதிய அத்தியாயத்தைப் பதிக்கும் வகையில், இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் முன் மொழியப்பட்டுள்ள ஒன்பது மாடிக் கட்டிடம் கல்வி, விளையாட்டு மற்றும் புத்தாக்க வளாகத்திற்காகவுமாக திட்டமிட்ட இக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (28) கோலாகலமாக நடைபெற்றது.

இந்தப் பாரிய கல்வித் திட்டத்தின் புதிய கட்டிடத்திற்கு "அல் ஹாஜ் இலியாஸ் அப்துல் கரீம் ஓம்னி பிளொக்" (Al Haj Eliyas Abdul Kareem Omni Block) என உத்தியோக பூர்வமாக பெயரிடப்பட்டதுடன், அதற்கான நினைவுக் கல்லும் பிரதம அதிதியாலும் நன்கொடையாளராலும் திறந்து வைக்கப்பட்டதுடன் அடிக்கல்லினை அதிதிகள் பாடசாலை யின் அதிபர் திருமதி என். ஸானியா டேன், நன்கொடையாளரின் குடும்ப உறுப்பினர்கள், மருதானை ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் ரிஸ்வி மரிக்கார், பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் றிஸ்வி முப்தி, 'லைட் ஃபார் லைஃப்' (LFL) அமைப்பின் பிரதிநிதிகள்,

மாகாண மற்றும் பிரதேச சபைகளின் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள் உள்ளிட்டவர்களுடன் பழைய மாணவர்களும் இணைந்து நாட்டினர்.

மறைந்த அல் ஹாஜ் எம்.எச். உமர் அவர்களின் கல்வித் தொலைநோக்குப் பார்வையையும், ஹமீத் அல்ஹுஸைனியா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியையும் அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், லைட் ஃபார் லைஃப் (Light for life– LFL) அமைப்பின் தலைவர் அல் ஹாஜ் எஸ்.எஸ்.யூ. ஜைனுல் ஆப்தீன் தலைமையிலான பணிப்பாளர் சபையின் அழைப்பின் பேரிலும், மலிபன் வோவன்ஸ் (Maliban wovens Pvt. Ltd) ) நிறுவனத்தின் தலைவர் அல் ஹாஜ் இலியாஸ் அப்துல் கரீம் அவர்களின் அனுசரணையிலும் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதிலும் தேசிய அபிவிருத்தியை வலுப்படுத்துவதிலும் தரமான கல்வி மற்றும் நவீன கல்விசார் உட்கட்டமைப்புகள் வகிக்கும் முக்கிய பங்கை அவர் வலியுறுத்தினார், அத்துடன் இந்த முக்கிய முன்னெடுப்பை மேற்கொண்ட 'லைட் ஃபார் லைஃப்' (Light for Life) அமைப்பு மற்றும் ஹமீதியன் சமூகத்தினரின் கூட்டு முயற்சிகளை அவர் பாராட்டினார்.

மேலும்இ கட்டுமானப் பணிகளை தொடங்கி வைக்கும் விதமாக பிரதம அதிதி, கௌரவ அதிதி, அல்-ஹாஜ் எலியாஸ் அப்துல் கரீம் மற்றும் அவரது குடும்பத்தினர், இணைந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வை மேற்கொண்டனர்.

அமைக்கப்படவுள்ள இந்த ஒன்பது மாடிகளைக் கொண்ட கட்டிடம் கல்வி, விளையாட்டு மற்றும் புத்தாக்க வளாகம் இக்கல்லூரிக்காக மேற்கொள்ளப்படும் மிகப்பெரிய கல்விசார் உட்கட்டமைப்பு மேம் பாட்டுத் திட்டங்களில் ஒன்றாகும்.

இது கட்டி முடிக்கப்பட்டதும், நவீன 'ஸ்மார்ட்' வகுப்பறைகள், அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப (ICT) ஆய்வகங்கள், புத்தாக்கம் மற்றும் ஷஆராய்ச்சி வசதிகள், விரிவுரை அரங்குகள், மொழி மையங்கள், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள், மாணவர் மேம்பாட்டு வசதிகள் மற்றும் நவீன நீச்சல் தடாக வளாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய தாக அமைய உள்ளது.

மேற்படி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள், கல்வியாளர்கள், அதிபர்கள், நன்கொடையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலதரப்பட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# 'பறக்கும் மான்'

## என அன்பாக அழைக்கப்பட்ட அபூர்வ மனிதர்

# S.S.P. அப்துல் மஜீத்

- யூசுப் முஸ்தபா -
மெல்போர்ன்,
ஆஸ்திரேலியா

'பலர் காலத்தை கடந்து வாழ்கிறார்கள் ஆனால் சில அபூர்வமானவர்கள் மட்டுமே காலத்தை வென்று சரித்திரம் படைக்கிறார்கள். எம். அப்துல் மஜிட் அத்தகைய அபூர்வமானவர்களில் ஒருவர்.'

திரு. எம். அப்துல் மஜிட் அவர்கள் இன்று கொழும்பில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது இறுதிச் சடங்குகள் அவரது சொந்த ஊரான பொத்துவிலில் நடைபெறும், அங்கு குடும்பத்தினர், நண்பர்கள், அபிமானிகள் மற்றும் பரந்த சமூகம் இந்த மாபெரும் மண்ணின் மைந்தருக்கு இறுதி மரியாதை செலுத்த ஒன்று கூடுவார்கள்.

இலங்கை விளையாட்டு வட்டாரங்களில் 'பறக்கும் மான்' என்று அன்பாக அழைக்கப்படும் எம். அப்துல் மஜிட், ஒரு புகழ்பெற்ற ரக்பி வீரர், சிறந்த காவல்துறை அதிகாரி, இராஜதந்திரி, மதிப்பிற்குரிய அரசியல்வாதி, மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு கருணைமிக்க மனிதர் ஆவார்.

பொத்துவிலில் பிறந்த இவர், பொத்துவில் கிராம சபையின் முன்னாள் தலைவரான 'ராசாப் போடியார்' என்று பிரபலமாக அறியப்பட்ட ஐ. எல். மீராசாஹிபு போடியார் மற்றும் மதிப்பிற்குரிய ஆராச்சி போடியார் குடும்பத்தைச் சேர்ந்த ஜுவைரியத்தும்மா ஆகியோரின் மகனாவார்.

ஒழுக்கம், சேவை மற்றும் சமூகத் தலைமைத்துவ விழுமியங்கள் ஆழமாக வேஷரூன்றிய பன்னிரண்டு குழந்தைகளைக் கொண்ட ஒரு பெரிய குடும்பத்தில் அவர் வளர்ந்தார்.

அவரது ஆரம்பக் கல்வி பொத்துவில் மெதடிஸ்ட் மிஷன் பாடசாலையில் தொடங்கியது, அதனைத் தொடர்ந்து முஸ்லிம் ஆண்கள் பாடசாலை மற்றும் பொத்துவில் மத்திய கல்லூரி ஆகியவற்றில் பயின்றார். சிறு வயதிலிருந்தே ஒரு சிறந்த மாணவரான அவர், கல்வியில் சிறந்து விளங்கி ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்றார். பின்னர் அவர் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தார், அங்கு அருட் தந்தை ஹரோல்ட் ஜான் வெபர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் அவரது அசாதாரண விளையாட்டுத் திறமை செழிக்கத் தொடங்கியது. 1958 இல், அவர் கொழும்பு சாகிரா கல்லூரியில் நுழைந்தார், அங்கு அவரது விளையாட்டுத் திறமை அசாதாரண உயரங்களை எட்டியது.

சாகிரா கல்லூரியில், மஜிட் அவர்கள் தடகளம், உதைப்பந்து மற்றும் ரக்பி ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். அவரது வேகம், சுறுசுறுப்பு மற்றும் அச்சமற்ற தாக்குதல் ஆட்டம் அவரை ஒரு சிறந்த விளையாட்டு வீரராக ஆக்கியது. இருப்பினும், ரக்பி மைதானத்தில்தான் அவர் ஒரு ஜாம்பவானாக மாறினார். அவரது மின்னல் வேக ஓட்டங்களும் இணையற்ற வேகமும் அவருக்கு 'பறக்கும் மான்' என்ற அழியாத புனைப்பெயரைப் பெற்றுக் கொடுத்தன.

அவர் ஊசு ரூ குஊ மற்றும் பின்னர் இலங்கை காவல்துறை ரக்பி அணியை பிரதிநிதித்துவப் படுத்தினார், அங்கு அவர் தனது சகாப்தத்தின் மிகச்சிறந்த விங்கர்களில் ஒருவராக உயர்ந்தார். அவரது தலைமையின் கீழ், காவல்துறை ரக்பி அணி கௌரவமிக்க கிளிஃபோர்ட் கோப்பையைப் பகிர்ந்து கொண்டது உட்பட, இலங்கை



ரக்பி வரலாற்றில் ஒரு மைல்கல்லான வரலாற்று வெற்றியைப் பெற்றது. 1960 களின் நடுப்பகுதி முதல் 1970 களின் முற்பகுதி வரை ரக்பியில் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்திய போது அவரது சிறப்பான ஆட்டம் அவரை தேசிய அரங்கிற்கு கொண்டு சென்றது. இலங்கை தேசிய ரக்பி அணிக்கு தலைமை தாங்கிய முதல் காவல்துறை அதிகாரி என்ற அரிய பெருமையை அவர் பெற்றார், அகில இங்கிலாந்து அணி உட்பட பல முன்னணி சர்வதேச அணிகளுக்கு எதிராக நாட்டை வழிநடத்தினார். விங்கில் அவரது வேகம், தாக்குதலில் அவரது தைரியம் மற்றும் விளையாட்டுத்திறன் ஆகியவை அணியினர் மற்றும் போட்டியாளர்களின் போற்றுதலைப் பெற்றன.

விளையாட்டுகளுக்கு அப்பால், மஜிட் இலங்கை காவல்துறையில் நற்பெயருடன் தேசத்திற்கு சேவை செய்தார், தகுதிகாண் உப போலிஸ் பரிசோதகராக ஆரம்பித்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (SSP) வரை உயர்ந்தார். அவர் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் பொறுப்பதிகாரி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பல சிரேஷ்ட பதவிகளில் பணியாற்றினார். அவரது சிறந்த சேவையானது அவரை தேசிய புலனாய்வுப் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும், பின்னர் இலங்கையின் வரலாற்றில் மிகவும் சவாலான கால கட்டங்களில் ஒன்றில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் நியமிக்க வழிவகுத்தது.

இந்தியாவின் சென்னையில் உள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிக ராலயத்தில் முதல் செயலாளராக பணியாற்றிய போது அவரது சிறந்த சேவை இலங்கைக்கு அப்பாலும் விரிவடைந்தது, இது திறமையான நிர்வாகி மற்றும் இராஜதந்திரி என்ற அவரது நற்பெயரை மேலும் மேம்படுத்தியது.

ரணசிங்க பிரேமதாச மற்றும் ஏ. சி. எஸ். ஹமீத் உள்ளிட்ட தேசியத் தலைவர்களின் கோரிக்கையின் பேரில் மஜிட் பின்னர் அரசியலில் நுழைந்தார், மற்றொரு வழியில் தேசத்திற்கு தனது சேவையைத் தொடர்ந்தார். அவர் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும் பணியாற்றினார், அங்கு அவர் மக்களின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்.

விளையாட்டு, காவல் மற்றும் அரசியலுக்கு அப்பால், மஜிட் ஒரு கூர்மையான சட்ட அறிவையும் சட்டம் மற்றும் நீதி மீது ஆழ்ந்த ஈடுபாட்டையும் கொண்டிருந்தார். அவரது அறிவுசார் ஆர்வத்தையும் வாழ்நாள் முழுவதுமான அறிவின் தேடலையும் பிரதிபலிக்கும் வகையில், அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட சட்ட மாணவராக சேர்ந்தார். பொது வாழ்வின் தேவைகள் காரணமாக அவர் அந்தப் படிப்பை முடிக்கவில்லை என்றாலும், இந்த முயற்சி கற்றல் மற்றும் நீதிக்கான அவரது அர்ப்பணிப்பை பிரதிபலித்தது.

மஜிட் ஒரு கம்பீரமான மற்றும் நேர்த்தியான தோற்றத்தைக் கொண்டிருந்தார். அவர் ஒரு ஆற்றல்மிக்க ஆளுமையாகவும், அரசியல்வாதிகள், விளையாட்டு வீரர்கள், சக ஊழியர்கள் அல்லது சாதாரண கிராமவாசிகள் என சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுடனும் எளிதில் பழகக் கூடிய இயல்பான கவர்ச்சியையும் காந்த சக்தியையும் கொண்டிருந்தார். அவரது கூர்மையான அறிவு, தன்னம்பிக்கையான நடத்தை, பேச்சாற்றல் மற்றும் நகைச்சுவை உணர்வு அவரை சந்தித்த அனைவருக்கும் மறக்க முடியாதவராக மாற்றியது.

ஆயினும், பட்டங்களும் சாதனைகளும் மட்டுமே ஒரு மனிதனின் பெருமையை வரையறுக்காது.

மஜிட் அவர்களை அறிந்தவர்கள் அவரை தாராள மனப்பான்மை, பணிவு, தைரியம் மற்றும் கருணை கொண்ட ஒரு மனிதராகவே நினைவுகூருகிறார்கள். மக்களுக்கு, குறிப்பாக ஏழைகள், பாதிக்கப்படக் கூடியவர்கள் மற்றும் அவரது உதவியை நாடியவர்களுக்கு உதவுவதில் அவர் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இருந்தார். அவர் செய்த உதவிகள் பலரின் வாழ்க்கையைத் தொட்டன, இவை பெரும்பாலும் அவர் உதவியவர்களுக்கு மட்டுமே தெரிந்த அமைதியான சேவைகளாகவே இருந்தன.

மஜிட் ஒரு அர்ப்பணிப்புள்ள கணவராகவும் பெருமைக்குரிய குடும்பஸ்தராகவும் இருந்தார். அவர் பொத்துவில் கிராம சபையின் முன்னாள் தலைவரும், பாணமைப்பற்றுவின் முன்னாள் காசியுமான (நீதிபதி) ஒய். எம். முஸ்தபாவின் மகள் உம்மு சல்மாவை மணந்தார். ஒய். எம். முஸ்தபா அவர்கள் தனது நேர்மை, விவேகம், பரோபகாரம் மற்றும் சமூகத்திற்கான வாழ்நாள் சேவைக்காக பரவலாக மதிக்கப்பட்டவர்.

எனது மறைந்த தந்தை வை. எம். முஸ்தபா, மஜிட்டின் அசாதாரண தலைமைத்துவ குணங்களை சிறு வயதிலேயே அடையாளம் கண்டார். பொத்துவிலின் எதிர்காலத் தலைவராக வருவதற்கு அவருக்கு உள்ள ஆற்றலை முன்கூட்டியே உணர்ந்த அவர், அவரை எங்கள் குடும்பத்தில் மருமகனாகக் கொண்டுவருவதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். சமூகத்திற்கு சேவை செய்யும் பாரம்பரியத்தைத் தொடரத் தேவையான குணம், புத்திசாலித்தனம் மற்றும் பொது மணப்பாண்மை ஆகியவற்றை மஜிட் கொண்டுள்ளார் என்று எனது தந்தை உறுதியாக நம்பினார், மேலும் அவர் பொத்துவில் மற்றும் அதன் மக்களுடன் நெருக்கமாகத் தொடர்பிலிருப்பதைப் பார்க்க விரும்பினார்.

மஜிட்டும் அவரது அன்பு மனைவி உம்மு சல்மாவும் இணைந்து, அன்பு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் கல்விச் சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு குடும்பத்தை உருவாக்கினர். வாழ்நாள் முழுவதுமான அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தின் மூலம் அவர்கள் வளர்த்தெடுத்த விழுமியங்களை அவர்களின் மூன்று குழந்தைகளும் பிரதிபலிக்கிறார்கள்.

அவரது இரண்டு மகன்களான பொறியாளர் ஜஹாங்கிர் மற்றும் மருத்துவர் டாக்டர் ஜம்ஷீத் ஆகியோர் ராயல் கல்லூரியின் சிறந்த பழைய மாணவர்கள், தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கின்றனர். அவரது மகள் ஜஹானா மும்தாஜ் செயின்ட் பிரிட்ஜெட் கான்வென்ட்டின் முன்னாள் மாணவியாவார், தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார்.

அவரை இழந்து வாடும் அவரது அன்பு மனைவி உம்மு சல்மர் அவரது மகன்கள் ஜஹாங்கிர் மற்றும் டாக்டர் ஜம்ஷீத் அவரது மகள் ஜஹானா மும்தாஜ் அவரது மருமகன் டாக்டர் நௌஷாத் கான் அவரது மருமகள்கள் ஷிரீன் ஜஹாங்கிர் மற்றும் ஹலீமுனிசா ஜம்ஷீத் மற்றும் அவரது அன்புப் பேரக்குழந்தைகளான அவாத் மஜிட் நௌஷாத் கான், அஃப்ரின் மினுஷா நௌஷாத் கான், அப்தல் நௌஷாத் கான், தாபிஷ் மஜிட், ஆஹில் மஜிட், தலியா மஜிட் மற்றும் ரோஹைல் மஜிட் ஆகியோர் அவரை அன்புடன் நினைவுகூருகின்றனர்.

தனது குழந்தைகளின் சாதனைகளைக் கண்டு அவர் பெருமையடைந்தார், மேலும் தனது குடும்பத்தின் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக அவர் கண்ட தனது பேரக் குழந்தைகளின் அன்பு மற்றும் சிரிப்பில் பெரும் மகிழ்ச்சியைக் கண்டார்.

தனிப்பட்ட முறையில், மஜிட்டுடனான எனது உறவு வழக்கமான மைத்துனர் உறவை விட மிகவும் ஆழமானது. எங்கள் குடும்பங்கள் இரண்டு திரு-மணங்களால் இணைக்கப்பட்டன: அவர் எனது அன்பான சகோதரி உம்மு சல்மாவை மணந்தார், அதே சமயம் அவரது சகோதரி சல்மா உம்மாவை மணக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இந்த அரிய மற்றும் அழகான பிணைப்பு பல தசாப்தங்களாக எங்கள் உறவை மிகவும் நெருக்கமாக்கியதுடன், எங்கள் குடும்பங்களுக்கிடையே உள்ள அன்பு, நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதையை வலுப்படுத்தியது.

அவரது மைத்துனராக, நான் அவரை ஒரு சிறந்த பொது நபராக மட்டும் நினைவுகூரவில்லை, தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு பலத்தையும் உறுதியையும் அளித்த அன்பான, கண்ணியமான மற்றும் ஆழமான அக்கறையுள்ள மனிதராகவே நினைவுகூருகிறேன்.

அவரது மறைவு ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறிக்கிறது. ஆனால் ஜாம்பவான்கள் ஒரு போதும் உண்மையாக மரணிப்பதில்லை.

அவர்கள் நினைவுகளிலும், அவர்கள் வலுப்படுத்திய நிறுவனங்களிலும், அவர்கள் தொட்ட வாழ்க்கைகளிலும், அவர்கள் உருவாக்கிய வரலாற்றிலும் தொடர்ந்து வாழ்கிறார்கள்.

சிலர் வரலாற்றைக் கடந்து செல்கிறார்கள். சில அபூர்வமானவர்கள் அதனை உருவாக்குகிறார்கள். எம். அப்துல் மஜிட் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது குறைகளை மன்னித்து, அவர் மீது தனது கருணையைப் பொழிந்து, அவருக்கு நித்திய சாந்தியை அளித்து, அவரை ஜன்னத்துல் பிர்தௌஸில் சேர்த்தருள்வானாக.

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் (நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், மேலும் நிச்சயமாக அவனிடமே நாம் திரும்பிச் செல்லக்கூடியவர்கள்.)

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்

(எம்.யூ.எம்.சனூன்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் ஏற்பாட்டில் புத்தளம் ஆயுர்வேத வைத்தியசாலை, புத்தளம் மாநகர சபை, வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகம் மற்றும் மஸ்ஜித் சம்மேளனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் மற்றும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி கடந்த 4ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை வேப்பமடு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இம்மருத்துவ முகாமில் 96 ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகளையும் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியையும் பயனுள்ளதாகப் பெற்றுக் கொண்டனர்.






வழங்கப்பட்ட மருத்துவ சேவைகள் மூட்டு வலி, நரம்பு வலி, இடுப்பு வலி, முழங்கால் வலி, மூட்டு வீக்கம் மற்றும் முடக்கு வாதம், குதிகால் வலி, மலச்சிக்கல் மற்றும் குடல் தொடர்பான நோய்கள்,நீரிழிவு நோய், அதிக இரத்த அழுத்தம், அஜீரணம், வயிற்று வலி மற்றும் காய்ச்சல், பெண்களின் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகள் உடல் மற்றும் மூட்டு தொடர்பான சிகிச்சைகள், அனைத்து வகையான சரும நோய்கள் மூலம் மற்றும் குடல் தொடர்பான பிரச்சினைகள், ஆண் மற்றும் பெண் பாலியல் தொடர்பான ஆலோசனைகள், ஊசி மருத்துவ சிகிச்சை, உளவியல் ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டன.

இலவச மருத்துவ பரிசோதனைகள் இரத்தச் சர்க்கரை, கொலஸ்ட்ரால், இரத்த அழுத்தம், கண் பரிசோதனை என்பனவும் இடம்பெற்றன.

இலவச மருந்து வழங்கல் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து மருந்துகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டன.


டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை வைத்தியர் எம்.எஸ்.முனவ்வர் தெளிவாகவும் பயனுள்ளதாகவும் வழங்கினார்.

மருத்துவ சேவையில் பங்கேற்ற வைத்தியர்கள், வைத்தியர் முனவ்வர், வைத்தியர் பாஹிம், வைத்தியர் நைஜில், வைத்தியர் பஹ்மி, வைத்தியர் ஹில்மியா மற்றும் பயிற்சி வைத்தியர்கள்.

இந்நிகழ்விற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அனைத்து வைத்தியர்களுக்கும், இணை ஏற்பாட்டாளர்களுக்கும், மாநகர சபை ஊழியர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

# சாரதிகளிடம் நிறுவனத்திற்கு கொமிசன் கட்டணம் அறவிடாது சேவை வழங்கும் செயலி




(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

'Zero Commission' முறைமையில் அறிமுகமானது TruRout செயலி- கொழும்பில் உத்தியோகபூர்வ அறிமுகம் ஜூலை 7 முதல் பயணிகள் முன்பதிவு செய்யலாம்

டாக்ஸி சேவைத் துறையில் ஓட்டுநர்களிடமிருந்து கமிஷன் அறவிடாத "Zero Commission" முறைமையை அடிப்படையாகக் கொண்ட TruRout செயலி, நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மொஹமட் முனாசர் முனாஸ் தலைமையில் இன்று பத்தரமுல்லை வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப் பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய நிறுவனத்தின் பிரதிநிதிகள், தற்போது இயங்கிவரும் சில டாக்ஸி சேவை செயலிகள் ஓட்டுநர்களின் வருமானத்தில் சுமார் 15 முதல் 27 சதவீதம் வரை கமிஷன் அறவிடுவதாகவும், அதற்கு மாற்றாக எந்தவித கமிஷனும் இல்லாத சேவையை வழங்குவதே வுசரசுழரவ செயலியின் பிரதான நோக்கம் என்றும் தெரிவித்தனர்.

இதன்படி, ஓட்டுநர்கள் 24 மணி நேர சந்தா (Subscription) அடிப்படையில் ரூ.250 செலுத்தி செயலியைப் பயன்படுத்த முடியும். அந்தக் காலப் பகுதியில் அவர்கள் ஈட்டும் முழு வருமானமும் ஓட்டுநருக்கே சொந்தமானதாக இருக்கும் என்றும், நிறுவனம் அதிலிருந்து எந்தவித கமிஷனையும் பெற்றுக்கொள்ளாது என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், ஓட்டுநர்களுக்கு 12 மணி நேர சலுகைக் காலம் (Grace Period) வழங்கப்படுவதாகவும், உடனடியாக சந்தா தொகையை செலுத்த முடியாதவர்கள் அந்தக் காலத்திற்குள் சேவையை மேற்கொண்டு பின்னர் கட்டணத்தைச் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. டிஜிட்டல் கட்டணப் பரிவர்த்தனைகள் இடம்பெற்றால், சந்தா தொகை மட்டுமே தானாகக் கழிக்கப்படும் என்றும், பயணக் கட்டணத்தில் இருந்து வேறு எந்தக் கமிஷனும் பிடித்தம் செய்யப்படமாட்டாது என்றும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

நிறுவனத்தின் அறிவிப்பின்படி, எதிர்வரும் ஜூலை 7 முதல் பயணிகள் வுசரசுழரவ செயலி ஊடாக டாக்ஸி சேவையை முன்பதிவு செய்ய முடியும். ஆரம்ப கட்டமாக கொழும்பில் சேவை அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன், பின்னர் நாடு முழுவதும் விரிவுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன் வுசரசுழரவ செயலியின் வியாபார பிராண்ட் தூதுவராக இலங்கையின் பிரபல யூடியூபர் அஷேன் சேனரத்ன நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பாதுகாப்பு காரணங்களைக் கருத்தில் கொண்டு, ஆரம்ப கட்டத்தில் மோட்டார் சைக்கிள் சேவை வழங்கப்படமாட்டாது என்றும், எதிர்காலத்தில் அதனை அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலனை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மேலும் உரையாற்றிய நிறுவனத்தின் பிரதிநிதிகள், இந்த முயற்சி வெறுமனே இலாப நோக்கத்திற்காக அல்லாமல், டாக்ஸி ஓட்டுநர்களின் வருமானத்தைப் பாதுகாத்து, அவர்களுக்கு நியாயமான தொழில் வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

அத்துடன், நாடு முழுவதும் உள்ள டாக்ஸி ஓட்டுநர்கள் TruRout செயலியில் பதிவு செய்து பயன்பெறுமாறும், பயணிகளும் செயலியைப் பயன்படுத்தி சேவையை அனுபவிக்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும், செயலி தொடர்பான மேலதிக தகவல்களை நிறுவனத்தின் சமூக ஊடகப் பக்கங்களிலும் மின்னணு செயலி பதிவிறக்க தளங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

# மாத்தளை நிககொள்ள அம்வான் அமைப்பினால் விழிப்பூட்டல் நிகழ்ச்சி



(மாத்தளை எம்.சதூர்தீன்)

மாத்தளை நிககொள்ள அம்வான் அமைப்பின் ஏற்பாட்டில் நல்லொழுக்கம் உள்ள மாணவர் சமூகத்தை உருவாக்குதல் எனும் கருப்பொருளில் விழிப்பூட்டும் நிகழ்ச்சியொன்று நேற்று முன் தினம் நிககொள்ள ஜும்ஆ பள்ளிவாயலில் இடம் பெற்றது.

இதன் போது விசேட வளவாளராக கலந்து கொண்ட மாத்தளை மந்தன்டாவல ஜும்ஆ பள்ளி வாயலின் இடம் பெற்று வரும் பகுதி நேர ஹிப்ழ் மத்ரஸாவின் விரிவுரையாளர் அஷ்ஷெக் அஹ்ஸானால் இந்த விழிப்பூட்டும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது

# வனவிலங்கு அதிகாரிகளுக்கு பதக்கங்கள் அணிவிக்கும் நிகழ்வு



(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

வனவிலங்கு மற்றும் தாவரப் பாதுகாப்புச் சட்டத்திற்கு இணங்க நாட்டின் தாவரங்களைப் பாதுகாப்பதில் பெரும் சேவையாற்றிய 60 தகுதிவாய்ந்த வனவிலங்கு அதிகாரிகளுக்கு பதக்கங்கள் வழங்கும் இரண்டாவது விழா (28) கிரித்தலை தேசிய வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

வனவிலங்கு அதிகாரிகளாகப் பணியாற்றும் அதிகாரிகளுக்கு தேவைப் படும் பயிற்சி வகுப்புகளை வேற்றிகரமாக முடிக்கும் அதிகாரிகளுக்கு வனவிலங்கு பாதுகாப்புத் துறை ஆண்டுதோறும் பதக்கங்களை வழங்கி கௌரவித்து வருகிறது.

வனவிலங்கு மேலாண்மையில் இளநிலை, முதுநிலை சான்றிதழ் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு உள்ளிட்ட 07 துறைகளிலும் வனவிலங்கு அதிகாரிகள் பெற்ற அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

அதிகாரிகளின் சேவைக் காலத்தையும் இது வரை அவர்கள் ஆற்றிய ஒட்டுமொத்த சேவைகளையும் பாராட்டி அவர்களின் திறமையை அதிகரித்து பொருத்தமான பதக்கங்களை வழங்குவதன் மூலம் அவர்களின் பெருமிதத்தையும் தன்னம்பிக்கையையும் மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

வனவிலங்கு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ்.எஸ். ஆர்.பீ. மாரசிங்க தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# சாரணத் தலைவர்களுக்கான மூன்று நாள் செயலமர்வு





(ரிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் பயிற்சி குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தருச்சின்னம் பெற்ற சாரணத் தலைவர்கள், தலைவியர்களுக்கான மூன்று நாள் பயிற்சி செயலமர்வு கடந்த வெள்ளிகிழமை ஆரம்பிக்கப்பட்டு கடந்த 5ஆம் திகதி நிறைவடைந்தது. மீரிகம லீ திசாநாயக்க பயிற்சி நிலையத்தில் பிரத சாரண ஆணையாளர் சட்டத்தரணி மனோஜ் நாணயக்காரவின் வழி காட்டலின் கீழ் தேசிய பயிற்சி ஆணையாளர் கேணல் பத்மலால் பெரேரா தலைமையில் நடை பெற்ற இப்பயிற்சிப் செயலமர்வில் பல்வேறு சாரணர் மாவட்டங்களிருந்து 40க்கும் மேற்பட்ட சாரணத் தலைவர்களும், தலைவிகளும் கலந்து கொண்டுபயிற்சிகளை பெற்றனர்.

ஜனாதிபதி சாரணர்கள் மற்றும் சாரணர்களின் அறிவு மட்டத்தை உயர்த்துதல்,,தலைமைத்துவ செயற்பாடுகள், சாரணர் புதிய வழிகாட்டல்கள் என பல்வேறு தலைப்புக்களில் மேற்படி செயவமர்வு பயிற்சி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புழுவின் உருவகமும் சமூகத்தின் மௌனமும்



நாச்சியாரீவு பர்வீன்

## சம்மாந்துறை மஷூறாவின் "நானும் ஒரு புழுவும்" கவிதை - ஒரு திறனாய்வு

இன்றைய தமிழ் புதுக்கவிதைகளில் பெண்ணின் உடல், உளவியல், சமூக அனுபவம் ஆகியவை பல்வேறு குறியீடுகளின் வழியாகப் பேசப்படுகின்றன. அவ்வகையில் சம்மாந்துறை மஷூறாவின் "நானும் ஒரு புழுவும்" என்ற கவிதை, அன்றாட வாழ்வில் நிகழும் ஒரு சாதாரண நிகழ்வைப் பதிவு செய்வதற்காக எழுதப்பட்ட கவிதையல்ல. மாறாக, பெண் உடலின் மீதான அத்துமீறலையும், அதனை இயல்பாக்கிப் பழகிவிட்ட சமூகத்தின் மௌனத்தையும், அதனால் உருவாகும் மன உளைச்சலையும் கூர்மையான உருவகத்தின் வழி பதிவு செய்யும் எதிர்ப்புக் கவிதையாக இது விளங்குகிறது.

கவிதை தொடங்கும் முதல் வரிகளிலேயே வாசகர் ஒரு நெரிசலான பேருந்திற்குள் அழைத்துச் செல்லப்படுகிறார். அந்த இடம் வெறும் போக்குவரத்து வெளியாக இல்லாமல், பெண் தன்னுடைய பாதுகாப்பை இழக்கும் சமூக வெளியாக மாறுகிறது. "அசௌகரியம் தருகிறது அந்த அற்ப புழு" என்ற வரியில் இடம்பெறும் "புழு" என்பது இயற்கையில் வாழும் உயிரினம் அல்ல பெண்களின் தனிமனித எல்லைகளை மதிக்காமல் அவர்களை அச்சுறுத்தும் மனித மனநிலையின் குறியீடாக மாறுகிறது. "வண்ணங்கள் சுமந்ததோர், வடிவான புழுதான்" என்ற வரிகள் மிகவும் நுட்பமான சமூக விமர்சனத்தை முன்வைக்கின்றன. வெளிப்புற தோற்றத்தில் நாகரிகமான மனிதராகத் தோன்றுபவன், நடத்தையில் அருவருப்பூட்டும் புழுவாக மாறுகிறான் என்பதை கவிஞர் மிகச் சுருக்கமான சொற்களில் வெளிப்படுத்துகிறார். மனிதனின் வெளிப்புற அடையாளங்களுக்கும்




உள்ளார்ந்த ஒழுக்கத்திற்கும் இடையிலான முரண்பாடு இவ்வரிகளில் வெளிக்கிடப்படுகிறது. "எண்ணிக்கை தெரியாத அதன் கால்களால் தடயமாகிறது கீறல்கள்" என்ற வரிகள் கவிதையின் உச்சமாகக் கருதப்படலாம். இக்கீறல்கள் உடலில் தோன்றும் கீறல்கள் அல்ல் அவை பெண்ணின் நினைவிலும் மனதிலும் வாழ்நாள் முழுவதும் பதிந்திருக்கும் உளவியல் வடுக்களாகும். பாலியல் அத்துமீறல் என்பது உடலை மட்டுமல்ல, மனிதனின் சுயமரியாதையையும் பாதுகாப்பு உணர்வையும் சிதைக்கும் வன்முறை என்பதை கவிஞர் மறைமுகமாக உணர்த்துகிறார்.

இக்கவிதையின் மற்றொரு முக்கியமான பரிமாணம் சமூகத்தின் மௌனத்தைப் பதிவு செய்வதாகும். பாதிக்கப்பட்டவர் உதவியை எதிர்பார்த்து சுற்றிலும் பார்வையைச் செலுத்துகிறார். ஆனால் அந்தப் பார்வைக்கு எந்தப் பதிலும் கிடைப்பதில்லை. "காணக் கிடைக்காத ஆதரவு" என்ற ஒரு சொற்றொடரே நமது சமூகத்தின் ஒட்டுமொத்த தோல்வியைச் சுட்டிக்காட்டுகிறது. அநீதியைக் கண்டும் தலையிடாத மனநிலை, குற்றவாளிக்கான மறைமுக ஆதரவாகவே மாறுகிறது என்பதை இந்தக் கவிதை வலியுறுத்துகிறது.

கவிதையின் இறுதிப்பகுதியில் மன நிலையின் மாற்றம் நிகழ்கிறது. பிறரின் ஆதரவை எதிர்பார்த்த நிலைமையிலிருந்து, "யாரது ஆதரவும் வேண்டியதில்லையென்ற வீறாப்போடு துணிகிறேன்" என்ற மன உறுதிக்குச் செல்கிறாள் கவிதையின் குரல். இது வெறும் தனிப்பட்ட தைரியமல்ல மௌனத்தை உடைத்து எதிர்க்கும் பெண்ணிய விழிப்புணர்வின் வெளிப்பாடாக வாசிக்கப்பட வேண்டும்.

"இனம் கண்டு, நகர்ந்து செல்கிறது புழுவாய் அவன் பார்வை" என்ற இறுதி வரி கவிதையை மேலும் ஆழப்படுத்துகிறது. இங்கு உடலால் விலகிச் சென்ற மனிதன், தனது பார்வையால் இன்னும் அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறான். பெண்களை மனிதர்களாக அல்ல, இரையாகப் பார்க்கும் ஆணாதிக்கப் பார்வை இன்னும் உயிரோடு இருப்பதை இந்த வரி துல்லியமாகப் பதிவு செய்கிறது.

மொழிநடையைப் பொறுத்தவரை, மஷூறா மிக எளிய சொற்களைப் பயன்படுத்தியிருக் கிறார். ஆனால் அவை வாசகரின் மனதில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எந்தவித அலங்கார மொழியையும் நாடாமல், அனுபவத்தின் உண்மையை நேரடியாகப் பேசும் இந்த நடை, கவிதையின் வலிமையை அதிகரிக்கிறது. "புழு" என்ற ஒற்றை உருவகமே முழுக் கவிதையையும் தாங்கிச் செல்லும் மையக் குறியீடாக விளங்குகிறது. மொத்தத்தில், "நானும் ஒரு புழுவும்" என்பது தனிப்பட்ட அனுபவத்தின் பதிவு மட்டுமல்ல் பெண்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களையும், சமூகத்தின் பொறுப்பின்மையையும், எதிர்ப்பின் அவசியத்தையும் பதிவு செய்யும் ஆழமான சமூகக் கவிதையாகும். கவிதையின் வெற்றி அதன் சொல்லாட்சியில் இல்லை் வாசித்து முடித்த பின்னரும் மனதில் நீடிக்கும் அதன் கேள்விகளில்தான் உள்ளது. பெண்ணின் உடலை அத்துமீறிப் பார்க்கும் பார்வைகள் அழியாதவரை, இத்தகைய கவிதைகள் சமூகத்தின் மனசாட்சியைத் தொடர்ந்து உலுக்கும் இலக்கிய ஆவணங்களாகவே நிலைத்திருக்கும்.

**அபூ ஸைனப்**

## விடியலைத் தேடும் விழிகள்

காலத்தை கணிப்பதற்குள்
என் பருவங்கள் மாறின
மங்கை நான் என்பதற்காய்
எனக்கு மறுப்புகள் கூடின

விதியை நொந்தவளாய்
விரக்தியில் விழுந்தவளாய்
சுயத்தை தொலைத்தே
பயத்தில் வாழ்கிறேன்

திறமைக்கு இடமில்லை
திடமான தீர்வு இல்லை
மடமைக்கு இங்கேதான்
மகுடி வாசிப்போர் அதிகம்

ஏற்றத்தின்போதும்
நான் என் வாழ்வில்
ஏமாற்றத்தின் போதும்
கை கொடுத்து தூக்கிவிட
கருணை மனமில்லாமல்
சுயமாக எழுந்தேன்
சுற்றத்தை உணர்ந்தேன்

கனவுகளை சுமந்து
காலம் கடத்துகின்ற
காரிகை இப்போது நான்
நன்நம்பிக்கை எனும்
தூரிகைக் கொண்டு
நானே என்னை வரைகிறேன்

ஒரு நாள் விடியும்
என் வானம் என்ற நம்பிக்கை
கோடுகளோடு காத்திருக்கிறேன்.

**அகீலா ஜவுபர்**
**ஏத்தாளை, புத்தளம்.**

## அறிவின் துளி மௌனம்!

மனிதர் கூடும் அவைகளில்
காதுகிழிக்கும் பெரும் சத்தம்
நதியின் நயனம் அங்கில்லை

அருவி நகரும் ஒலி இல்லை
அறிவு என்று நினைத்தங்கே
அகங்காரம் கூத்தாடும்

பெருமை கொண்ட கருமுகங்கள்
பேரிறைச்சல் அங்கேதான்
அருமை மனிதன் வாழ்வியலில்

அகந்தை நின்று ஆட்சி செய்யும்
மமதை கொண்ட மானிடனின்
ஆட்டம் இங்கே ஏராளம்

பொய்யை நிரப்பி குவளைக்குள்
மெய்யாய் காட்ட முனைகின்ற
பொய்மை நிறைந்த உலகமிதை
ஐயோ வாழ்வில் சாபம் இது

மாய வளைக்குள் சிக்கி
மனித நேயம் இழந்து வாழும்
காயப்பட்ட மானிடனே
கடந்து வா பொய்களை நீ

அறிவின் தீபம் அகத்திலுள்ளோர்
அகந்தை கொண்டு எழமாட்டார்
மடமை தன்னை மனதில் ஏந்தி
ஆணவத்தால் அவர் விழமாட்டார்

**சே/ஹ மொஹம்மது பெனாஸிரா,**
**முஸ்லிம் ஹல்மில்லாவ,**
**மதவாச்சி.**

## ஒரு நல்ல கவிதை...

ஒரு நல்ல கவிதை என்பது சொற்களின் சுருக்கத்திலும், அவை கடத்தும் ஆழமான அர்த்தத்திலும், படிப்பவர் மனதில் ஏற்படுத்தும் தாக்கத்திலும் இருக்க வேண்டும். அது வெறும் வார்த்தைகளின் கோர்வையாக இல்லாமல், வாசகனை சிந்திக்கவோ அல்லது ஏதேனும் ஒரு உணர்வுக்குள் கடத்தவோ வேண்டும்.

**நல்ல கவிதையின் முக்கிய இயல்புகள்:**

ஆழமான பொருள் (Depth of Meaning), வெளிப்படையான அர்த்தத்திற்கு அப்பால், யோசிக்க யோசிக்க புதிய அர்த்தங்களைத் தர வேண்டும்.

சொற்சிக்கனம் (Brevity): தேவையற்ற சொற்களைத் தவிர்த்து, மிகக் குறைந்த சொற்களில் அதிகபட்ச உணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

புதுமை (Originality): பழகிப்போன உவமைகளைத் தவிர்த்து, புதிய கோணத்தில் உலகைப் பார்க்க வைக்க வேண்டும்.

**உணர்ச்சிப் பரிமாற்றம்** (Emotional Connect): படிப்பவரின் மனதில் ஏதோ ஒரு அதிர்வை (மகிழ்ச்சி, வலி, சிந்தனை) ஏற்படுத்த வேண்டும்.

புதுக்கவிதையின் பிதாமகர்களில் ஒருவரான கவிக்கோ அப்துல் ரஹ்மானின் "மரங்கள்" பற்றிய இந்த வரிகள் ஒரு சிறந்த உதாரணம்:

"ஆடைகள் குறையும் போது
வெட்கப்படும் மனிதர்களுக்கு மத்தியில்,
இலைகள் உதிரும்போது தவம் செய்யும்
மரங்கள்!"

**கவிதையின் சிறப்பு:**

மனிதன் தன் ஆடை குறையும் போது அவமானமாக உணர்கிறான். ஆனால், மரம் தன் இலைகளெல்லாம் உதிர்ந்து (ஆடையில்லாமல்) மொட்டையாக நிற்கும் இலையுதிர் காலத்தைக் கூட, அடுத்த வசந்தத்திற்கான ஒரு 'தவமாக' மாற்றிக் கொள்கிறது. மனிதனின் பலவீனத்தையும் இயற்கையின் பெருந்தன்மையையும் மிக எளிமையான சொற்களில், ஆனால் ஆழமான தத்துவத்தோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் கவிக்கோ.

**நாச்சியாதீவு பர்வீன்**

## காட்சியும் கவிதையும் -01



**கீழே தரப்பட்டுள்ள படத்திற்கு சுருக்கமான ஒரு கவிதையை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம். சிறந்த கவிதைகள் பிரசுரிக்கப்படும். கவிதை எழுதுகின்றவர்கள் கட்டாயம் உங்களது பெயரினை குறிப்பிட தவற வேண்டாம். கவிதைகள் அனுப்பவேண்டிய Whats app இல. 0767877876.**

## அன்பான வாசகர்களே!

**அருவிக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

**0767877876**

## தம்பி



கண்ணான கண்மணியே கவலை இல்லாது வாழ்ந்து விட்டோம்
கணப்பொழுது மறைந்தாலும் கணக்கிறது நினைவுகள்

என்னாலும் எப்பவும் என்னோடு
உதிரத்தால் ஒன்றாகி வளர்ந்து விட்டோம்.

பழமான பழக்கத்தால் பாசமான பண்பான நேசத்தால்
தொடர்ந்து வந்த நம்முறவு மறக்கொனா இனிமையாகவே
பதிவான பெருமையிலே
பல நாட்கள் கூடி மகிழ்ந்தோம்.

ஒன்றாகி விளையாடி நின்றந்த அந்த நினைவுகளும்
பொழுதுகளும் சோராமல் தொடர்ந்தன.

திடீரென உன் இழப்பு
என் நெஞ்சில் தீமழையாய் பொழிந்தது
என்ன விளையாட்டு என்ன மாய உலகம்
நெஞ்சம் பொறுக்குதில்லையே.

உன் பூவான வதனம் கண் விட்டுப் போகுதில்லியே.

ஆயிரம் சொந்தங்கள் என்னிடம் வந்தாலும்
உன் சொந்தத்திற்கு அவைகள் என்றும் ஈடாகாது.

நினைத்தே பார்த்தேனா
சட்டென எனைப் பிரிவாய் என்று காலம் முடிவானது
கண்கள் கண்ணீரை கொட்டித் தான் தீர்த்தது.

என்றும் என் துஆ நான் மறையும் வரை
உனக்காக என் கைகள்
இறைவனையே வேண்டி நிற்கும்.
ஜன்னத்துல் ஃபிர்தௌஸ்ஸில் சொர்க்க பூஞ்சோலையில்
சுகமாக நீ உறங்கு
புன்னகைக்கும் ஹூர்லீன்
உன்னை வலம் வரட்டும்

ஆமீன் ஆமீன்.....

**சித்தி ஜெஸீனா நிஸ்றீன்**
**சாய்ந்தமருது**

# அல் ஹுமைஸரா எமது பெருமை, எமது அடையாளம், எமது வரலாறு




பேருவளை - பீ.எம். முக்தார்

1918 ஆம் ஆண்டு கல்விப் பயணத்தைத் தொடங்கிய பேருவளை - சீனன் கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, நூற்றாண்டுக்கும் மேலான கல்விப் பாரம்பரியத்தை தன்னகத்தே தாங்கி நிற்கும் பெருமைமிக்க கல்வி நிலையமாக விளங்குகிறது.

2018 ஆம் ஆண்டு மிகுந்த சிறப்புடன் நடைபெற்ற நூற்றாண்டு விழாவிற்குப் பின்னர், அந்த வரலாற்றுப் பெருமையை மேலும் மெருகூட்டும் வகையில், “மாபெரும் வீதி நடைபவணி” மற்றும் “பழைய மாணவர் கிரிக்கெட் திருவிழா - 2026” ஆகியவை இன்று (04) ஆயிரக் கணக்கானோரின் பங்கேற்புடன் கோலாகலமாக ஆரம்பமானது.




### வரலாற்றை நினைவூட்டிய மாபெரும் வீதி நடைபவணி

இன்று காலை 8.30 மணியளவில், அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை வளாகத்தில் இருந்து வீதி நடைபவணி ஆரம்பமானது.

இந்த நடைபவணியில்,பாடசாலை அதிபர் ஜே . பர்ஸான் நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

தொழிலதிபர் எம். நஜீப்தீன், இரத்தினக் கல் வர்த்தகர் அல்ஹாஜ் காமில் நளீம், கலீபதுஷ்ஷாதுலி அஷ்செய்க் ஏ . எச் . எம் இஹ்ஸானுத்தீன் (நளீமி), ஊடகவியலாளர் எம் . அஸாம் அமீன், பிரதி அதிபர் எம் . முஸம்மில், பேருவளை நகர பிதா மபாஸிம் அஸாஹிர், பழைய மாணவர் சங்க செயலாளர் அப்ராஸ் அப்துல்லாஹ், பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலாளர் மிஸ்வர் காஸிம், ஸன்ரைஸ் விளையாட்டு கழக செயலாளர் கிஸான் காஸிம், பள்ளிச் சங்க இணைச் செயலாளர் அரூஸ் அனஸ், பள்ளிச் சங்க இனைப் பொருளாளர் ஸவாஹிர் ஸரூக் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் பங்குபற்றினர்.

ஆசிரியர்கள், தற்போதைய மாணவர்கள், ஆயிரக்கணக்கான பழைய மாணவர்கள், பெற்றோர் கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், உலகின் பல நாடுகளில் இருந்து வருகை தந்த பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பொதுமக்கள்என அனைவரும் மிகுந்த உற்சாகத்து டன் கலந்துகொண்டனர்.

### சீனன் கோட்டை முழுவதும் விழாக்கோலம்

நடைபவணி, சீனன் கோட்டை பிரதான வீதி, வடுகொடைச் சந்தி, அக்கரகொடைச் சந்தி, சென்ட் ஆன்ஸ் வீதி, பெரேரா வீதி, மீண்டும் சீனன் கோட்டை பிரதான வீதி, பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல், பத்தை இரத்தினக்கல் வியாபார வளாகம், இப்ராஹிம் ஹாஜியார் மாவத்தை, ஹனீபா ஆலிம் மாவத்தை ஆகிய முக்கிய வீதிகள் வழியாக சுமார் 2.5 கிலோமீற்றர் தூரம் பயணித்து நண்பகல் 12.00 மணியளவில் நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கை வந்தடைந்தது.

வீதியின் இருபுறங்களிலும் நின்றிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கைதட்டி வரவேற்றதுடன், பல இடங்களில் மலர் தூவி உற்சாக வரவேற்பும் அளிக்கப்பட்டது.

### கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜயசூரியவின் வருகை

இந்த மாபெரும் விழாவிற்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர், முன்னாள் தேசிய அணியின் பயிற்சியாளர் மற்றும் உலகப் புகழ்பெற்ற அதிரடி துடுப்பாட்ட வீரரான சனத் ஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, நளீம் ஹாஜியார் விளையாட்ட ரங்கின் நுழைவாயிலில் நடை பவணியை வரவேற்றார்.

அவரது வருகை பழைய மாணவர்கள், மாணவர்கள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

### ஆரம்ப நிகழ்வுகள்

நடைபவணியைத் தொடர்ந்து நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுகள், திருக்குர்ஆன் ஓதலுடன் ஆரம்பிக்கப்பட்டு, தேசிய கீதம், பாடசாலைக் கீதம், நளீம் ஹாஜியார் நினைவு கீதம், அதிபரின் வரவேற்புரை, பிரதம அதிதி சனத் ஜயசூரிய அவர்களின் சிறப்புரை, விசேட விருந்தினர் களின் உரைகள் என சிறப்பாக இடம்பெற்றன.

### 38 பழைய மாணவர் அணிகள் மோதும் கிரிக்கெட் திருவிழா

விழாவின் முக்கிய அம்சமாக, 1984 ஆம் ஆண்டு O/L Batch முதல் 2022 ஆம் ஆண்டு O/L Batch வரை கல்வி கற்ற 38 பழைய மாணவர் அணிகள் பங்கேற்கும் மாபெரும் கிரிக்கெட் திருவிழாவும் ஆரம்பமாகியது.

இது வெறும் விளையாட்டுப் போட்டியாக இல்லாமல், தலைமுறைகளை இணைக்கும் நட்பின் பாலமாகவும், பழைய நினைவுகளை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒன்றுகூடலாகவும், அல்ஹுமைஸரா குடும்பத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகவும் அமைந்துள்ளது.

### அல்ஹுமைஸரா -பெருமையின் அடையாளம்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, தலைமைத்துவம் மற்றும் மனிதநேயப் பண்புகளை வளர்த்தெடுத்த அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, இன்று மீண்டும் தனது ஒற்றுமையையும் சமூக வலிமையையும் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

இந்த மாபெரும் வீதி நடை பவணியும் பழைய மாணவர் கிரிக்கெட் திருவிழாவும், அல்ஹுமைஸரா குடும்பத்தின் ஒற்றுமை, அர்ப்பணிப்பு மற்றும் கல்விப் பாரம்பரியத்தை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும் வகையில் பதிவு செய்துள்ளன.

# சாதாரண தரப் பரீட்சையில் மேல் மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் முதலிடம்: பூகொடை, குமாரிமுல்ல முஸ்லிம் ம.வி. சாதனையாளர்கள் கௌரவிப்பு!

(பூகொட இர்பான் ஹனீபா)

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் பூகொடை, குமாரிமுல்ல முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் 94 சதவீதத்திற்கும் அதிக சித்தி பெற்றமைக்கான பரிசளிப்பு விழா 02ஆம் திகதி பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் DMSM அவுன் அவர்களின் தலைமையில் மிக விமரிசையாக இடம்பெற்றது.

இம்முறை குமாரிமுல்ல முஸ்லிம் மகா வித்தியாலத்தில் இருந்து 34 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி

கணிதம்: 94.1% சித்தி




விஞ்ஞானம்: 97% சித்தி

வரலாறு : 94.1% சித்தி

ஏனைய சகல பாடங்களிலும்: 100% சித்தி பெற்று மேல் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளில் முதலிடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கம்பஹா கல்வி பணிப்பாளர் திரு. அஜிதா பிரியங்கனி, கம்பஹா களனி பிரதி கல்வி பணிப்பாளர் MTM தவ்ஸீர் மற்றும் கல்வி வலயத்தின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

மாணவர்களை பாராட்டி பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப் பட்டதுடன் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்விழாவின் மற்றுமொரு சிறப்பம்சமாக, மாணவர்களின் வசதிக்காகப் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது நுழைவாயில் பிரதம அதிதி அவர்களினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வை பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் மாற்றும் பழைய மாணவிகள் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

# நீதிசேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி இறக்காமத்தில் சுற்றுலா நீதிமன்றம் அமைப்பது தொடர்பில் நடவடிக்கை

**- பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார**



இறக்காமம் பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி மேற்கொள்வதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையில் பாராளுமன்றக்கட்டிடத் தொகுதியில் கடந்த வார பிற்பகுதியில் நடைபெற்றது.
ஆளும்கட்சி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தின் போது திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை இறக்காமத்தில் சுற்றுலா நீதிமன்றம் அமைக்கப் பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்த போது அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இக்கூட்டத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கூறுகையில்,
அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேசத்தில் சுமார் 18 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இதில் சுமார் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாவர். 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசமானது 2012 ஆம் ஆண்டு வரை அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் காணப்பட்டதோடு பின்னர் அது அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் எவ்வித அறிவித்தலும் இன்றி மாற்றப்பட்டது. சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்ட இறக்காமம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசம் இணைக்கப்பட்டமையால் மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.
நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தமிழில் இருந்து சிங்களத்துக்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்பு செய்வதற்காக வழக்குச் செலவுக்கு மேலதிகமாக பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு வழக்கு நடவடிக்கைகளின் போதும் சாட்சியங்களின் போதும் நீதிமன்றின் பெறுமதியான நேரத்தை மொழி பெயர்ப்புக்காக செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.
எனவே தமிழ் பேசுகின்ற மக்களை கொண்ட இறக்காமம் பிரதேசமானது தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் அல்லது இறக்காமம் பிரதேசத்திற்கான தனியான நீதிமன்றம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என நான் ஏற்கனவே கோரியுள்ளேன். இதன் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகள், பொலிஸ் விசாரணைகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளை தமிழ் மொழியில் நடத்துவதற்கு இலகுவாக அமையும் என்றும் அவர் மேலும் கூறினார். .
இதற்கு பதிலளித்த அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, இறக்காமம் பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கடிதங்களின் பிரதிகளை தமக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டதுடன், நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் தொடர்புகொண்டு இறக்காமம் பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்தார்.

## தெமட்டகொட பாஸா விலாவில் முஹர்ரம் நிகழ்வு





**(ஏ.எஸ்.எம். ஜாவித்)**

பொரல்லை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிய கல்வி நிறுவனமும் இணைந்து அதன் 40வது வருட நிறைவையும் இஸ்லாமிய ஹிஜ்ரி 1448 முஹர்ரம் புதுவருட நிகழ்வினையும் இன்று தெமட கொட எம்.ஐ.சி.எச்.பாஸா விலா மண்டபத்தில் அஹதிய்யா பாடசாலையின் நிறுவனரும் அதிபருமான சிப்லி ஹாசிம் தலைமையில் நடாத்தியது.
இதன்போது அஹதிய்யா பாடப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கலந்து கொண்ட அதிதிகளால் சான்றிதழ் கள், நினைவுப் பரிசில்கள், வழங்கி வைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கு இலவச சீருடைகளும் வழங்கப்பட்டது.
அத்துடன் தெரிவு செய்யப்பட்ட ஏழை மாணவர்களுக்கு பெறுமதி யான உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.
அஹதிய்யா பாடசாலையின் அதிபரின் வரவேற்புரையைத் தொடர்ந்து விசேட அதிதகளான தலாபிட்டிய அஹதிய்யாவின் தலைவர் பைஸல் அன்வர், இந்தியாவில் இருந்து வருகை தந்த பாடகர் ரஸ்மி ஷமி, சிரேஸ்ட ஊடகவியலாளர்களான அஹமத் முனவ்வர், ஏ.எஸ்.எம். ஜாவித், ருசைக் பாறுக் ஆகியோர் விசேட உரைகளை வழங்கினர்.
இந்தியாவைச் சேர்ந்த டொக்டர் செய்யது அஹமது மீரான்ஜி கௌரவ அதிதியாக கலந்து கொண்டிருந்தார் .
இதன்போது அஹதிய்யா மாணவர்களின் ஆங்கில, தமிழ், சிங்கள மொழிகளில் பேச்சுக்களுடன் இஸ்லாமிய கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.





பொலன்னறுவை திம்புலாகல திரிகோணமடுவ முஸ்லிம் வித்தியாலயத்தின் 65 ஆண்டு விழாவை முன்னிட்டு புதிதாகக் கட்டப்பட்ட வகுப்பறை கட்டிடம் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது. **(படம்:- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

## அனுராதபுரம் சாஹிராவில் சிறந்த பெறுபேறு

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )**

அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் கல்விப் பொதுத் தரா தர சாதாரண தரப் பரீட்சையில் ஏ.எம். மொஹமட் இக்ராம் என்ற மாணவன் சகல பாடங்களிலும் 9A சித்திகளைப் பெற்றுள்ளதாக அதிபர் ஜே.ஏ. ஆசாத் மொஹமட் தெரிவித்தார்.
இம்முறை நடைபெற்ற கல்விப் பொதுத் தரா தர சாதாரண தரப் பரீட்சைக்கு அனுராதபுரம் சாஹிரா வில் இருந்து தோற்றிய மாணவர்களில் 90.4 வீதமான மாணவர்கள் சித்தியடைந்து உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.
இதனடிப்படையில் எம்.என். மொஹமட் சாகீர் 8யுஊ , எஸ். எச்.ஏ.மொஹமட் றிஸ்வி 8AS , எம்.ஏ.மொஹமட் ஹூமைத் 7ABC , எம்.எஸ்.மொஹமட் சப்ரின் 6A 2B C , என் .அஸ்ஹா 5A3BC , எம்.ஜீ. பாத்திமா . சனாரா 5A 2B 2C , எம்.ஆர். மொஹமட் ருஷான் 4A 4B C, எம்.ஏ.அப்துர் றஹூமான் 4A4BC , எம்.என்.என்.மொஹமட் நபீல் 4A4BC, எம்.ஆர். எம்.றபீக் ஹஸ்பா 4A3B2C, எம்.ஜீ.அப்துல் றஹூமான் 4A2B3C ஆகியோர் சித்திகளைப் பெற்றுள்ளதுடன் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்கு தோன்றிய எஸ்.ஏ.பாத்திமா அஸ்மா 2A 2B 3C 2S , றபீக் ஆகிலா (AAQILA) 2B 5C 2S சித்திகளையும் பெற்றுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.
இம்முயற்சிகளுக்கு அயராது உழைத்த பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினர் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்து கொள்வதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

## மாணவர்களை நல்வழிப்படுத்த அறநெறிப் பாடசாலைகள் அவசியம்

**ஆங்கில சேவை முன்னாள் கட்டுப்பாட்டாளர் எம்.ஈச்.எம்.தாசிம்**



**(உக்குவள ஜலீல்)**

மாணவர்களை நல்வழிப்படுத்த அஹதிய்யா போன்ற அறநெறி பாடசாலைகள் அவசியமாகும்... என இலங்கை வானொலி ஆங்கில சேவை முன்னாள் கட்டுப்பாட்டாளர் எம்.எச்.எம். தாசிம் தெரிவித்தார்.
இலங்கை வானொலி முஸ்லிம் ஒலிபரப்பு சேவையின் ஏற்பாட்டில் மாத்தளை மற்றும் நுவர எளிய அஹதிய்யா பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையில் கண்டி அல்ஹம்ரா பாடசாலையில் நடாத்தப்பட்ட அறிவுப் பூங்கா வானொலி ஒலிப்பதிவு நிகழ்ச்சியின் போது அதன் பொருப்பாளரான அவர் அங்கு மேலும் தமது உரையில்.
அஹதிய்யா அறநெறி பாடசாலை முஸ்லிம்களுக்கு "அஹதிய்யா" எனவும் இந்துக்களுக்கு "அறநெறி" எனவும் பௌத்தர்களுக்கு "தஹம் பாசல" எனவும் கிறிஸ்த்தவர்களுக்கு "மறைக்கல்வி" எனவும் அரச கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்தில் தகுதியுள்ள ஆசிரியர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன.
இவற்றின் பாடதிட்டங்கள் முக்கியமும் பயன்மிக்கதுமாகும் அந்தவகையில் அஹதிய்யா பாடசாலைகள் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 8.00 மணி முதல் 12.00 மணிவரை அந்தந்த ஊர்களின் பாடசாலைகள் போன்ற பொருத்தமான இடங்களில் நடாத்தப்பட்டு வருகின்றன அவ்வப்போது அரச பரீட்சைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆண்டிறுதிப் பரீட்சை , இடை நிலைப் பரீட்சை , மற்றும் தர்மாச்சாரிய பரீட்சை என்பன நடாத்தப்பட்டு வருகின்றன இதில் தர்மாச்சாரிய பரீட்சையின் பெறுபேறுகள் பல்கலைகழக அனுமதியின்போதும் வேலை வாய்ப்புகளின்போதும் மேலதிக விசேட தகைமைகளாகக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.
எனவே அஹதிய்யா பாடசாலைகளின் முக்கியத்துவத்தை மாணவர்களும் பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் உணர்ந்து மாணவர்களை அஹதிய்யா கல்வி பெற ஊக்குவிக்கவேண்டும் இச்சந்தர்ப்பத்தில் அஹதிய்யா மாணவர்களது கல்வி நலன்கருதி எமது இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் ஏற்பாட்டில் "அறிவுப் பூங்கா" எனும் போட்டி நிகழ்ச்சி யையும் இப்பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையில் நடாத்தி அவர்களுக்கான வானொலி சான்றுகளுடன் ஊக்குவிப்புப் பரிசகளும் வழங்கி வருகிறோம் இதற்கு ஒத்துழைப்பு நல்கும் அனுசரனையாளர்களுக்கு நன்றி கூர கடமைப்பட்டுள்ளோம்.
இவ்வாறான நிலையில் பல இடங்களில் அஹதிய்யா பாடசாலைகள் இயங்காதுள்ளன மேலும் அன்றைய தினங்களில் தனியார் வகுப்புகள் நடத்தப்படுவதால் அவற்றுக்கு மாணவர்கள் செல்வதும் ஒரு காரணமாகும் எனவே தனியார் வகுப்புகள் நடத்துவோர் அன்றைய தினத்தை மாணவர்களது மத கல்வி நலன் கருதி அவர்களுக்கு அஹதிய்யா போன்ற அறநெறி பாடசாலைகளுக்கு செல்ல வாய்ப்பளிக்குமாறு வேண்டுவதுடன் இதுகுறித்தும் மாணவர்களை நல்வழிப்படுத்த அஹதிய்யாவின் அவசியம் குறித்தும் வணக்கஸ்த்தலங்களில் அறிவுரைகள் வழங்கலாம் சமூக ஆர்வலர்களும் அதற்கு உதவி புரியலாம் என்றார்.

# மலேஷியா சென்று தங்கப்பதக்கங்களுடன் திரும்பிய கஹட்டோவிட்ட முஅய்தாய் சம்பியன்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான வரவேற்பு

(எம். ஆர். லுதுபுள்ளாஹ்)

கஹட்டோவிட்ட அல் பத்ரியாவில் இருந்து மொஹம்மத் ஸாதாத் மற்றும் மொஹம்மத் நுஸைர் மாணவர்களும், சர்வதேச பாடசாலையில் கல்வி கற்கும் கஹட்டோவிட்டாவை சேர்ந்த மொஹம்மத் மிசாரி ஆகிய மூவரும் இம்முறை மலேஷியாவில் நடைபெற்ற முஅய்தாய் குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து சென்ற 42 வீரர்களுள் கஹட்டோவிட்டாவை பிரதிநிதித்துவம் செய்த இளம் வீரர்களாகும், இவர்களுடன் பயிற்றுவிப்பாளர் முழுத் இப்திகார் அவர்களும் இந்த போட்டிகளுக்கு மாணவர்களை வழிநடாத்துவதற்காக இலங்கை முஆய்தாய் சம்மேளனத்துடன் இணைந்து சென்றிருந்தார்.

கஹட்டோவிட்டாவில் இருந்து சென்ற மூன்று இளம் வீரர்களில் முஅய்தாய் குத்துச்சண்டை போட்டியில் மிகவும் திறமையாகவும், அபாரமாகவும்





போட்டியிட்டு பல நாடுகளை சேர்ந்த வீரர்களுடன் மோதி சம்பியனாகியதுடன் மொஹம்மத் ஸாதாத் மற்றும் மொஹம்மத் நுவைர் இப்போட்டியில் தங்கப் பதக்கங்களை வென்றதோடு மொஹம்மத் மிசாரி வைகுரு எனும் போட்டிகயில் பங்கு பற்றி வெண்கலப் பதக்கத்தை வெற்றி கொண்டு பாடசாலைக்கும், ஊருக்கும், நாட்டுக்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ளனர்.

இவர்களை வரவேற்கும் முகமாக கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகாவித்தியாலயம் மற்றும் கஹட்டோ விட்ட விளையாட்டு கழகங்களும், விளையாட்டு ஆர்வலர்களும், கஹட்டோவிட்ட ம்ரீடு கிரிக்கெட் சம்மேளனமும் பல் வேறு வகையிலும் இவர்கள் நாடு திரும்பும் தினமும் கடந்த 4ஃ7ஃ2026 சனிக்கிழமையும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த சனிக்கிழமை அதாவது நேற்றைய தினம் இவர்களை வரவேற்று, பாராட்டும் முகமாக வாகன பேரணி நிகழ்வு ஒன்றையும் கஹட்டோவிட்டாவின் விளையாட்டு ஆர்வலர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வாகன பேரணிகள் கஹட்டோவிட்ட அல் பத்தியா ம.வி முன்னால் ஆரம்பிக்கப் பட்டு, உனகஹதெனிய, நிட்டம்முவ, திஹாரிய, உடுகொடை, ஒகடபொளை, கஹட்டோவிட்ட பிரதான சந்திவரை வந்தடைந்தது.

இந்த வாகன பேரணியின் போது வெற்றி வாகை சூடிய மூன்று வீரர்களுக்கும், பயிற்றுவிப்பாளர் முழுத் இப்திகார் அவர்களுக்கும் மகத்தான பாராட்டுக்களை மக்கள் தெரிவித்தனர். மேலும் திஹாரியிலும், இவர்களை வாழ்த்தி பாராட்டு தெரிவிக்கும் நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றதோடு உடுகொடையிலும் ஜின்னா விளையாட்டு கழகத்தினர் நினைவுச்சின்னங்கள் வழங்கி வீரர்களையும் பயிற்றுவிப்பாளரையும் கௌரவித்தனர்.

இறுதியாக கஹட்டோவிட்டா பிரதான சந்திக்கு வாகன பேரணி வந்தடைந்ததுடன் அங்கிருந்து பாடசாலை அதிபர் கௌரவ எம் ஏ.எம் அஸ்மிர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், கஹட்டோவிட்ட 369 கிராம் சேவகர் திரு. பிரதீப் மற்றும் 369ஏ கிராம திருமதி சுஜானி கிராம சேவகர் உள்ளிட்ட மற்றும் பல முக்கியஸ்தர்களும் ஊர்ப்பொதுமக்களும், விளையாட்டு ஆர்வலர்களும், கழகங்களின் உறுப்பினர்களும், பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கஹட்டோவிட்ட பிரதான சந்தியில் இருந்து கிராம் சேவகர், பாடசாலை அதிபர் மற்றும் ம்ரிடு சம்மேளனம் சார்பில் சகோதரர் முபீன் போன்றவர் களால் மூன்று சம்பியன்களுக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் மலர்மாலை அணிவித்து பூங்கொத்து வழங்கி பாடசாலை பாண்ட் வாத்தியக்குழுவின் அணிவகுப்போடு பாடசாலை வரை அழைத்து வரப்பட்டனர்.

இதன் பின்னர் அல் பத்ரியா பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டு விழா நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.ஏ.எம் அஸ்மிர், கிராம சேவகர் பிரதீப், சகோதரர் கியாஸ், பயிற்றுவிப்பாளர் முஆத் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.

இதன்போது மூன்று சம்பியன்களுக்கான நினைவு சின்னங்களும், பரிசில்களும் பாடசாலை சார்பிலும் ம்ரீடு சார்பிலும் வெற்றி வீரர்களுக்கும், பயிற்றுவிப்பாள ருக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வின் பல்வேறு கண்டங்களின் போது பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்.

கஹட்டோவிட்டா எனும் கிராமம் கல்வித்துறையிலும், விளையாட்டு துறையிலும் பல்வேறு சாதனைகள கடந்த காலங்களிலும் அண்மைக் காலமாகவும் நிகழ்த்தி வருவதுடன் முஆய்தாய் எனும் குத்துச்சண்டை போட்டியிலும் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தங்கப்பதக்கங்களை வென்றெடுத்து சாதனைகளை நிலைநாட்டி வருவது பாடசாலைக்கும், ஊருக்கும், நாட்டுக்கும் பெருமை தேடித்தரும் அம்சமாகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

சர்வதேசத்தில் தங்கம் மற்றும், வெண்கலம் வெற்றி பெற்ற வீரர்களுக்கும், பயிற்று விப்பாளருக்கும் கஹட்டோவிட்ட வாழ் ஊர் மக்கள் சார்பிலும், பாடசாலை சார்பிலும், இலங்கை நாட்டு மக்கள் சார்பிலும், கஹட்டோவிட்ட நியுஸ் பேஜ் ஒபீஸியல் தளம் சார்பிலும், வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# கிழக்கு மாகாண சதுரங்கப் போட்டியில் கல்முனை ஸாஹிரா மீண்டும் சாதனை







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிண்ணியா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையிலான சதுரங்க சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான இரண்டு பிரிவுகளிலும் முதலாம் நிலையைப் பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு, கல்முனை ஸாஹிரா சாதனை வரலாற்றை மீண்டும் புதுப்பித்து, தடம் பதித்துள்ளது.

மேலும் நடைபெற்ற பேட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு தனியாள் டீழயசன ஊாயஅிழைெ ஆக கல்முனை ஸாஹிராக் கல்லூரின் 17வயதுக்கு உட்பட்ட அணியின் ஏ. அர்ஹம் பர்வீஸ் மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட எம். இஸட்.எம். சனீப், ஏ.எஸ்.ஏ. மிஜ்வாத், ஜே.எம். இஸ்ஸத் சஹ்மி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்று அகில இலங்கை போட்டிக்குத் தெரிவான மாணவர்களையும், இம் மாணவர்களை போட்டிக்காக பயிற்சியளித்து அழைத்துச் சென்ற பொறுப்பாசிரியர் எம்.வை.எம். றகீப், கல்லூரியின் சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ்.எல்.எம். சுஹ்தான் மற்றும் ஆசிரியர் எச்.எம். ஜெமீன் ஆகியோரை கல்லூரியின் முதல்வர் எம்.ஐ.ஜாபீர் (SLEAS) இணைப்பாடவிதானத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் எஸ். முபாரக், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர் கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு (SDEC) மற்றும் பழைய மாணவர்கள் (OBA), பாராட்டி வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

# 9 A சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழா - 2026

எமது MLSC (Muslim Ladies Study Circle) நிறுவனத்தின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, 9 யு சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு மற்றும் பரிசளிப்பு விழா – 2026 வெகு விரைவில் நடைபெற வுள்ளது.

எனவே, கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 9 யு சித்தி பெற்ற மாணவர்கள் மட்டுமே இந்நிகழ்விற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

கீழ்க்கண்ட ஆவணங்களை இணைத்து 15.08.2026 அன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**இணைக்க வேண்டிய ஆவணங்கள்:**

- சுயவிவரம் (Bio Data)
- பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதம் (School Principal's Letter)
- G.C.E. (O/L) பரீட்சை பெறுபேறு நகல் (Results Copy)

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

The President
Muslim Ladies Study Circle (MLSC)
No. 46/1,
Ogadapola Road,
Kahatowita.

இப்படிக்கு,
நிர்வாகம்

# கல்முனை சாஹிராவில் சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நடைபெற்று முடிந்த க.பொ.த சாதாரண தர 2025(2026) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் (9ஏ, 8ஏ, 7ஏ) பெற்ற 45 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் (SLEAS) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை (SDEC) செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், பாடசாலை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் (OBA) வைத்தியர் எம். கே. சனூஸ் காரியப்பர், றிஸ்வான், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சபை உறுப்பினர் ஆசிரியர் இர்ஸாத் கான், பிரதி- அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது வெளிவந்த 2025 (2026) க.பொ.த சாதாரண தர பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பெற்ற 45 மாணவர்கள், அவர்களின் பெற்றோர்க ளுடன் இணைந்து கௌரவிக்கப்பட்டனர்.





அந்தவகையில் (09 ஏ) சித்தி பெற்ற மாணவர்களான என். அப்துல்லாஹ் சப்கி, எம்.கே.எம். கனாஸ், ஏ.எம். ஆபிர் அஹ்ஸாப், ஐ.கே.எம். ஆகில் கான், என்.எம். அன்ஸிப், என்.எம். அக்ஸத், எம்.இஸட்.எம். ஸாபித், ஜே.எம். றஹ்பத் சரோஸ், எம்.ஏ.சிமாஸ் அஹமட், எஸ்.எம்.சாபித், எம்.ஆர்.எம். அஸால், ஜே.அப்தாப் அஹ்மட் மற்றும் (08 ஏ, பி) சித்தி பெற்ற மாணவர்களான எச். அப்துல்லாஹ், எம். டபிள்யூ, சஹ்தி அப்துல்லா, எஸ்.ஏ.எம். ஆபித், எம்.எஸ். அம்னி அஹமட், எம்.எப்.எம். றஸ்-தான் பாதில், எம்.என். அர்ஹப் ஹசன், ஏ.ஆர்.ஏ. ஆதில், எம்.ஏ.ஜே. அஹ்ஸப் றுஹைம், ஏ.எஸ். அஹ்மட் சஜாட், எம்.ஆர்.எம். மிர்பாக், என். அகிப், ஏ.எச் அஹ்மத் ஹாதீம், எம்.என்.எம். அபிபி ஹம்தான், எம்.ஜே. அக்கியாஸ் அஹமட், எம்.ஜே.அஹமட் அன்பாஸ், எம்.என். வப்ரி ஷகின், கே. தகி /ஹஸைன், ஏ.ஜீ.எம். றாபித் - (8ஏ, சீ), எம்.எப். உபைத்துல்லாஹ் - (8ஏ, சீ) மற்றும் (07ஏ, 2பி) சித்தி பெற்ற மாணவர்களான ஏ.ஏ.ஏ. இப்பத் அதீல், ஜே.எம். அஹ்வஜ் சப்கி, எம்.எப்.எம்.சஹ்ல் பிக்ரி, எம்.எம். நிமி அஷ்ரிம், என்.ஏ.சிமாம், எம்.ஜே.எம். மஹ்ருஸ், ஏ.சுமைல் சஹ்தி, எப்.எம். ஹமித் அம்ஹர் ஆகியோருடன் (07ஏ,பி,சீ) சித்தி பெற்ற மாணவர்களான ஏ.எம். ஸைப் தஹ்மி, எம்.எப்.எம். அல்சாத், எம்.எம். நுஸ்கி, எம்.இஸட். றிப்பத் அஹமட், எம்.எம். நஸாத், எம்.ஐ.எம். இமாட் - (7ஏ, பி, எஸ்) என மொத்தம் 45 மாணவர்கள் (9ஏ, 8ஏ, 7ஏ) சித்தி பெற்று தான் கற்ற பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

அதன்படி 9ஏ சித்தி பெற்ற 12 மாணவர்கள், 8ஏ சித்தி பெற்ற 19 மாணவர்கள், 7ஏ சித்தி பெற்ற 14 மாணவர்கள் உட்பட இப்பாடசாலையில் இருந்து இம்முறை 244 மாணவர்கள் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அது 83.6 சதவீதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த முன்னேற்றகரமான பெறுபேறுகளைப் பெற அயராது உழைத்த கல்லூரி முதல்வர் எம்.ஐ ஜாபிர் (SLEAS) தலைமையிலான கல்விசார் குழுவினரை பாடசாலை சமூகம் இணைந்து கௌரவித்து வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் 10வது 'முழுமதியில் ஒரு கலைக்கூடல்" நிகழ்வு





**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

ஓட்டமாவடி பிரதேச செயலகம் மாதாந்தோறும் நடாத்தும் 'முழுமதியில் ஒரு கலைக்கூடல்" பௌர்ணமி தின நிகழ்வு நேற்றிரவு (29/06/2026) திங்கட்கிழமை ஓட்டமாவடி பாலத்திற்கு அருகாமையில் உள்ள "ரிவர் பார்க்"கில் நடைபெற்றது.

இம்மாத நிகழ்வு மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா அரங்காக இடம்பெற்றதால் அவர் பற்றி பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்ததுடன், பிரதேச கலை மன்றங்களின் உறுப்பினர்கள், பிரதேச பாடசாலை மாணவர்களதும் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

"பிரதேசத்தின் மூத்த கல்விமான் ஏ.எம்.ஏ.காதர் எஸ்.எல்.எம்.ஹனீபா எனது மாணவன்" என்ற தலைப்பிலும், எழுத்தாளர் ஓட்டமாவடி அறபாத் "என்னை செதுக்கிய எஸ்.எல்.எம்" என்ற தலைப்பிலும் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஜமால்தீன் "எஸ்.எல்.எம்.ஹனிபாவுடைய சிறுகதைகள்" தொடர்பாகவும் ஓய்வுபெற்ற அதிபரும் எழுத்தாளருமான எச்.எம்.எம்.இஸ்மாயில் "எஸ்.எல்.எம்.ஹனீபாவின் எழுத்தும் அவரது ஆற்றலும்" தொடர்பாகவும் தனது கருத்துக்கள், நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் அவர்களினால் எஸ்.எல்.எம்.ஹனீபாவுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது.

எஸ்.எல்.எம்.ஹனீபாவின் ஏற்புரை இடம்பெற்றதோடு கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர்முஹம்மது காஸிமி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

தரிசு நிலமாகக்காணப்பட்ட இப்பிரதேசம் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் அவர்களின் வழிகாட்டல் மற்றும் நெறிப்படுத்தலில் பொதுமக்களின் பொழுதுபோக்கிற்கான தளமாக மாற்றும் நோக்கில் மாதாந்தம் முழுமதியில் ஒரு கலைக்கூடல் நிகழ்ச்சியை நடாத்தி பிரதேச மூத்த கலைஞர்களைக் கௌரவிப்பதுடன், இளம் கலைஞர்களுக்கு களமமைத்துக்கொடுக்கும் நோக்கில் இந்நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றமை பிரதேச மக்களின் நன்மதிப்பை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலாவியில் சமூக அபிவிருத்தியில் சிறுவர்களின் பங்களிப்பு எனும் விழிப்புணர்வு நிகழ்வு





**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் ஏற்பாட்டில் நாகவில்லு மற்றும் பாலாவி சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான சமூக அபிவிருத்தியில் ஆண் சிறுவர்களும் பெண் சிறுமிகளும் ஆற்றும் பங்களிப்பு என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்வுகள் இரு தினங்கள் இடம்பெற்றது.

பாலாவி முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் அலுவலகம் மற்றும் நாகவில்லு எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய இரு இடங்களில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வுகளின் வளவாளராக முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திருமதி ஜுவைரியா முஹைதீன் கலந்து கொண்டார்.

சமூக முன்னேற்றத்தில் ஆண் சிறுவர்களும் பெண் சிறுமிகளும் சமமாக பங்களிப்பதன் அவசியம், ஒத்துழைப்பு, சமூகப் பொறுப்புணர்வு, தலைமைத்துவம் மற்றும் நல்ல பண்புகள் குறித்து தெளிவூட்டப்பட்டதுடன்.

சிறுவர் கழக உறுப்பினர்கள் எவ்வாறு சமூகப் பொறுப்புணர்வை வளர்த்துக்கொள்வது, அத்தோடு பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும் எதிர்கால சமூகத் தலைவர்களாக உருவாகுவதற்கான ஆர்வத்தை தூண்டும் வகையிலும் இவ் விழிப்புணர்வு நிகழ்வு அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மதீனா வித்தியாலயத்தில் சிறுவர் சந்தை



**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

ஓட்டமாவடி கோட்டக்கல்வி அலுவலக பிரிவில் உள்ள கேணிநகர் மதீனா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் மூன்று மற்றும் தரம் நான்கு மாணவர்களுக்கான சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். றிஸ்மின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மடௌடக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் முகாமைத்துவப் பிரிவு கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே. மர்சூக் கலந்துகொண்டதுடன் விசேட அதிதிகளாக பாடசாலை இணைப்பாளர் எச்.எம். ஆதம் லெப்பை, உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.எம். சித்தீக், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஆலோசகர் எம்.பி.ரீ.கான், முகைதீன் அப்துல் காதர் வித்தியாலய அதிபர் எம்.யு.எம்.நளீம், மதீனா வித்தியாலய முன்னாள் அதிபர்களான ஏ.எல்.நெயினா முகம்மது, எம்.மீரா முகைதீன், ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஏ.சி. ஜிப்ரி கரீம், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை உறுப்பினர் என்.எம்.பாஹிர், தியாவட்டவான் பிரஜா சக்தி அமைப்பின் தலைவர் பீ.பௌருதீன், கோறளைப்பற்று மத்தி சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டு சபைத் தலைவர் எஸ்.ரீ.எம். பைறூஸ், சமூக செயற்பாட்டாளர் இக்பால் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆசிரியை எஸ்.எம்.எஸ்.சமீலாவுக்கு சேவை நலன் பாராட்டு விழா





**(எம்.யூ.எம்.சனூன்)**

புத்தளம் மணல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் கடந்த 15 ஆண்டுகளாக சேவையாற்றிய ஆசிரியை எஸ்.எம்.எஸ்.சமீலாவுக்கு மகத்தான சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வானது வியாழக்கிழமை (02) பாடசாலையின் அதிபர் பீ. ஜெனற்ராஜ் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியரின் சேவையை பாராட்டி "இதய முரசு" என்ற பெயரில் சஞ்சிகையொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இம்மலர் கற்பிட்டி நாவற்காடு றோ.க.த.வித்தியாலயத்தின் தற்போதைய அதிபர் ஏ.ஆர்.எம்.ஏ. வினோஜினி அவர்களினால் நூல் ஆய்வு செய்து தொகுப்புரை வழங்கப்பட்டது.

இதன்போது ஆசிரியை சமீலா பாடசாலை ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்தி, பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் பெற்றோர்களினாலும், மாணவர்களினாலும் பரிசில்களாலும், வாழ்த்துப்பாக்களினாலும் கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவில் பெற்றோர்கள் சார்பாகவும், மாணவர்கள் சார்பாகவும் வாழ்த்துரைகள், நடன நிகழ்ச்சிகள், நாட்டார் பாடல் போன்ற நிகழ்ச்சிகள் அலங்கரித்தன.

# அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் தேசியத்தில் முதலிடம்




**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

அதிபர் சேவை தடை தாண்டல் போட்டிப் பரீட்சையில் நிதி நிருவாகப் பாடத்தில் பிறைந்துரைச் சேனை சாதுலியா வித்தியாலய அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் தேசிய ரீதியாக முதலிடம் பெற்றுள்ளார்.

வெளியாகியுள்ள பரீட்சை பெறுபேறுகளின் படி அதிபர் எம்.எல்.நிஜாம்தீன் 71 புள்ளிகளைப் பெற்று தமிழ் மொழி மூலத்தில் தேசியத்தில் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும்

104



# செல்வந்தர்களுக்கு பரிசுகள், ஏழைகளுக்கு அறிவுரைகள்:

"மக்கள் செல்வந்தர்களை பரிசுகளுடன் சந்திக்கிறார்கள் ஆனால் ஏழைகளை அறிவுரைகளுடன் சந்திக்கிறார்கள்" என்ற இந்த பழமொழி மனிதர்களின் சமூக நடத்தை பற்றி ஆழமான ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. இது சொற்களில் எளிமையாக இருந்தாலும், இதன் பொருள் மிகவும் ஆழமானது.

"மக்கள் செல்வந்தர்களை பரிசுகளுடன் சந்திக்கிறார்கள்" என்ற முதல் பகுதி, செல்வமும் செல்வாக்கும் கொண்டவர்களை சமூகம் எவ்வாறு மதித்து அணுகுகிறது என்பதை காட்டுகிறது. ஏற்கனவே செல்வமும் அந்தஸ்தும் உடையவர்களுக்கு மக்கள் பரிசுகள், பாராட்டுகள், மரியாதைகள் ஆகியவற்றை வழங்குகிறார்கள். சில நேரங்களில் அது உண்மையான அன்பாக இருக்கலாம் ஆனால் பல நேரங்களில் அதற்குப் பின்னால் தனிநலன், சமூக ஆதாயம் அல்லது அதிகாரத்துடன் தொடர்பு கொள்ளும் விருப்பம் இருக்கும்.

"ஆனால் ஏழைகளை அறிவுரைகளுடன் சந்திக்கிறார்கள்" என்ற இரண்டாம் பகுதி இன்னும் வேதனையான உண்மையை வெளிப்படுத்துகிறது. வறுமையில் வாழ்பவர்களை சந்திக்கும் போது, அவர்களுக்கு நடைமுறை உதவி செய்வதற்குப் பதிலாக பலர் அறிவுரைகள் வழங்குகிறார்கள். "இன்னும் கடினமாக உழை," "பொறுமையாக இரு," "சரியான முடிவுகளை எடு" போன்ற வார்த்தைகள் கேட்க நன்றாக இருந்தாலும், அவை பசியை போக்காது, கடன்களை அடைக்காது, துன்பத்தை நீக்காது. அறிவுரை வழங்குவது எளிது, ஏனெனில் அதற்கு செலவு இல்லை ஆனால் உண்மையான உதவி.. தியாகம், தாராளம் மற்றும் உண்மையான அக்கறையை கொண்டதாக இருக்கிறது.

இந்தப் பழமொழி சமூகத்தில் காணப்படும் ஒரு வேதனையான உண்மையை சுட்டிக்காட்டுகிறது: ஏற்கனவே நிறைய பெற்றவர்களுக்கு மேலும் கொடுக்க சமூகம் தயங்காது ஆனால் தேவையில் இருப்பவர்களுக்கு பெரும்பாலும் வார்த்தைகளையே வழங்குகிறது.

ஆனால் இஸ்லாம் இதற்கு முற்றிலும் மாறான உயர்ந்த ஒரு பாதையை கற்பிக்கிறது. இஸ்லாம் ஏழைகளுக்கு அருகில் இருப்பதையும், தேவையுள்ளவர்களுக்கு உதவுவதையும், பலவீனமானவர்களை பாதுகாப்பதையும் வலியுறுத்துகிறது. இஸ்லாத்தில் செல்வம் உயர்வின் அடையாளமல்ல வறுமை தோல்வியின் அடையாளமுமல்ல.

ஒருவரின் மதிப்பு அவரது செல்வத்தில் அல்ல் அவரது இறை அச்சம், நற்குணம், மற்றும் அல்லாஹ்வின் மீதான உணர்வில் உள்ளது.

இஸ்லாம் ஏழைகளுக்கு அனுதாபம் கொள்வதை மட்டும் அல்ல, செயலில் உதவவும் கட்டளையிடுகிறது. ஸகாத் கட்டாயமான உதவியாகவும், ஸதகா விருப்பமான தர்மமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உண்மையான இரக்கம் வார்த்தைகளில் அல்ல, செயல்களில் வெளிப்பட வேண்டும் என்பதை இஸ்லாம் உணர்த்துகிறது.

நபிகளிரின் வாழ்க்கை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். அவர்கள் ஏழைகளுடன் அமர்ந்தார், அவர்களுடன் உணவருந்தினார், விதவைகள் மற்றும் அநாதைகளை கவனித்தார், சமூக நிலை பார்க்காமல் அனைவரையும் கண்ணியத்துடன் நடத்தினார். செல்வந்தர்களின் செல்வத்திற்காக அவர்கள் அருகில் செல்லவில்லை ஏழைகளை அவர்கள் ஒருபோதும் தாழ்வாகக் காணவில்லை.

இந்தப் பழமொழியையும் இஸ்லாமிய போதனைகளையும் ஒப்பிட்டு பார்க்கும்போது ஒரு ஆழமான பாடம் கிடைக்கிறது. பழமொழி சமூகம் எவ்வாறு நடக்கிறது என்பதைச் சொல்கிறது் இஸ்லாம் சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை கற்பிக்கிறது. செல்வந்தர்களுக்கு பரிசுகள் கொண்டு செல்வதற்குப் பதிலாகவும், ஏழைகளுக்கு வெறும் அறிவுரைகள் வழங்குவதற்குப் பதிலாகவும், எல்லோரையும் மரியாதையுடன் நடத்தி, தேவையுள்ளவர்களுக்கு உண்மையான உதவியை வழங்க வேண்டும்.

மனிதநேயத்தின் உண்மையான அளவுகோல் சக்திவாய்ந்தவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம் என்பதில் இல்லை பலவீனமானவர்களையும் தேவையுள்ளவர்களையும் நாம் எவ்வாறு அணுகுகிறோம் என்பதில்தான் உள்ளது. உண்மையான கருணை வெறும் வார்த்தைகளில் இல்லை அது இரக்கம், தாராளம் மற்றும் உதவி செய்யும் செயல்களில் வெளிப்படுகிறது...



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்




பயாஸா பாஸில்

# மனித வாழ்வியலில் ஏன் உளவியல் அவசியம்?

நாம் வாழுகின்ற வாழ்க்கைக் கோலத்தில் ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவையான நீர், உணவு,வசிக்க வீடு, உடமைகள் எவ்வளவு முக்கியமோ அதே போல உளவியலும் அவசியமே.

இன்றைய நவீன கால கட்டத்தில் உளவியலின் அவசியம் அதிகரித்துள்ளதை நாம் உணரலாம்.

அன்றைய காலகட்டத்தில் உளவியல் பிரச்சனைகள் குறைவாகவே காணப்பட்டது.

அதாவது அன்றைய காலத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை , இயற்கையான சுற்றுச் சூழல், ஆரோக்கியமான உணவுகள், கூட்டாக விளையாடும் விளையாட்டுக்கள், என அனைத்தும் ஒருங்கே கிடைத்ததால் உளவியல் பிரச்சனைகள் குறைவாகவே காணப்பட்டது.

உதாரணமாக ஒரு வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையை தாங்கிட, அரவணைத்திட பத்துக் கைகள் காத்துக்கிடக்கும். அன்பும்,பண்பும், பாசமும் ஒருங்கே சேர்த்து ஊட்டப்படும்.

குழந்தை பிறந்ததிலிருந்து தாய்க்கும்,சேய்க்கும் சேவைகளை அன்போடு செய்திட அனைவரும் கூடி நிற்பர்.

அதே போல தாய்க்கான ஊட்டச்சத்து உணவுகளும் நல்ல முறையிலே கிடைத்து விடும். இதனாலே உள்ளத்தில் அன்பும், புத்துணர்வும் நிறைந்து விடும்.உளவியல் பிரச்சனைகளும் அகன்று விடும்.

இதனாலே வீட்டில் உள்ள முதியவர்கள் நாங்க அப்போ பத்து புள்ளய பெத்து வளர்த்தோம். இப்போ ஒரு பிள்ளையை பெறறெடுக்க பல காரணங்களை கூறுகிறார்கள். உலகத்திலே இல்லாத, பொல்லாத நோய் வேறு என இன்றைய சமுதாய பெண்களை சொற்களால் காயப்படுத்துகின்றனர்.

மனித சனத்தொகை பெருக்கெடுக்க, காலமும் நேரமும் சுருங்கச் சுருங்க உலகமும் நவீன மயமாக்கலோடு பயணிக்க அனைத்திலுமே மாற்றங்கள் என்றால் அன்றைய கால மக்களுக்கு புரியவைக்க முடியாது அதனால் இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரையில் நிச்சயமாக உளவியலின் தேவை பெருகி வருகிறது.

இன்றைய உலகிலே அடுக்கிடுக்குமாடிகள் அடுக்கிக்கொண்டே செல்கின்றன.

இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

இயற்கை உணவுகள் அழிந்து செல்கின்றன, நாம் மூச்சு விடும் காற்றும் கழிவுகளாக மாறி வருகின்றன.

பசுமையில்லாத உலகிலே எங்கே சுதந்திரக்காற்று கிடைத்து விடும். நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப் படும் கழிவுகளால் நீர் நிலைகளும் மாசடைந்து, வளியும் மாசடைந்து செயற்கை உலகிலே இன்றைய சமூகம் தத்தளிக்கிறது.

இன்றைய அடுக்கு மாடிகளில் நாம் இருவர் நமக்கிருவர் என வாழ்ந்து வருகின்றனர்.இவ்வாறு வாழ்ந்து வருகின்ற குடும்பங்களிலே ஆணும், பெண்ணும் இருவருமே வேலைக்குச் செல்கின்றனர்.

இன்றைய உலகிலே செலவுகள் அதிகம் இதனாலே இருவரும் வேலைக்குச் செல்கின்றனர்.

வீட்டு வேலைகள் செய்ய உதவிக்கு யாரும் இல்லாமை, வீட்டு வேலைக்கு ஆட்கள் எடுத்தாலும் அவர்களுக்கான சம்பளம் வழங்கும் போது அதுவும் மனதைப் பாதிக்கிறது.

குழந்தைகளை அவர்கள் பராமரித்தாலும் சம்பளத்திற்காக பராமரிக்கிறார்களோ அன்றி அன்பும் பண்பும் பகிரப்படாது வளர்க்கப்படுகின்றனர். இதனால் பிஞ்சு மனங்களை அன்பால் அரவணைக்காது வளர்க்கப்படுவதால் தாய் தந்தையரின் அன்பும் குறைவாகக் கிடைப்பதால் அவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கின்றனர்.

அது மட்டுமல்லாது இன்றைய நவீன கைப்பேசி கைக்கு அடக்கமாக இருந்தாலும் முழு உலகையையே அடக்கி வைத்துள்ள ஒரு தொல்லை பேசி

இதற்கு குழந்தைகள் அடிமையாவதால் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக மாறுகிறது.

சிறு வயது தற்கொலைகளும் இதனாலே ஏற்படுகிறது.

அன்றைய காலகட்டத்தில் வயதுமுதிர்ந்தவர்கள் தாம் உளவியல் பிரச்சினைகளுக்கு ஆளாகினர். இன்றைய நவீன யுகமோ கருவிலே பல பிரச்சினைகளை சந்திக்கின்றது. என்பதே உண்மை.

கருவறையில் இருக்கும் போதே குழந்தைகளுக்கு அனைத்தும் கேட்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

தாயும் தந்தையும் தனித்திருக்க குழந்தையும் கருவிலே தனிமையை உணர்கிறது.

அடுத்து உண்ணும் உணவுகள் செயற்கை உரங்கள் இடப்பட்ட உணவுகள் இதனாலே பிறக்கும் முன்பே பல நோய்கள் தாய்க்கும், சேய்க்கும் ஏற்படுகின்றது.

பெற்ற பின்னும் தாயையும் சேயையும் அன்பால் அரவணைத்திட யாரும் இல்லை.

இதனாலே மனதளவில் பாதிக்கப்படுகின்றார்கள்.

அதே போல இன்றைய ஆண்களும், பெண்களும் சரிக்குச் சமமாக கைப்பேசியோடு காலத்தை ஓட்டுகின்றனர்.

இந்த கைப்பேசி ஒருவரை எந்த வேலையும் செய்ய விடாது பசியையும் போக்கும் ஒரு வகை உணவே



இதன் பாதிப்பு மனித சமூகத்தை அழிவிற்கே கொண்டு செல்கிறது.

இன்றைய காதி நீதிமன்றங்களில் விவாகரத்திற்காக பலரும் காத்து நிற்கின்றனர்.

அதாவது அங்கு எடுத்து வைக்கப்படும் காரணிகளாவன என் கணவன் அதிக நேரம் கைப்பேசியிலே செலவிடுகிறார், நான் பேசுவதைக்கேட்க மாட்டார் ,என்னுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க மாட்டார், நான் தனியாகவே அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும், இவர் சிறு உதவிகளையும் செய்ய மாட்டார், நான் இவரின் அன்புக்காக ஏங்கி ஏங்கி ஏமாற்றம் அடைந்து விட்டேன், என கண்ணீர் சிந்தும் பெண்கள் இன்றைய சமூகத்தில் நிறையப் பேர் இருக்கின்றனர்.

அதே போல ஆண்களும் தங்கள் மனைவி அனைத்தையும் புரிந்து நடக்கமாட்டார். சிறு பிள்ளைகள் போல் அவர்களும் அனைத்திற்கும் கோபப்படுவார்கள், அவர்களும் கைப்பேசியிலே காலத்தைக் கழிக்கின்றனர். என அவர்களும் குற்றம் சாட்டுகின்றனர்.

இவைகளுக்கான தீர்வாக ஆணும், பெண்ணும் நிச்சயமாக உளவியல் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கையை அழகான முறையிலே நகர்த்த உளவியலின் அவசியம் கட்டாயமாகிறது.

அதே போல இன்றைய காலகட்டத்தில் தொடர்ச்சியாக அனைவரது உடல் ஆரோக்கியமும் குன்றியே காணப்படுகிறது.

பிறக்கின்ற குழந்தை முதல் வயோதிபர் கள் வரை அனைவருக்கும் கொடிய நோய்கள் நாளும் பார்த்துக்கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறோம்.

இதற்கான நிவாரணத்திற்காக பல லட்சங்கள் தேவைப்படுகின்றன.

இதனை திரட்டிட பலரும் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் .

இதனாலே பலரும் மனதளவில் பாதிக்கின்றனர்.

அதே போல இன்று பலருக்கும் வைத்தியசாலை தாய் வீடு போல ஆகிவிட்டது. வேண்டா வெறுப்போடும் காட்டாயமான ஒரு சூழலிலே வைத்தியசாலையிலே தங்க வேண்டிய பரிதாப நிலை அன்றைய காலத்தில் குழந்தைப்பேறு கூட வீடுகளிலே தான் ஆனால் இன்று அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டது.

என்பதே உண்மைஇதற்கான தீர்வாக கூட்டுக் குடும்பங்கள் இல்லாவிடினும் தாய், தந்தையர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். மனைவியின் கருமங்களில் கணவனும் பங்கெடுக்க வேண்டும். ஒருவருக்கு உதவியாக மற்றவர் செயல்பட வேண்டும்.

உணர்வுகளுக்கு மதிப்பளித்து அன்பால் அரவணைக்க வேண்டும்.

எனக்கு கஷ்டங்கள் வரும் போது என்னுடன் என் கணவன் இருக்கிறான். என்ற உணர்வு அவர்களுக்குள் வர வேண்டும்.

இதே போல மனைவியும் சிக்கனத்தை கடைபிடித்து கணவனின் தொழிலை சரியான முறையில் செய்திட மனைவியும் ஊன்றுகோலாய் நிற்க வேண்டும்.

பிரச்சினைகள் வரும் போது இருவரும் பங்கெடுத்து அதனைத் தீர்க்க வேண்டும்.

குழந்தைகளுடன் நாமும் சேர்ந்து விளையாட வேண்டும்.

அவர்களுக்கான தாய்ப்பாலையும் , தாய்ப் பாசத்தையும் சேர்த்தே ஊட்ட வேண்டும். ஓய்வு நேரங்களில் கைப்பேசிகளைக் கொடுக்காது அவர்களுடன் நேரத்தைக் கடத்த வேண்டும். நாமும் அவர்களோடு சேர்ந்து விளையாட வேண்டும்.

குழந்தைகளின் மனதிலும் என் பெற்றோர்கள் என்னுடன் இருக்கின்றார்கள்.

என அவர்களின் மனதிலும் நாம் இடம் பிடிக்க வேண்டும்.

இவ்வாறு குழந்தைகளோடு நாமும் செல்வதால் அவர்களும் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

இதனால் உள்ளம் சீராகி மன நலமும் ஆரோக்கியம் பெற்று விடும்.

அதே போல ஆரோக்கியமான உணவுகளை வீட்டிலே நட்டு உண்டால் மிகவும் சிறப்பாக அமையும்.

சோம்பல் நீக்கி நாளும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல், யோகா செய்தல், குடும்பத்தோடு பூங்காக்களுக்குச் செல்லல்.

அதிக நேரம் குடும்ப உறுப்பினர்களோடு கதைத்தல், அன்பைப் பரிமாறிக் கொள்ளல்.

இவை அனைத்தும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும்.

அதே போல இன்றைய காலகட்டத்தையும், அன்றைய காலகட்டத்தையும் முடியுமான அளவு குடும்ப உறவுகளுக்கு எடுத்துக்காட்டி அதற்கான விளக்கங்களைக் கொடுத்தால் சொற்களால் காயப்படுத்தும் உறவுகள் இதனை புரிந்து கொண்டால் உளவியல் ரீதியான பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

தற்காலத்தில் அனைவருக்கும் இதற்கான விளக்கங்கள் அவசியமாகிறது.

அதே போல பரிகாசம் செய்வதையும் இக் காலகட்டத்தில் நிறுத்த வேண்டும்.

அதைத் தாங்கும் சக்தி கூட இன்றைய சமூகத்திலே இல்லை.

இதனால் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன.

மனிதசமுதாயத்திலே வாழ்வியலில் உளவியலின் அவசியம் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நிஷரூபணமாகிறது.

உளவியலோடு நாமும் வாழ்வை சீராக்குவோம்.

எச்.டீ.எச் பஹ்தா
கொழும்பு



அரபாத் பஹுர்தீன்



# இங்கிலாந்தை வீழ்த்தி
## 7ஆவது மகளிர் ரி20 உலகக் கிண்ணத்தை
# தனதாக்கியது அவுஸ்திரேலியா

10ஆவது மகளிர் உலகக் கிண்ண ரி20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி 7ஆவது முறையாகவும் ரி20 உலகக்கிண்ணத்தை முத்தமிட்டது அசத்தியது.
லண்டன் லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விறு விறுப்பான 2026 ஐசிசி மகளிர் ரி20 உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.
சொந்த மண்ணில் விளையாடிய இங்கிலாந்து அணிக்கு அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் ஆரம்பத்திலேயே கடும் நெருக்கடி கொடுத்தனர்.
இங்கிலாந்தின் தொடக்க வீராங்கனைகள் இருவரையும் பவர்பிளே முடிவதற்குள்ளேயே அவுஸ்திரேலியா வீழ்த்தியது.
காயத்தில் இருந்து மீண்டு வந்து விளையாடிய இங்கிலாந்து கேப்டன் நாட் ஸ்கிவர்-பிரண்ட் அதிரடியாக விளையாடி 58 ஓட்டங்களையும், இறுதி ஓவர்களில் ஃபிரேயா கெம்ப் 44 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.
அவுஸ்திரேலிய தரப்பில் கிம் கார்த், லூசி ஹாமில்டன், அன்னாபெல் சதர்லேண்ட் மற்றும் சோஃபி மோலினக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.
பின்னர் 151 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு, மகளிர் ரி20 உலகக் கிண்ண இறுதிப்போட்டி வரலாற்றிலேயே மிகப்பெரிய ரன் சேஸை பதிவு செய்யும் அரிய வாய்ப்பு கிடைத்தது.
தொடக்க வீராங்கனையான ஜார்ஜியா வோல் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்தாலும், நட்சத்திர வீராங்கனை பெத் மூனி மற்றும் ஃபோப் லிட்ச்பீல்ட் ஜோடி இங்கிலாந்து பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தது. இருவரும் இணைந்து 2-வது விக்கெட்டுக்கு 100 ஓட்ட இணைப்பாட்டத்தை அமைத்து வெற்றியை எளிதாக்கினர்.
லிட்ச்பீல்ட் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.
இறுதிவரை களத்தில் நின்ற பெத் மூனி 49 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 64 ஓட்டங்களைக் குவிக்க 17.1 ஓவர்களிலேயே அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 153 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. இதன் மூலம் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 7ஆவது முறையாகவும் மகளிர் ரி20 உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டது.
இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவை சம்பியனாக்கிய பெத் மூனி, ஆட்டநாயகி மற்றும் இந்தத் தொடரின் தொடர் நாயகி ஆகிய இரு விருதுகளையும் தட்டிச் சென்றார்.
இந்தத் தொடரில் அவர் விளையாடிய 7 போட்டிகளில் 238 ஓட்டங்களை குவித்து அவுஸ்திரேலியாவின் தூணாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

# தோல்வியின் எதிரொலி
## சர்வதேச கால்பந்தாட்டத்திற்கு
# விடை கொடுத்தார்




உலகப் புகழ்பெற்ற பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் சர்வதேச கால்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அதிரடியாக அறிவித்துள்ளார்.
தற்போது நடைபெற்று வரும் 2026 பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரின் ரவுண்ட் ஆஃப் 16 சுற்றில், பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களம் கண்ட பிரேசில் அணி, நோர்வே அணியிடம் 2:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வி அடைந்து தொடரை விட்டு வெளியேறியது.
இந்தத் தோல்வியைத் தொடர்ந்து, பெரும் ஏமாற்றமடைந்த நெய்மர் தனது சர்வதேச கால்பந்து வாழ்க்கைக்கான ஓய்வு முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.
அத்துடன் நோர்வேக்கு எதிரான போட்டியில் நெய்மர் பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றியிருந்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.
மேலும் உலகெங்கிலும் உள்ள நெய்மரின் கோடிக்கணக்கான ரசிகர்களுக்கு நெய்மரின் அதிரடியான ஓய்வுச் செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஃபார்முலா 3 இல் வரலாறு படைத்த இலங்கையின் யெவான் டேவிட்



பிரித்தானியாவின் சில்வர்ஸ்டோனில் நடைபெறும் ஃபார்முலா 3 கார் பந்தயத் தொடரின் ஸ்பிரிண்ட் சுற்றில் இரண்டாம் இடத்தைப் பிடித்து யெவான் டேவிட் கடந்த 4ஆம் திகதி இந்த சாதனை படைத்துள்ளார்.
இதற்கமைய, ஃபார்முலா 3 சுற்றொன்றில் இவ்வாறானதொரு சாதனையை நிலைநாட்டிய முதல் இலங்கை வீரராக அவர் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

# பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவராக மீண்டும் பாபர் அசாம்




பாகிஸ்தான் ஆண்கள் தேசிய தேர்வு குழு லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து சுற்றுப்பயணங்களுக்கான டெஸ்ட் தொடருக்கான அதிகாரப்பூர்வ அணியை அறிவித்துள்ளது. இந்த இரண்டு தொடர் களுக்கும் பாகிஸ்தான் அணியின் தலைவராக நட்சத்திர துடுப்பாட்ட வீரர் பாபர் அசாம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவராக இதுவரையில் இடதுகை முன்வரிசைச் துடுப்பாட்ட வீரரான ஷான் மசூத் செயற்பட்டு வந்த நிலையில் இறுதியாக பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி மிக மோசமாக தோற்றிருக்க தொடர் முடிந்த நிலையில் ஷான் மசூத் அணித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.
அதற்கமைய பாகிஸ்தான் அணி அடுத்த இரு டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்நிலையில் புதிதாக அணித்தலைவர் மற்றும் அணி விபரம் கடந்த சனிக்கிழமை அறிவிக்கப் பட்டிருக்க புதிய அணியின் தலைவராக மீண்டும் பாபர் அசாம் நியமிக்கப்பட்டுள்ளார்.
மேலும் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் அலி உஸ்மான், வலதுகை பேட்டர் முகமது அவாய்ஸ் ஜாபர், வலதுகை வேகப்பந்து வீச்சாளர் உபெய்ட் ஷா மற்றும் விக்கெட் கீப்பர் பேட்டர் முகமது காஜி கோரி ஆகிய நான்கு சர்வதேச போட்டிகளில் விளையாடாத புதிய வீரர்களுக்கு இந்த அணியில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.
மேலும் வெஸ்ட் இண்டீஸ் தொடர்:
ஜுலை 25 முதல் ஆகஸ்ட் 6 வரை
(2 டெஸ்ட் போட்டிகள்).
இங்கிலாந்து தொடர்:
ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 13 வரை
(3 டெஸ்ட் போட்டிகள்).

**அறிவிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் டெஸ்ட் அணி**

* பாபர் அசாம் (அணித்தலைவர்)
* சான் மசூத்
* இமாம் உல் ஹக்
* அப்துல்லா ஃபசல்
* அவாய்ஸ் ஜாபர்
* சவுத் ஷகீல்- இங்கிலாந்து தொடருக்கு மட்டும், உடற்தகுதிக்கு உட்பட்டது)
* ஆசான் அவாய்ஸ்
* முகமது ரிஸ்வான்
* காஜி கோரி (வி.கீ)
* ஆகா சல்மான்
* ஆமிர் ஜமால்
* அலி உஸ்மான்
* சஜித் கான்
* முகமது அலி
* முகமது அப்பாஸ்
* உபெய்ட் ஷா
* குர்ரம் ஷாசாத்

## உலகக் கிண்ண கால்பந்து தொடர் நோர்வேயிடன்
# தோற்று வெளியேறியது பிரேசில்





உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 16 அணிகளுக்கான சுற்றில் ஐந்து முறை உலக சம்பியனான பிரேசில் அணியை 2:1 என்ற கோல்கள் கணக்கில் நோர்வே அணி வெற்றி கொள்ள சம்பியன் கனவு கலைந்து தொடரை விட்டு வெளியேறியது பிரேசில் அணி.
ஏலகக் கிண்ண கால்பந்து தொடரின் பரபரப்புக்குப் பஞ்சமில்லாத சுப்பர் 16 போட்டிகளில் நேற்றைய தினம் இடம்பெற்ற பரபரப்பான போட்டியில் நோர்வே அணி முன்னாள் உலக சம்பியனான பிரேசில் அணியை எதிர்கொண்டது.
விறுவிறுப்பிற்குப் பஞ்சமின்றி ஆரம்பித்த போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இதனால் போட்டியின் முதல் பாதியில் பிரேசில் அணிக்கு ஒரு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. அதனை பொறுப்பேற்ற புருனோ குய்மரஸ் பந்தை அடிக்க அந்த பந்தை நோர்வே கோல் காப்பாளர் நைலண்ட் மிக சாதுரியமாக தடுத்து நிறுத்தினார். இதனால் பிரேசிலின் கோலுக்கான வாய்ப்பு கைநலுவிப் போக முதல் பாதி ஆட்டம் எந்த வித கோல்களும் இன்றி சமநிலையில் முடிந்தது.
பின்னர் இடம்பெற்ற தீர்மானமிக்க இரண்டாம் பாதியில் அதிரடி காட்டிய நோர்வே அணியின் நட்சத்திர முன்கள வீரர எர்லிங் ஹோலண்ட், போட்டியின் 78ஆவது மற்றும் 89ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு உலகத்தரம் வாய்ந்த கோல்களை அடிக்க நோர்வே அணி 2:0 என்ற கோல்களால் முன்னிலை பெற்றது.
பின்னர் ஆட்டத்தின் கூடுதல் நேரத்தில் (90,9' நிமிடத்தில்) பிரேசிலுக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை நட்சத்திர வீரரான நெய்மர் கோலாக மாற்றினார். இதனால் ஆட்டம் 2:1 என மிகச் சவாலாக மாற மேலதீக நேரங்களில் கோல் போடப்படாமல் போக தீர்மானமிக்க போட்டியில் முன்னாள் சம்பியனான பிரேசில் அணியை 2:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து காலிறுதிக்கு நோர்வே அணி முன்னேற, சம்பியன் கனவு கலைந்து போக உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறியது பிரேசில் அணி.
மேலும் கால்பந்து வரலாற்றில் பிரேசில் அணி இதுவரை நோர்வே அணியை வீழ்த்தியதே இல்லை என்ற விசித்திரமான சாதனை இந்த போட்டியின் மூலமும் தொடர்கிறது. அத்துடன் இரண்டு அணிகளும் மோதிய 5 போட்டிகளில் நோர்வே 3 முறையும், 2 போட்டிகள் சம நிலையிலும் முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.